
# சமகால மேற்காசிய அரசியல் ஒருபார்வை




செல்வி. லக்ஷனா பாலகுமாரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் பொது நூலகம்
நல்லூர் பிரதேச சபை
36

வாசிப்பு மாதம் 2019ம் ஆண்டு
அன்பளிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L 17148

கொக்குவில் பொது நூலகம்
நல்லூர் பிரதேசசபை

# சமகால மேற்காசிய அரசியல் ஒரு பார்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் பொது நூலகம்
நல்லூர் பிரதேசசபை

**சமர்ப்பணம் .....**

தம்முள் என்னைச் சுமந்து
வையத்துள் வாழ்வாங்கு வாழ வைத்தை
என் பெற்றோர்க்கு இந்நூல்
சமர்ப்பணம்........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால மேற்காசிய அரசியல்
# ஒரு பார்வை

லக்ஷனா பாலகுமாரன்

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | :- | சமகால மேற்காசிய அரசியல் : ஒரு பார்வை |
| விடயம் | :- | அரசியல் |
| ஆசிரியர் | :- | செல்வி. லக்ஷனா.பாலகுமாரன் |
| பதிப்புரிமை | :- | ஆசிரியருக்கு |
| முகவரி | :- | நீர்வேலி தெற்கு, நீர்வேலி |
| முதல் பதிப்பு | :- | 2018 |
| அச்சுப்பதிப்பு | :- | மதிகலர்ஸ், நல்லூர், யாழ்ப்பாணம். |
| பக்கம் | :- | xii + 121 |
| விலை | :- | 400/- |
| ISBN | :- | 978 - 624 - 95091 - 0 - 8 |

| | | |
|---|---|---|
| Title | :- | Samakala Merkashiya Arasyal : Oru Parvai |
| Subject | :- | Poltical Science |
| Author | :- | Miss.Luxsana.Balakumaran |
| Copyright | :- | Author |
| Address | :- | Neervely South, Neervely. |
| First Edition | :- | 2018 |
| Printers | :- | Mathi Colours, Nallur, Jaffna. |
| Pages | :- | xii + 121 |
| Price | :- | 400/- |
| ISBN | :- | 978 - 624 - 95091 - 0 - 8 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHINMAYA MISSION OF SRI LANKA
(Incorporated by Act No. 25 of 1991 of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
CHINMAYA PRAGATI, NO.32, 10TH LANE, OFF SCHOFIELD PLACE, COLOMBO 03, SRI LANKA. TEL : +94 11 259 1344
web: www.chinmayasrilanka.org email: info@chinmayalanka.org

சின்மயாமிஷன்
இல 9,செட்டித்தெருஒழுங்கை,
நல்லூார்.
14.12.2018

ஆசிச் செய்தி

மனிதவாழ்வின் ஒருமுக்கிய அங்கமாக அரசியல் திகழ்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. அரசாங்கத்தினை கொண்டு ஒவ்வொரு நாடுகளும் கட்டமைக்கப்பட்டு, ஆட்சி செய்யப்படுகின்றன. உலகத்தில் இருக்கின்ற நாடுகளுடைய அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் ஏனைய நாடுகளுடைய அரசாங்கங்கத்துடன் நல்லுறவினை பேணுவதுடன் ஒற்றுமையாக ஒர் அணியாக திகழ்வது என்பது மனித சமூதாயத்தினுடைய ஒட்டு மொத்த வெற்றிக்கும் வளர்ச்சி பாதைக்கும் வித்திடுகின்றது இதன் அடிப்படையில் சமகால அரசியலை ஆய்வு செய்வது, அரசியல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவது, நல்லதொரு பண்பாடான அரசியல் கலாசாரத்தை உருவாக்கு வது என்பது மிகவும் ஒரு அவசியமான அவசரமான தேவையாக இருக்கிறது. இந்ததொரு பின்னிணியலேயே ஈழத்தில் இருந்துகொண்டு "சமகால மேற்காசியா அரசியல் – ஒருபார்வை" எனும் நூலை செல்வி லக்ஷனா பாலகுமாரன் அவர்கள் தன்னுடைய சர்வதேச அரசியல் கட்டுரைகளை தொகுத்து, இந்நூலை வெளிக்கொண்டு வருவது மிக்கமகிழ்ச்சிக்குரிய விடயமாகும். ஈழத்து அரசியலிலும் சர்வதேச நாடுகளுடைய ஆதிக்கம் கடந்த சகாப்தங்களில் செல்வாக்கு பெற்று வருவதை அவதானிக்கலாம். அந்த அடிப்படையில் மேற்காசியா அரசியலையும் ஈழத்து தமிழர்கள் அறிந்து கொள்வது அவசியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண பல்கலைகழகத்திலே அரசறவியல் துறையிலே பட்டப்படிப்பை நிறைவு செய்து இருக்கின்ற செல்வி லக்ஷனா.பா அவர்கள் தன்னுடைய திறமையை வெளிக்கொண்டு வருகின்ற இளம் அரசியல் எழுத்தாளர். அவருடைய ஆர்வம், ஆற்றல், திறமைகள் மேலொங்கவும் அவருடைய இந்த அரசியல் அறிவும் அரசியல் விஞ்ஞானத்தை அனைவருக்கும் எடுத்து சொல்கின்ற பணியும் வளர்ச்சியடைய வேண்டும். அவர் எமது சின்மயாமிஷனுடைய இளைஞர் பிரிவாகிய சின்மய யுவகேந்திராவினுடைய நீண்டகால ஒரு உறுப்பினர். சின்மய யுவகேந்திராவினுடைய யாழ்ப்பாண இணைப்பாளராக இருந்து பணிகளை ஆற்றியிருக்க கூடியவர். இப்படி பல திறமைகளை கொண்டிருக்க கூடிய செல்வி.லக்ஷனா அவர்களுடைய முயற்சி சிறப்பாக அமையவும் வெற்றி பெறவும் அவருடைய கல்வி, தொழில் சார்ந்த வாழ்வு மேம்படவும் இன்னும் பல நூல்களை ஆக்கி நல்லதொரு சிந்தனையுடன் கூடிய அரசியல் கலாசாரத்தை ஈழத்திலே உருவாக்குவதற்கு ஒரு இளம் எழுத்தாளர் என்கின்ற அடிப்படையில் அவருடைய பணிகள் தொடரவும் இந்நூல் சிறப்பாக வெளிவரவும் எல்லாம் வல்ல நல்லைகந்த பெருமானையும் பூஜ்ய குருதேவரையும் ஆசிவேண்டி பிராத்திக்கின்றோம்.

இறை பணியில்,

சுவாமி சிதாகாசானந்தா

சின்மயா மிஷன்

021 222 3447/ 077 857 3447

Resident Acharyas : Br.Darshan Chaitanya, Br.Jagorat Chaitanya, Brni. Mahima Chaitanya, Br.Karthik Chaitanya, Br.Shivendra Chaitanya & Brni. Thiviyavathani.
Committee : Mr.S.Mohanthiran(President), Mr.S.Balasubramaniam(Vice President), Mr.Lasantha S Salgado(Secretary), Mr. Shanker Somasunderam(Treasurer), Mr.T.Someswaran, Mr.P.Vimalendran, Mrs.M.Mody, Mrs.S.Duraiswamy, Mr.C.Rajadurai, Mr.S.Rajendran, Mr.K.Nadesan, Mr.T.Parthiban, Mr.K.Ketheeswaran, Ms.Sumathy Subramaniam, Mr.S.Arun Jeyaprakash, Mr.K.Prabakaran, Ms.Rala Amirthalingam, Mr.S.Aththan & Mr.S.Kalaselvam.

Chinmaya Kovil : Wevandon Hills, Ramboda. T: +94 52 226 9645
Chinmaya Gnanavel : No.09, Chetty Street Lane, Nallur, Jaffna. T: +94 21 222 3447, E: info@chinmayamissionjaffna.org, W: www.chinmayamissionjaffna.org
Chinmaya Dakshinakailash : No.56/1,Green Road, Trincomalee. T: +94 26 222 5642, E: trinco@chinmayalanka.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய மாணவி செல்வி. பா. லக்ஷனா அவர்கள் தனது ஆக்க மலர்ச்சி வெளிப்பாடாக "சமகால மேற்காசியா அரசியல் - ஒரு பார்வை" என்ற நூலை உருவாக்கியிருப்பது மகிழ்ச்சியும் பெருமையும் தரும் விடயமாகும். அவர் என்னிடம் க.பொ.த உயர்தரத்தில் அரசியல் விஞ்ஞானத்தை ஒரு பாடமாக கற்றவர். அவர் உயர்தரத்தில் கல்வி கற்கும் காலத்திலேயே அரசியல் சார் கட்டுரைகளை எழுதுவதில் அதிக ஆர்வத் தினை வெளிப்படுத்தி வந்தவர். அவரிடம் காணப்பட்ட இந்த சிந்தனை இன்று உலக அரசியல் பார்வை மிக்க ஒரு சிந்தனையாளராக வளர்த் திருப்பது பெருமை தருவதாக அமைந்துள்ளது.

அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத் தினை சிறப்புப் பாடமாகக் கற்று சிறப்புப் பட்டத்தினை பெற்றதோடு ஒரு வருடகாலம் அங்கு அரசியல் விஞ்ஞானத்தை கற்கும் மாணவர்களுக்கான செயல் விளக்கமளிப்பவரா கவும், உதவி விரிவுரையாளராகவும் பணியாற்றி யுள்ளார். யாழ். பல்கலைக்கழக அரசியல்துறைத் தலைவரும், சிரேஷ்ர விரி வுரையாளரும் அரசியல் ஆய்வாளருமான மதிப்புக்குரிய கலாநிதி கே.ரீ. கணேசலிங்கம் அவர்களிடம் சிறந்த வழிகாட்டலை பெற்ற மாணவியாகவும் விளங்குகிறார். பல்கலை கழகத்தில் அவருக்குகிடைத்த வழிகாட்டல்களும் வாய்ப்புக்களும் அவரை படைப்புலக சிற்பியாக உருவாக்கியுள்ளது. அவர் மேற்காசிய அரசியல் தொடர்பாக தனது அகல் விரிப்பார்வைகளை கட்டுரை களாக எழுதி ஊடகங்களில் வெளிவரச் செய்திருப்பதோடு தனது எழுத்துக் கருக்களை நூல் வடிவமாக்கியிருப்பது பாராட்டுக்குரியது. அவர் தொடர்ந்தும் எழுத வேண்டும். உலக அரசியலை மட்டுமன்றி நமது தேசத்து அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி அகல் விரிவு பார்வை கொண்ட எழுத்துருவாக்கியாகவும் பரிணமிக்க வேண்டும். அவர் அவ்வாறு பரிணமிப்பார் என்பது எனது முழு நம்பிக்கை யாகும். அவரது படைப்பாக்க செயற்பாட்டை வாழ்த்துகின்றேன். பாராட்டு கின்றேன்.

***சி. இளங்கோ***

**அதிபர்**

**யாழ் மண்டைதீவு மகா வித்தியாலயம்**

**மண்டைதீவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"....ரஷ்சியா, சீனா, ஈரான் ஆகிய மூன்று அரசுகளும் கூட்டுச் சேருமிடத்து அமெரிக்காவை எதிர்கொள்வதற்கான அடிப்படை பலம் சாத்தியம். இவ்வாறு ரஷ்சியா, சீனா, ஈரான் கூட்டு ஒன்று நிகழுமானால் மேற்காசியாவில் அமெரிக்கா பெருந்தோல்வி அடைந்து விடும்......

பக் : 150

...... ஈரானைப் பாதுகாப்பதுதென ரஷ்சியாவும் சீனாவும் சேர்ந்து முடிவெடுத்தால், மேற்காசியாவில் அமெரிக்காவின் மேலாதிக்கம் அர்த்தமற்றதாகிவிடும் அல்லது நொறுங்கிப் கொட்டுண்டுவிடும். இதற்கான உடனடி வாய்ப்புக்கள் குறைவே. ஆயினும் எதிர்காலத்தில் இது தான் உலக அரசியலின் அச்சாணியாகும். உண்மையில் அமெரிக்காவின் உலகளாவிய ஆதிக்கத்தின் இருதயம் வளைகுடா பகுதி தான். இப்பிரச்சனையில் இருந்து தான் எதிர்கால உலகம் யுத்த முகம் கொள்ளப் போகின்றது. எதிர்காலத்தில் பெரும் யுத்தம் ஒன்றுக்கான அச்சாணி மேற்காசியா தான்...."

பக் : 151

(மு.திருநாவுக்கரசு. 2009 ஒற்றைமைய உலக அரசியலில் போரும் சமாதனமும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சர்வதேச அரசியல் என்பது தேசங்கள், நாடுகள் ஆகியவற்றுக் கிடையேயான நேர் எதிர் மறையான பொருளாதார சமூக கலாசார நிலைமைகள் ஆகும். சர்வதேச அரசியல் என்பது நாடுகளுக்கு இடையி லான உறவுகளையும், முரண்பாடுகளையும், அரசுகள் ஒன்றிணைந்து செயற்படுத்தும் சர்வதேச அமைப்புக்கள், சட்டங்கள் என்பவற்றையும் உள்ளடக்கியதாக காணப்படுகிறது.

சர்வதேச அரசியலிலே நாடுகளுக்கிடையில் ஒருமைப் பாட்டினை வளர்க்கவும் முரண்பாடுகளை தணிக்கவும் அதிகாரம் என்பது பயன்படுத்தப்படுகின்றது. ஆகவே அரசியல் விவகாரத்தில் அதிகாரமும் வலுவும் ஊடுருவி நிற்கின்றன. சர்வதேச அரசியலில் அதிகாரத்தினை அல்லது வலுவினை குறித்து நிற்கும் மிகப் பிரதான அணுகுமுறையாக யதார்த்தவாத அணுகுமுறை என்பது காணப்படுகின்றது. அதாவது "சர்வதேச அரசியலில் நாடுகளுக்கிடையேயான உறவுகள் "அதிகாரம்" அல்லது வலு " என்பதன் அடிப்படையில் நிச்சயிக்கப்படுவதாக கூறுகிறார்கள். யதார்த்தவாத அணுகுமுறையின் முன்னோடிகளில் மிகவும் முக்கியமானவராக மொர்கந்தோ காணப்படுகின்றார். மொர்கந்தோ "சர்வதேச அரசியலில் பூரண இறைமை கொண்ட நாடுகளே பாத்திரங்களாக நடிக்கின்றார்கள் என்றும் ஒவ்வொரு நாடும் தனது வலு, அதிகாரங்கள் என்பவைக்கேற்ப சர்வதேச அரசியலில் அங்கம் வகிக்கின்றன" என்றார்.

நாடுகள் தமது வலுவினை உச்சமாக ஆக்கிக்கொள்வதன் மூலம் சர்வதேச அரசியலில் தம்மை முதல் தர வலுமிக்க நாடாக மாற்றிக் கொள்வதில் ஒன்றையொன்று போட்டி போட்டு கொள்கின்றன. இதனடிப் படையில் வல்லரசு நாடுகளுக்கிடையே நிலவும் சர்வதேச அதிகாரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியும், அப்போட்டியின் அடிப்படையில் மேற்காசியா விவகாரம் எவ்வாறு கையாளப்படுகின்றது என்பது தொடர்பானதாக இந்நூலின் கட்டுரைகளின் உள்ளடக்கங்கள் அமைந்துள்ளது. பனிப்போரின் முடிவுக்கு பின்னர் சர்வதேச அரசியலில் வல்லாதிக்க நாடாக அமெரிக்காவே காணப் பட்டது. ரஷ்சியா பெரும்பாலும் வல்லாதிக்கப் போட்டியில் பெரும்பாலும் ஒதுங்கியிருந்தது. ஆனால் ரஷ்சியாவிலே புட்டின் வருகையும் ரஷ்சியாவின் அரசியல் பொருளாதார வளர்ச்சியும், அதற்கு ஏதுவாக அமெரிக்காவில் இடம்பெற்ற செப்ரெம்பர் 11 தாக்குதலும் தொடர்ச்சியாக 2008ம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி போன்றவற்றின் காரணமாக ரஷ்சியா அமெரிக்காவின் ஒரு துருவ அரசியலுக்கு சவால் விடும் வகையில் வளர்ந்து வருகின்றது. இதன் காரணமாக இவ் இரு நாடுகளும் மீண்டும் பனிப்போரில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒன்றாக மேற்காசியா விவகாரமும் காணப்படுகின்றது

உலகில் காணப்படும் கண்டங்களில் வளங்கள் நிறைந்த பிரதேச மாக காணப்படுவது ஆசியா ஆகும். அதிலும் எண்ணெய் வளம் கொண்ட பிரதேசமாக மேற்காசியா காணப்படுகின்றது. இப் பிரதேசம் இரண்டாம் உலக மகாயுத்த காலத்திற்கு பின் சர்வதேச அரசியலில் அதிகளவு முக்கியமிக்க தொன்றாக விளங்கியது. எண்ணெய் வளம், மதம் மற்றும் நாகரீகங்களுக்கிடையிலான மோதல், புதிய உலக ஒழுங்கின் அரசியல் பொருளாதார நிலைமைகள் போன்றவற்றின் அடிப்படையில் முக்கியத்துவம் மிக்கதாக காணப்படுகின்றன. மேலும் மேற்காசியாவின் அரசியல் என்பது மன்னராட்சி, பிரபுத்துவம் போன்ற பராம்பரியங்களுக்கு முக்கியத்தும் கொடுக்கும் சர்வாதிகார ஆட்சி பல வருடங்களாக இடம் பெற்று வருகின்றது. எனவே இங்கு இவற்றிற்கு எதிராக 2010ம் ஆண்டு மக்கள் எழுச்சி (அரபு வசந்தம்) தோற்றம் பெற்றது.

அரபு வசந்தம் என்பது அமெரிக்கா தன் ஆதிக்க சார் நலன்களை நிறைவேற்றும் பொருட்டு மேற்காசியாவில் கொண்டு வரப்பட்ட ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் அரபு வசந்தமே அமெரிக்காவின் உலகளாவிய ஆதிக்கத்தினை சவாலுக்குட்படுத்தும் ஒன்றாக மாறியது. குறிப்பாக சிரியா விவகாரத்தில் அமெரிக்கா கண்டு வரும் வீழ்ச்சி போக்குகள் அதன் சவாலில் பிரதான இடத்தை வகிக்கின்றது. மாறாக ரஷ்சியா சிரியா விவகாரத்தினை கையாளுவதன் மூலம் மேற்காசியாவிலும், சர்வதே அரசியலிலும் தனது ஆதிக்கத்தினை ஸ்திரப்படுத்தி வருகின்றது. ஆனாலும் மேற்காசிய அரசியல் சூழலை தனக்கு ஏற்ப ஒன்றாக மாற்றிக் கொள்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அமெரிக்கா சளைக்காது மேற்கொண்டு வருகின்றது. ரஷ்சியா மீதான பொருளாதார தடை, இராஜதந்திரிகளின் வெளியேற்றம், சிரியா மீதான பொருளாதார தடை, கட்டார் மீதான பொருளாதார தடை, ஈரானுடனான அணு உடன் படிக்கையில் இருந்து வெளியேறல், இஸ்ரேலுக்கான அமெரிக்கா தூதரகத்தை சர்ச்சை மிக்க ஜெரூசலேமில் நிறுவியமை என தனது வலுவை நிலை நாட்ட பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய மேற்காசியா அரசியலை மையப்படுத்தி சர்வதேச அரசியலில் ஏற்பட்டு வரும் அரசியல், பொருளாதார தாக்கங்கள் பற்றிய கட்டுரைகள் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் யூன் மாதம் வரையில் தினக்குரல் பத்திரிகையில் புதிய பண்பாடு இதழில் வெளிவந்தன. அவற்றின் தொகுப்பாகவே இந்நூல் அமைந்துள்ளது.

இந்நூலை வெளிக்கொண்டு வருவதற்கு பல உதவிகளை புரிந்த நல்லுள்ளங்களை நினைவு கோருவது அவசியமானது. மதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரிய யாழ்ப்பாண சின்மயா மிஷன் சுவாமிஜிகள் சிதாகாசானந்தா அவர்கள் இந்நூலிற்கு ஆசிச் செய்தியினை வழங்கி உள்ளார்கள். என் திறமைகளையும், ஆளுமைகளையும், வளர்ப்பதில் பாரிய பங்கு வகிக்கும் யாழ்ப்பாண சின்மயா மிஷனுக்கும் சுவாமிஜிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டுரைகளை எழுத ஊக்கமளித்த யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் அரசறிவியல் துறை தலைவர் கலாநிதி கே.ரீ. கணேசலிங்கம் அவர்களுக்கு நன்றி கூறுவது முதன்மையான கடமையாகும். இக்கட்டுரை கள் எழுதுவதற்கும் அவை நூல் வடிவம் எடுப்பதற்கும் ஆலோசனைகளை யும், அறிவுரைகளையும், அணுகுமுறைகளையும், வழங்கி உதவிய கலாநிதி கே.ரீ. கணேசலிங்கம் அவர்களுக்கு நன்றி கூறாமல் இந்நூல் முழுமை பெறாது. தாரமும் குருவும் தலைவிதிப்படி எனும் கூற்றுக்கு இணங்க என் வாழ்வில் இறைவன் வரமாக அளித்த ஆசான் திரு.சி.இளங்கோ அவர்கள் இந்நூலிற்கு அணிந்துரை வழங்கியமை என்னை இன்னும் ஊக்கப்படுத்தியுள்ளது. அரசியல் விஞ்ஞானத்தின் அடிப்படையை மிக ஆழமாக தெளிவாக என்மனதில் பதித்து இந்நூலிற்கு அணிந்துரையும் வழங்கி என்னை ஊக்கப்படுத்தும் என் ஆசான் சி.இளங்கோ அவர்களுக்கு நன்றிகள் பல கோடி. மற்றும் எனது வாழ்வில் இன்பத்திலும் துன்பத்திலும் துணையாய் நின்று ஊக்கமும் ஒத்துழைப்பும் நல்கி வரும் எனது பெற்றோர் களுக்கும் சகோதரர்களுக்கும் அவர்களது ஊக்கமளிக்கும் எண்ணங்களுக் கும் இந்நூல் பரிசாகியது. இறுதியாக இந்நூலினை அச்சிட்டு வெளியிட உதவிய மதிகலர்ஸ் அச்சகத்தாருக்கும் எனது நன்றிகள்.

*லக்ஷனா. பா*

**நூல் ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

ஆசியுரை

அணிந்துரை

முன்னுரை

01. அறிமுகம் 1 - 6

02. கவுட்டவிலிருந்து கிளர்ச்சியாளர்கள் வெளியேற்றம் : மேற்காசியா அரசியலில் ரஷ்சியாவின் ஆதிக்கம் வலுவடைந்துள்ளது. 7 - 13

03. சிரியா - ரஷ்சியா கூட்டின் வெற்றியும் அமெரிக்காவின் சரிவும் 14 - 19

04. சிரியா மீதான அமெரிக்க கூட்டுப் படையின் தாக்குதல் மேற்காசியாவில் பிராந்திய போட்டிக்கு வழிவகுத்துள்ளது. 20 - 26

05. மேற்குலக - இஸ்ரேல் தந்திரமும் சிரியா - பாலஸ்தீன விவகாரமும் 27 - 31

06. அணுவாயுத விவகாரத்தில் மேற்கின் இராஜ தந்திரத்தை ஈரான் வெற்றி கொள்ளுமா? 32 - 38

07. இஸ்ரேல் அமெரிக்க கூட்டின் தந்திரோபாயமே ஈரான் அணு உடன்படிக்கையிலிருந்து வெளியேற காரணம் 39 - 44

08. அமெரிக்க - இஸ்ரேல் கூட்டுக்கு நெருக்கடி கொடுக்கும் ஈரான் 45 - 49

09. மேற்காசியா அரசியலில் ஜனநாயக சக்திகளின் எழுச்சிகள் அமெரிக்காவின் உத்திகளுக்கு சவாலாக மாறி வருகின்றன. 50 - 55

10. மேற்காசியா நாடுகள் மீதான அமெரிக்காவின் இராணுவ உத்திகளுக்கு பதில் பொருளாதார உத்திகள் 56 - 61

11. சிரியா - வடகொரியா ஒத்துழைப்பும் அமெரிக்கா எதிர் கொள்ளும் சவாலும் 62 - 66

12. ஈரானின் இராஜதந்திரமும் அமெரிக்காவின் சறுக்கலும் 67 - 72

13. வல்லரசுகளின் வர்த்தகப் போரும் ஜி - மாநாடும் 73 - 77

14. உலக வர்த்தகப் போரை ஜனாதிபதி ட்ரம்ப் தீவிரப் படுத்துகிறாரா? 78 - 83

பின்னிணைப்புக்கள் 84 - 106

உசாத்துணைகள் 107 - 121



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கொக்குவில் பொது நூலகம்
நல்லூர் பிரதேசசபை



# அறிமுகம்

சர்வதேச அரசியலில் நாடுகாண் பயணமும், கைத்தொழில் புரட்சியும் பிரதேசங்களுக்கான முக்கியத்துவத்தினையும் போட்டியினையும் அதிகரித்தன. அவ்வகையில் ஆசியா கண்டம் அதிகளவு முக்கியத்துவம் உள்ள பிரதேசமாகவும் நாடுகளின் போட்டிக்குரிய களமாகவும் காணப்பட்டது. குறிப்பாக ஐரோப்பாக் கண்டத்தினையும் ஆபிரிக்கா கண்டத்தினையும் இணைக்கும் பாலமாக காணப்படுதல் மற்றும் எண்ணெய் வளத்தினை கொண்டிருத்தல் ஆகியவற்றின் காரணமாக மேற்காசியா பிரதேசம் சர்வதேச அரசியலில் அதிக தாக்கத்தினை ஏற்படுத்தும் ஒன்றாக அமையப்பெற்றது.

மேற்காசியா




படம் –01

மேற்காசியா "மத்திய கிழக்கு", "சின்னாசியா" போன்ற பெயர்கள் கொண்டு அழைக்கப்படும். "மத்திய கிழக்கு என்பது திருத்தமாக இல்லாத ஒரு பூகோளச் சொற்றொடர். ஐரோப்பியத் துருக்கி நாட்டிற்கும் மேற்குப் பாகிஸ்தானுக்கும் இடையிலுள்ள நாடுகளை, அதாவது துருக்கி, எகிப்து, அரேபியத் தீபகற்ப முழுவதும் ஈரான் ஆகியவற்றை இது பொதுவாக குறிப்பதாக நினைக்கப்ப டுகின்றது."

சர்வதேச அரசியலில் பல நூற்றாண்டுகளாக முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக மேற்காசியா விளங்கியது. குறிப்பாக கெடுபிடிப் போரில் இன்றியமையாத பகுதியாக அமைந்தது. அரசியல், பொருளாதாரம், இராணுவ பூகோள மத ரீதியில் மிகவும் முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக அமையப் பெற்றது. "மூன்று கண்டங்களுக்கிடையில் ஒரு நிலப் பாலமாக மேற்காசியா விளங்குகின்றது." கிழக்கு ஆசியா மற்றும் இந்தியாவில் இருந்து வேறுபட்டதாக மேற்காசியாக காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[library stamp, illegible]



மத்திய ஆசியா மற்றும் கீழ் ஆசியா ஆகியவற்றில் இருந்து பல சாதி வகுப்புக்களை சேர்ந்தவர்கள் புராதன கால மேற்காசியாவில் குடியேறினர். துருக்கியர்கள் இதனடிப்படையில் கட்டியமைக்கப்பட்ட இனமே. மத்திய தரைக்கடலினை எல்லையாக கொண்ட பிரதேசமாக மேற்காசியா காணப்படுகின்றது. "ஆசியாவையும் ஆபிரிக்காவையும் ஐரோப்பாவையும் இணைப்பதும் பிரிப்பதும் மத்தியதரைக்கடலே ஆகும்." பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் துருக்கிய வம்சம் மிகவும் வலிமையாக இருந்தது. மேலும் மத்தியதரைக் கடலின் கரையோரங்களை சுற்றி காணப்பட்ட நாடுகளில் பல பொதுவான அம்சங்கள் இனம் காணக்கூடியதாக இருந்தது. குறிப்பாக "பழைய கீரிசின் குடியேற்றங்கள் மத்தியதரைக் கடற்கரையிலுள்ள மூன்று கண்டங்களிலும் காணப்பட்டது." மத்தியதரைக் கடலை மையமாக கொண்டு ரோம சாம்ராஜ்யம் கட்டியமைக்கப்பட்டது. மத்தியதரைக் கடலைச் சூழ்ந்த பிரதேசமே ஆதியில் கிறிஸ்தவ மதத்தின் உறை விடமாக காணப்பட்டது. அரேபியர் தங்களுடைய கலை நாகரீகத்தினை கீழ் கரையிலிருந்து சிசிலிக்கும், பின்னர் தென்ஆபிரிக்க கரை வழியாக மேற்கே ஸ்பெயினுக்கும் கொண்டு சென்று எழுநூறு ஆண்டுகள் தங்கியிருந்தார்கள்.

மேற்கூறப்பட்ட அம்சங்களின் அடிப்படையில் ஆசிய மத்தியதரைக் கடல் நாடுகளுக்கும், தென் ஐரோப்பாவுக்கும், வட ஆபரிக்காவுக்கும் உள்ள உறவின் ஆழம் புலனாகின்றது. அவ்வாறே ஆசியாவுடன் ஏனைய இரண்டு கண்டங்களையும் பிணைக்கும் ஒரு பிணைப்பாக மேற்கு ஆசியா கருதப்பட்டு வந்தது. மேற்காசிய பிரதேசத்தின் அரசியல், பொருளாதார இராணுவ மத பண்பாட்டு அம்சங்களையும், அவற்றின் சர்வதேச அரசியல் தாக்கம் தொடர்பான விரிவான விளக்கம் பின்வருமாறு

இராணுவ ஆதிக்கம் கொள்வதற்கு ஏற்ற புவியியல் அமைவிடம் மற்றும் எண்ணெய் வளம் ஆகியன வல்லரசுகள் மத்திய கிழக்கில் அதிகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனம் செலுத்தவதற்கான காரணங்கள் ஆகும். பின்வரும் விடங்கள் இராணுவ ரீதியாக மேற்காசிய முக்கியத்துவம் பெற காரணம் ஆகின.

மேற்கு ஐரோப்பாவிற்கும் ஆசியாவிற்கும் இடையில் முக்கியத்து வம் மிக்க அம்சமாக மேற்காசியாவின் சூயஸ் கால்வாய் காணப்படுகின்றது. சர்வதேச அரசியலில் கெடுபிடிப்போர் காலத்தில் இருந்தே இராணுவ ரீதியான அம்சங்கள் முக்கியத்துவம் பெற தொடங்கின. இக்காலத்தில் சர்வதேச கம்யூனிஷத்திற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்குரிய களமாக மேற்காசியா விளங்கியது. மேற்காசியாவில் இருந்து ரஷ்சியா விற்கு எதிரான தரை வழி நடவடிக்கைகளுக்கு காகஸஸ், எல்பூருஸ் மலைத் தொடர்கள் தடையாக காணப்படுகின்றது. இதனால் விமானப் படைக்கான முக்கியத்துவம் அதிகரித்தது. குறிப்பாக அமெரிக்காவின் போர் தளங்கள் துருக்கி, சவூதி அரேபியா போன்ற நாடுகளில் நிறுவப்பட்டன. இன்று வரை அதன் பராமரிப்பும், நிலவுகையும் காணப்படுகின்றது.

அணு ஆயுத பரம்பலின் பின்னர் விமானத்தளங்களைக்கான செல்வாக்கு கேள்விக்குட்படுத்தப்பட்ட போதும் ஏவுகணை ஸ்தாபிக்கும் இடங்கள் முக்கியத்துவப்படுத்தப்பட்டது. இதன் காரணமாகவும் மேற்காசியாவின் முக்கியத்துவம் அதிகரித்தது. ஏவுகணைத் தளங்கள் தங்களுடைய வேலையை வெற்றிகரமாக செய்ய வேண்டுமானால் அவற்றின் இடங்கள் மிகவும் இரகசியமாக வைத்துக் கொள்ளப்பட வேண்டும். அணுவாயுதப் போர் அல்லாத ஏனைய போருக்கான விமானதளங்களின் அவசியம் இன்று வரை மத்திய கிழக்கில் நிலவுகின்றது. அணு ஆயுதங்க ளின் கண்டுபிடிப்பு, அணுக் குண்டுகளைச் ஏற்றிச் செல்லும் நீண்ட துார ஏவுகணைகளின் உற்பத்தி ஆகியன போர் முறைகளில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்திவிட்டன. ஆனால் இரண்டு மாபெரும் அணு நாடுகளுக்கிடையே நடைபெறும் அணுப்போர் அல்லாத மற்ற எந்தப் போரிலும் பழைய இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் இன்றும் முக்கியமானவையாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக அமெரிக்க – ரஷ்சியா போட்டியினை குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ முக்கியத்துவத்திற்குப் பிறகு கறுப்புத் தங்கம் எனப்படும் எண்ணெய் தான், மத்திய கிழக்கிற்கு மிக முக்கியத்துவம் கொடுக்கிறது. மத்திய கிழக்கின் பெரும் பொருளாதாரச் செல்வமாக விளங்குவது எண்ணெய். எனினும் எண்ணெய் மூலம் கிடைக்கும் வருமானம் முழு வதையும் இந் நாடுகளை ஆட்சி செய்யும் ஆட்சியாளர்கள் தங்களுடைய சொந்த நலனுக்காக பயன்படுத்துகிறார்கள். மக்கள் நலன் அபிவிருத்தி திட்டங்கள் எவற்றிற்கும் இவ் வருமானம் மூலம் கிடைக்கும் இலாபங்களை கொண்டு முன்னெடுப்பதில்லை.

உலக எண்ணெய் உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கு முதல் நான்கில் மூன்று பங்கு வரை மத்திய கிழக்கு உற்பத்தி செய்கிறது. சஹாரா, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளில் இயற்கை வாயு கண்டுபிடிக்கப் பட்டாலும், அணுச் சக்தியைக் கண்டுபிடிப்பதிலும் பாவனையிலும் முன் னேற்றம் ஏற்பட்டாலும் தமது தொழிற்சாலைகளுக்கு அல்லது அன்றாட தேவைகளுக்காக அல்லது போர் தேவைகளுக்காக என மேற்கு நாடுகள் மேற்காசிய நாடுகளின் எண்ணெயிலே நீண்ட காலம் தங்கியிருக்க வேண்டும்.

அமெரிக்கா நீண்டகால நோக்கில் எண்ணெய் வள சேமிப்பினை கொண்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்த லாரன்சு டின்னி என்பவர் "எண்ணெய்க்காக நாம் போராடுகிறோம்" என்கின்ற தனது நூலில் அப்போதைய புள்ளிவிரங்களின் அடிப்படையில் "அமெரிக் காவிடம் இருக்கும் எண்ணெய் வளங்கள் எழுபத்தைந்து ஆண்டுகள் வரை நீடிக்கும் கொள்ளவைக் கொண்டுள்ளது" எனக் கூறினார். தற்பொழுது சேகரிப்பு மற்றும் உபயோகத்தின் அளவு அதிகரித்து விட்டது. எவ்வாறு இருப்பினும் அதனது சேகரிப்பு, ஏனைய வளங்களின் குறைந்தபட்ச நீடித்த தன்மை மற்றும் அமெரிக்காவின் அண்டைய நாடுகளின் வரையறைக்குட்பட்ட வளங்களின் தன்மை காரணமாக அமெரிக்காவுக்கு மேற்காசியா நாடுகளின் எண்ணெய் வளம் அவசியமானதாக உள்ளதாகசர் ஒலஃப் காரோ என்பவர் (Wells of



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

power) கூறுகிறார். இதனால் எப்பொழுதும் அமெரிக்காவின் கொள்கை உருவாக்கத்தின் முக்கிய கூறுகளில் மேற்காசியாவும் அதன் எண்ணெய் வளமும் காணப்படுகின்றது.

அராபியர்களுக்கான ஒரு வலுவுள்ள தேசிய இயக்கம் உருவானது தான் மத்திய கிழக்கிற்கு இருக்கும் மூன்றாவது முக்கியத்துவம். "பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தேசிய இயக்கத்தின் தலைமை சிரியாவிடமும் லெபனானிடமும் காணப்பட்டன. 1867 ஆம் ஆண்டில் ஓர் அரேபிய அகராதி தொகுக்கப்பட்டதிலிருந்து 1870 ஆம் ஒரு கலைக்களஞ்சியம் தொகுக்கப்பட்டதிலிருந்தும் அரேபிய மறுமலர்ச்சி ஆரம்பமாயிற்று. 1908 ஆம் ஆண்டில் ஏற்பட்ட துருக்கிய இளைஞர் கலகத்தாலும் முதல், இரண்டாம் உலகப் போராலும் அரசியல் இயக்கம் மேலும் தீவிரமடைந்தது. அரபு தேசிய இயக்கம் சர்வதேச பிராந்திய நிறுவனமயப்படுத்தப்பட்ட இயக்கமாக வளர்ச்சி அடைந்தது. 1945 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முப்பத்தாறு மில்லியன் அரேபிய மக்களைக் கொண்ட ஈராக், சிரியா, லெபனான், ஜோர்டான், சவூதி அரேபியா, யேமன், எகிப்து, ஆகிய நாடுகள் அரேபிய நாடுகளின் லீக் என்ற ஒரு ஸ்தாபனத்தினை ஏற்படுத்தின.

மேற்காசியாவின் முக்கியத்துவத்தினை அதிகரித்த மற்றமொரு அம்சம் இஸ்ரேல் தேசத்தின்(1948) தோற்றம் ஆகும். சர்வதேச அனுசரனையுடன் யூத இன அரசினால் பாலஸ்தீனத்தில் நில ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டு உருவாக்கிய குடியேற்ற நாடாக இஸ்ரேல் காணப்படுகின்றது. இஸ்ரேல் உருவாக்கம், அதன் காரணமாக மேற்காசியா நாடுகளில் தோன்றிய யுத்தங்கள், அவற்றில் வல்லரசுகளின் தலையீடு போன்றன காரணமாக மேற்காசியா சர்வதேச அளவில் முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக காணப்படு கின்றது.

பிரிட்டிஷ் காலணித்துவத்தின் பின் மேற்காசியா பிராந்தியம் தன்னை வலுமிக்க பிரதேசமாக உருவமைத்துக் கொள்ளாமையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லரசுகளின் அதிகாரப் போட்டிக்களமாக மாறியது. குறிப்பாக தங்கள் செல்வாக்கை ஏற்படுத்திக் கொள்ள அமெரிக்க – ரஷ்சியா நாடுகள் ஒன்றோடொன்று போட்டியிடுகின்றன. மேற்காசியா எண்ணெய் வளம் நேட்டோ அமைப்பில் உள்ள நாடுகளுக்கு மிகவும் அவசியம். குறிப்பாக மேற்கு ஐரோப்பாவின் எதிர்காலப் பாதுகாப்பிற்கும் நல்வாழ்விற்கும் மத்திய கிழக்கு எண்ணெய் அவசியம் தேவைப்படுகின்றது.

அமெரிக்கா – ரஷ்சியா நாடுகள் கொண்டிருக்கும் கருத்தியல் சார் வேறுபாடுகளும் மேற்காசியா அரசியலை கொதிநிலைக்குள் உட்படுத்தும் அம்சங்களில் ஒன்றாகும். குறிப்பாக கெடுபிடிப்போர் காலங்களில் இரண்டு நாடுகளும் தம் கொள்கையினை மேற்காசியா நாடுகளில் செல்வாக்கு மிக்க ஒன்றாக மாற்றுவதற்கு தமக்குள் போட்டியிட்டுக் கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவுட்டாவிலிருந்து கிளர்ச்சியாளர்கள் வெளியேற்றம் : மேற்காசியா அரசியலில் ரஷ்சியாவின் ஆதிக்கம் வலுவடைந்துள்ளது.

கடந்த ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக சிரியாவில் ஷன்னி பிரிவைச் சேர்ந்த கிளர்ச்சிப் படைகளுக்கும் ஷியா பிரிவைச் சேர்ந்த ஜனாதிபதி ஆசாத்தின் அரசுப் படைக்கும் உள்நாட்டுப் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சிரிய எதிரணி என்பது பல குழுக்களினதும், தீவிரவாத அமைப்புக்களினதும் கலவை. ஒரு முகப்படுத்தப்பட்ட இலக்கோ, கோட்பாடுகளோ இவற்றிடையே இல்லாதிருப்பது பல வீனமான அம்சம் ஆகும். கிளர்ச்சியாளர்கள் கொண்டு இருந்த இலக்கு களாக பஷார் அல் ஆசாத்தின் ஆட்சியை வீழ்த்துவதன் மூலம் அமெரிக்காவின் விருப்புக்கு அமைய ஆட்சி ஒன்றை ஏற்படுத்துவதும், இது மட்டுமன்றி தேசியளவில் இஸ்லாமிய அரசை ஒன்றை ஏற்படுத்துவது ஆகும். மேலும் உலகளாவிய மட்டத்தில் இஸ்லாமிய அரசை ஒன்றை ஸ்தாபிப்பதும் கிளர்ச்சியாளர்களின் நோக்கமாகும். இந்தவகையில் சிரியா மாநிலங்களில் ஒன்றான கவுட்டாவில் கிளர்ச்சியாளர்களின் வீழ்ச்சி என்பது பிராந்திய அரசியலிலும் சர்வதேச அரசியலிலும் காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

கிளர்ச்சியாளர்களின் படைகளுக்கு அமெரிக்காவும் சவூதி அரேபியாவும் ஆதரவு அளிக்கின்றன. எனினும் அவை கிளர்ச்சி யாளர்களை ஆயுத ரீதியாக பலப்படுத்தும் அடிப்படையான திட்டங்களை செயல்படுத்த போரின் ஆரம்பத்தில் இருந்தே அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் தயக்கம் காட்டின. ஆயுதங்கள் அல்கைதாவின் கைகளிலும் அதிதீவிரவாத ஷன்னி இஸ்லாமிய ஜிஹாதிகளின் கைளிலும் போய்ச் சேர்வதைத் தடுப்பது இத்தடைகளின் முக்கிய காரணமாக கூறப்பட்டது. அதாவது மேற்கு நாடுகள் லிபிய யுத்தத்தில் கடாபியின் நிர்வாகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுத்தின் துணை கொண்டு நிர் மூலம் செய்வதற்காக கிளர்ச்சி வாதிகளுக்கு லிபியாவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த எல்லாப் பகுதிகளிலும் ஆயுதங்களை குவித்தது. கடாபி அரசு கவிழ்ந்ததன் பின்னர் லிபியாவில் ஏற்பட்ட பாதகமான பிந்திய சூழலுக்கு ஆயுதங்கள் முக்கிய காரணங்களாகின. லிபியாவில் மிதவாத முஸ்லீம்களாலும் சமயச்சார்பற்ற புரட்சி ஆதரவுப் பிரிவுகளாலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கும் புரட்சியின் இலட்சியங்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்காத தீவிரவாத, அதி தீவிரவாத சமயக் குழுக்கள் ஆட்சியைக் கைப்பெற்றும் சூழ்நிலை உருவாகியது. ஆயுத பலத்தின் மூலமே தமது ஏதேச்சதிகார எண்ணங்களை இக்குழுவினர் நிறைவேற்ற முயன்றனர். இதன் பின்னணியில் சிரிய கிளர்ச்சியாளர்களை ஆயுத ரீதியில் பலப்படுத்து வதில் எழக்கூடிய பிரச்சனை பற்றி கவலை கொண்டதனால் அமெரிக்கா – ஐரோப்பிய நாடுகள் தமது ஆயுத ரீதியான ஆதரவினை வழங்குவதில் பின் நின்றன. இதனால் கிளர்ச்சியாளர்கள் தோல்வியை எதிர் கொள்ளும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்க தொடங்கியது.

மறுபக்கத்தில் ரஷ்சியாவும் ஈரானும் சிரிய ஜனாதிபதி ஆசாத்துக்கு ஆதரவு அளிக்கின்றன. குறிப்பாக ரஷ்சிய விமானப்படை ஆசாத்துக்கு துணையாக சிரியா களத்தில் முகாமிட்டுப் போரில் ஈடுபட்டு வருகிறது. இதன் காரணமாக அண்மைக்காலமாக அசாத்தின் கை ஓங்கி வருகிறது. இதன்படி சிரியாவில் 70 சதவீத நிலப்பகுதி அவருடைய கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சிரியாவின் ஆளும் தரப்பு இவ்யுத்தத்தில் வெற்றியினை பெரும்பாலும் நெருக்கியுள்ள நிலையில் சிரியாவின் கிழக்கு கவுட்டாவில் கிளர்ச்சி குழு ஒன்று வெளியேறவுள்ளதாக தகவல் வெளிவந்தமையானது ஆசாத்தின் கை வலுபெற்றுவிட்டதை உறுதிசெய்கிறது.

சிரியாவில் நான்கு இலட்சம் மக்களைக் கொண்டது கிழக்கு கவுட்டா (Ghouta). இந்த நகரை பரதா நதி பாலை வனச் சோலையாக்கி யுள்ளது. இங்கு சிரிய அரசுக்கு எதிராக பல கிளர்ச்சிக்குழுக்கள் உள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் பொது நூலகம்
நல்லூர் பிரதேசசபை



முக்கியமான குழுக்களாக Jaysh – al Islam, Faylaq al – Rahman, Hay' at tahrir al sham என்பனவாகும். இதில் Jaysh – al Islam 2013 ம் ஆண்டு பல குழுக்களை இணைத்து உருவாக்கப்பட்டது. இஸ்லாமியச் சட்டப்படி ஆட்சி நடக்க வேண்டும் என்ற கொள்ளையுடைய இக்குழுவில் பத்தாயிரம் கிளர்ச்சியாளர்கள் இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அல்கொய்தாவிற்கு எதிராக சவூதி அரேபியாவால் இந்தக் குழு உருவாக்கப்பட்டது என கூறப்படுகின்றது.

**கிழக்கு கவுட்டா**




படம் –02

Faylaq al – Rahman இரண்டாவது பெரிய கிளர்ச்சிக்குழு. இது Jaysh – al Islam அமைப்புடன் இணைந்து செயல்படுகின்றது. இரண்டும் தங்கள் கட்டுப்பாட்டு நிலப்பரப்புக்களை பகிர்ந்துகொண்டுள்ளன. Hay' at tahrir al sham அல் கெய்தாவின் ஓர் இணை அமைப்பு. மேலும் பல குழுக்கள் கிழக்கு கவுட்டாவில் உள்ளன.

கிளர்ச்சிப் படையின் கட்டுப்பாட்டில் உள்ள கிழக்கு கவுட்டா பகுதியில் ஆசாத் படைகள் 2018 இன் மார்ச் மாதத்தில் இரசாயனத் தாக்குதல் உள்ளிட்ட கொடூர தாக்குதல்களை நடத்தி வந்தன என ஊடகங்கள் குற்றம் சாட்டின. இதன் விளைவாக மார்ச் மாதத்தில் மட்டும் 1260 பேர் பலியாகி உள்ளனர். கொல்லப்பட்டவர்களில் 121 பேர் குழந்தைகள் என பிரிட்டனை தலைமையாக கொண்டு இயங்குகின்ற கண்காணிப்பு குழுவான "சிரியன் அப்சர்வேட்டி /பார் ஹீமன் ரைட்ஸ் அமைப்பு கூறியுள்ளது. 22 ஆயிரம் பேர் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். இத்தாக்குதலுக்கான நேரடி ஈடுபாட்டை ரஷ்சியா மறுத்து வந்தாலும் சிரியா மற்றும் ரஷ்சிய நாட்டு விமானங்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதாக சிரிய கண்காணிப்பு குழு கூறியுள்ளது. அத்துடன் "கிழக்கு கவுட்டாவை "பூமியின் நரகம்" என ஐ.நா செயலாளர் ஆன்டோனியோ குட்டரெஸ் விவரித்துள்ளார்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம் யாழ்ப்பாணம்



கிழக்கு கவுட்டா பகுதியில் மட்டும் ஏறத்தாழ 393,000 மக்கள் சிக்கிக் கொண்டுள்ளனர். எனினும் அம்மக்களை பற்றி சிறிது கவனம் கொள்ளாமல் ரஷ்சியா மற்றும் சிரியா அரச தரப்பு படைகள் மற்றும் கிளர்ச்சியாளர்கள் மிக கண் மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டு வந்தன. சிரியாவின் அண்மைக்கால வரலாற்றை பார்க்கும் போது நாம் மிகவும் ஒன்றை தெளிவாக புரிந்து கொள்ள முடியும். கிளர்ச்சியா ளர்களை வெற்றி கொள்ளுதல் என்பதற்கு சிரியா – ரஷ்யா கூட்டுப்படை மேற்கொள்ளும் போர் இராஜதந்திர நடவடிக்கையாக சுற்றி வளைப்பு, கண்மூடித்தனமான தாக்குதல், உணவு விநியோகத்தை தடுத்து பட்டினி போடுதல் ஆகிய மனிதாபிமானமற்ற நடவடிக்கையால் சமச்சீரற்ற போரின் மூலம் வெற்றியினை எட்ட முயற்சிக்கின்றது என்பதாகும். இதனாலேயே சிரியாவின் கிழக்கு கவுட்டா பலத்த பேரழிவுகளை சந்தித்து வருகிறது.

எனினும் 2018ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் காலை ஒன்பது மணி யிலிருந்து பிற்பகல் 2 மணிவரை ஒரு மாதத்துக்கு கிளர்ச்சியாளர்களுக்கும் அரச படைத்தரப்புக்கும் இடையில் இடைக்காலபோர் நிறுத்தம் செய்யும் சமரசத்தை ரஷ்சியா உருவாக்கியது. இவ் ஐந்து மணித்தியால போர் நிறுத்தம் நிவாரணப் பொருட்களை கொண்டு செல்லப் போதாது. மக்களை பாதுகாக்க வெளியேற்றும் திட்டம் ஒன்றையும் ரஷ்சிய அதிபர் முன்வைத்த போதிலும் அது வெற்றியளிக்கவில்லை.


பெரும்பாலும் மக்களிற்கு உச்சகட்ட நெருக்கடியினை கொடுத்து தாக்குதல் பிரதேசத்தில் இருந்து வெளியேற்றி அதன் மூலம் கிளர்ச் சியாளர்களை தோல்வியடையச் செய்யும் உத்தி ரஷ்சியா – சிரியா கூட்டுபடைகளிடம் காணப்பட்டது. இதற்காக அவர்கள் கையாளும் தந்திரம் விமானதாக்குதல் ஆகும். சிரியா யுத்தத்தின் ஆரம்பகாலத்தில் இருந்து சிரியா ஆளும் தரப்பு பலமாக இருப்பதற்கான காரணங்களில் மிகப் பிரதானமானது அவை மேற்கொள்ளும் விமானத்தாக்குதல்கள் ஆகும். கிழக்கு அலெப்போவில் இப்படி ரஷ்சியா விமானங்களின் தாக்குதலுடன் உச்ச நெருக்கடியைக் கொடுத்த சிரியப் படையினர் அங்குள்ள மக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேற்றி சிரிய சுதந்திரப் கிளர்ச்சி படைகளிடம் இருந்து அதை கைப்பற்றி கொண்டனர்.

**சிரியா மீதான ரஷ்யாவின் விமானத் தாக்குதல் :**




படம் –03

இதேபோன்று தாக்குதலையே 2018 இன் மார்ச் மாதத்தின் இறுதி வாரத்தில் கிழக்கு கவுட்டா பகுதியில் அதிபர் ஆசாத்தின் ஆதரவு ரஷ்சியா படைகள் வான்வழி தாக்குதலில் ஈடுபட்டன. இவ்வான் தாக்கு தலில் 37 பேர் பலியாகினர். இந்த தகவலை சிரியா மனித உரிமைகள் ஆய்வகம் என்னும் தன்னார்வ அமைப்பு தெரிவித்துள்ளது. தாக்குதல் குறித்து ஆய்வகத் தலைவர் ராமிஅப்டெல் ரஹ்மான் செய்தியாளர் களிடம் கூறியதாவது:

“கிழக்கு கவுட்டாவின் அர்பின் பகுதியில் 22. 03. 2018 (வியாழன்) அன்று போர் நிறுத்தம் வருவதற்கு முன்னர் ரஷ்சியா வான் வழித்ததாக்குதலில் ஈடுபட்டது. இத்தாக்குதலில் மிகவும் தீங்கு விளை விக்க கூடிய நச்சுவாயு ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. இதன் காரணமாக மக்கள் மூச்சுத்திணறி பலியாகினர்” என அவர் குறிப்பிட்டார். ஆனால் கிழக்கு கூட்டா பகுதியில் நாங்கள் நேரடியாக வான்வழி தாக்குதலில் ஈடுபடவில்லை என ரஷ்சியா அரசாங்கம் உறுதியாக மறுப்பு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கவுட்டாவில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டி லிருந்த பெரும்பாலான பகுதிகளைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து அரசப் படைகள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை உறுதிசெய்யும் வகையில் சிரியா கிளர்ச்சியாளர் குழு ஒன்று, போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. போர் நடக்கும் கூட்டாப் பகுதியில் இருந்து வெளியேற கிளர்ச்சியாளர்கள் ஒப்புக் கொண் டுள்ளனர். "சிரியா அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தப் படி நாங்கள் ஆயுதங்களுடன் வெளியேறுகிறோம். மேலும் பொதுமக்கள் அவர்கள் வேண்டும் பகுதிகளுக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும்" என்று அக்ரர் அல் ஷாம் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் முன்சர் பெர்ஸ் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். கிளர்ச்சியாளர்கள் வசமிருந்த டூமாவில் இருந்து போராளிகள், அவர்களது குடும்பங்கள் மற்றும் பலரும் பேருந்துகள் ஊடாக 24.03.2018 (சனிக்கிழமை) முதல் வெளியேறி வருகின்றனர். அத்துடன் உடன்படிக்கைக்கு கிளர்ச்சியாளர்களை ஒப்புக்கொள்ள கட்டாயப்படுத்தும் வகையில் கிழக்கு கவுட்டா மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டது. அரசு படைகள் மற்றும் உள்ளூர் கிளர்ச்சியாளர்கள் குழுவின் தலைவர் பாய்லக் அல் – ரஹ்மான் ஆகிய இருவரும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி, இங்கிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் இட்லிப் மாகாணத்துக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

சிரியா யுத்தத்தில் ஆசாத்தின் வெற்றியானது மேற்காசிய அரசியலில் மட்டுமல்லாது உலக அரசியலிலும் மாற்றத்தினை கொண்டு வரும் எனலாம். காரணம் இப்போர் அமெரிக்கா – ரஷ்சியா நாடுகளுக் கிடையிலான அதிகாரப் போட்டியினை பரீட்சிக்கும் களமாக காணப் படுகிறது. ஆசாத்தின் வெற்றி ரஷ்சியாவின் வெற்றியினையே குறிக்கும். எனவே இனி உலக அரசியலினை தீர்மானிக்கும் நாடுகளில் தவிர்க்க முடியாத சக்தியாக ரஷ்சியா விளங்கும். அத்துடன் ரஷ்சியா ஜனாதிபதி புட்டினின் வெற்றியானது உலக அதிகார சமநிலையில் மாற்றத்தினையும் புதிய போர் சூழலையும் ஏற்படுத்தி வருகின்றது. வாசிங்டன் புதிதாக ரஷ்சியா மீது தடைகளை விதித்து வருகிறது. அத்துடன் 60 இற்கு மேற்பட்ட ரஷ்சியா நாட்டு இராஜதந்திரிகளையும் ட்ரம்ப் வெளியேற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L 17148



உத்தரவிட்டுள்ளார். புட்டினின் வெற்றியானது ரஷ்சியாவின் கூட்டு நாடான சீனாவின் மீதும் இராஜதந்திர போரை தொடங்க அமெரிக்காவை நிர்ப்பந்தியுள்ளது. இதன் விளைவே அமெரிக்காவிற்கான சீனாவின் இறக்குமதி பொருட்களுக்கான வரி அதிகரிப்பு ஆகும். இவ்வாறு புதிய போர் சூழலுக்குள் உலக அரசியலை சிரியாவும் அதன் மாகாணமான கூட்டாவின் வெற்றியும் இட்டு சென்றுள்ளன.

**31.03.2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L 17148



## சிரியா – ரஷ்யா கூட்டின் வெற்றியும் அமெரிக்காவின் சரிவும்

சிரியாவில் போர் நடந்து வரும் கிழக்கு கவுட்டா பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் தொடர்ச்சியாக வெளியேறி வருகின்றனர். பெரும்பாலான கிளர்ச்சியாளர்கள் ஏற்கனவே சரணடைந்து விட்டதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. கிளர்ச்சியாளர்களுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டின்படி அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தி னருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. தற்போதைய சூழலில் கிழக்கு கவுட்டாவின் பெரும் பகுதி அரசு கட்டுப்பாட்டில் வந்திருப்பதாக கூறப்படுகிறது.

மார்ச் மாதம் முழுவதும் தரைவழி மற்றும் விமான தாக்குதலில் சிரியா இராணுவம் ஈடுபட்டது. 80க்கு மேற்பட்ட இடங்களை அரசு கைப் பற்றிய நிலையில் கிழக்கு கவுட்டா விட்டு வெளியேற உடன்படிக்கை ஏற்பட்டது. இதனை தொடர்ந்து கிளர்ச்சியாளர்கள் வெளியேறி வருகின்றனர். டமஸ்கஸில் இருந்து 15 கிலோ மீற்றர் தொலைவில் கிளர்ச்சியாளர்களின் பிரதான கோட்டையாக இருந்த பகுதி தற்போது வெறிச்சோடி காணப்படுகிறது. இது பற்றிய ரஷ்சியா செய்தி நிறுவமான டாஸ் கூறும் போது ஆறாயிரத்து 800 கிளர்ச்சியாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் கிழக்கு கூட்டாவிலிருந்து வெளியேறி இத்லிப் சென்ற தாக குறிப்பிட்டுள்ளது.

மறுமுனையில் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாகவும் அதேநேரம் ஐ.எஸ் இயக்கத்திற்கு எதிராகவும் சிரியாவில் யுத்த நடவடிக் கையில் ஈடுபட்ட அமெரிக்க இராணுவம் விரைவில் வெளியேற உள்ளதாக ட்ரம்ப் 2018ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தின் ஆரம்பத்தில் தெரிவித்தார். இப்பின்னினியில் சிரியாவில் அமெரிக்காவிற்கு ஏற்பட்டுள்ள பின்னடைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்காசியா அரசியல் அதிகார சமநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை உணரமுடியும்.

கிழக்கு கவுட்டாவை கைப்பற்ற கிளர்ச்சியாளர்களுடன் 2018 ஆம் ஆண்டின் அமெரிக்கா தனது ஆதிக்கத்தினை தொடர்ந்து நிலைநிறுத்த நேரடி மறைமுக போர்களில் ஈடுபட்டு வருகிறது. இது இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் அமெரிக்கா பின்பற்றி வரும் கொள்கையாகும். சோவியத் யூனியனின் உடைவிற்கு பின்னர் இத்தகைய கொள்கை தீவிரமடையத் தொடங்கியது. இதன் ஒரு அங்கமாகவே மேற்காசியா மீது இராணுவ மேலாண்மை பயன்படுத்தத் தடையற்ற சுதந்திரமும் எண்ணெய் உற்பத்தி செய்யும் மூலோபாய கொள்கையையும் வகுத்துக் கொண்டது. இவ்வாறே பொஸ்னியா, கொசோவோ, ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் லிபியா போன்ற நாடுகளில் அமெரிக்கா தனது தலையீடுகளை மேற்கொண்டது. இதன் ஒரு பகுதியாகவே சிரியாவின் மீதான தலையீட்டை அமெரிக்கா கருதியது.

அமெரிக்காவின் தலைமையில் மேற்கு நாடுகளும் சவூதியின் தலைமையில் வளைகுடா நாடுகளும் சிரியா ஜனாதிபதி ஆசாத்தை ஆட்சியில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களுக்கே முன்னுரிமை கொடுத்து வந்தன. இதனால் அமெரிக்கா சிரியா விவகாரத்தில் வளைகுடா நாடுகளுடன் கூட்டுச்சேர்ந்து பல இராஜதந்திர ரீதியான செயற்பாடு களையும் இராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்தது. அதன் அடிப்படையில் சர்வதேச ரீதியாக சிரியா அரசின் மீது தனது கண்டன கருத்துக்களை பதிவு செய்தது.

**வளைகுடா நாடுகள்**




படம் –04

அவ்வாறே சர்வதேச ஸ்தாபனங்களில் சிரியாவிற்கு எதிரான தீர்மானங்களினை கொண்டு வருவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனம் எடுத்தது. மேற்காசியா பிராந்திய அமைப்புக்களிலிருந்து சிரியா அரசின் அங்கத்துவத்தினை நீக்குவதற்கு முயற்சித்தது. சிரியா அரசுடனான அமெரிக்க நட்பு நாடுகளின் தூதரக உறவுகளை துண்டிக்க தூண்டியது. சிரியா மீது அரசியல், பொருளாதார ரீதியான தடைகளை விதித்தது, இதனால் சிரியா ஜனாதிபதி அல் ஆசாத் பதவி விலக ஏற்றவகையில் தொடர்ச்சியான நிர்ப்பந்தங்களை அமெரிக்கா ஏற்படுத்தியது.

அமெரிக்காவின் செல்வாக்குட்பட்ட மேற்காசியா பிராந்தியத்தி லுள்ள சிரியாவின் எல்லையோர நாடுகளில் சிறு சிறு படைப்பிரிவினை நிறுத்தி வைத்ததுடன், சிரியா அரச மற்றும் இராணுவ மட்டத்திலான அதிகாரிகளுக்கிடையே பிரித்தாளும் கொள்கையை பின்பற்ற முயன்றது. சிரியா போராட்டத்தில் ஈடுபடும் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங் களையும் இராணுவ ஆலோசனைகளையும் வழங்கியதுடன் சிரியா அரசு இரசாயன ஆயுதங்களை பிரயோகிப்படுத்தியது என்ற பிரச்சாரத்தை தீவீரப்படுத்தியது.

எனினும் அமெரிக்காவினால் எதிர்பார்த்த இலக்கினை அடைய முடியாது போனது. காரணம் ரஷ்சியா – சிரியா கூட்டின் உத்திகளும் விடாப் பிடியான தாக்குதல்களும் போரில் பலமடைய வழிவகுத்தது ரஷ்சியாவின் இராணுவத் தலையீட்டினால் அமெரிக்கா எதிர்பார்த்த நோக்கமும் அதன் இலக்கும் சிரியாவில் எடுபடாமல் போனது. இது அமெரிக்காவிற்கு மிகப் பெரியவொரு இராணுவ பின்னடைவாகக் கருத முடியும். சிரியாவில் அமெரிக்கா மேற்கொண்ட ஒவ்வொரு இராணுவ நகர்வும் ரஷ்சியாவினால் தடுத்து நிறுத்தப்பட்டது. சிரியா– ரஷ்சியா – ஈரான் கூட்டும் அமெரிக்கா விற்குப் பாரிய இடையூறாக அமைந்தது. அத்துடன் அமெரிக்காவிற்கு சார்பாக ஐரோப்பிய நாடுகளும் இராணுவ ரீதியாக அணி திரளாமையும் அமெரிக்காவிற்கு பெரும் பாதிப்பை சிரியா விவகாரத்தில் உண்டு பண்ணியது. நீண்ட காலமாக அமெரிக்கா வின் இராணுவ அரசியலுக்கு பக்கபலமாக இருந்த ஐரோப்பிய நாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரியா விவகாரத்தில் தங்களின் ஆதரவை மௌனித்துக் கொண்டமை யானது உலக வல்லரசாக மாறத்துடிக்கும் ரஷ்சியாவிற்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கு வலுச்சேர்க்கும் விதத்தில் ட்ரம்பின் சிரியாவில் நிறுத்தப் பட்டுள்ள அமெரிக்கா இராணுவ வெளியேற்றம் பற்றிய அறிவிப்பு அமைந்துள்ளது. ஐ.எஸ் தீவிரவாதிகளை அழிப்பதாக கூறி அமெரிக்கா இராணுவம் சிரியாவில் முகாமிட்டு வருகிறது. சிரியாவில் சுமார் 2000க்கும் மேற்பட்ட அமெரிக்க இராணுவ வீரர்கள் ஐ.எஸ் தீவிரவாதி களுக்கு எதிராகப் போரிட்டு வருகின்றன. எனினும் ஐ.எஸ் இயக்கத்தி னரிடம் இருந்த அலெப்போ உள்ளிட்ட நகரங்களை சிரிய அரசு மீண்டும் கைப்பற்றியுள்ளது. ஐ.எஸ் இயக்கத்தினரை முற்றிலும் ஒழித்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் அமெரிக்காவின் ஓகியோ மாநிலத்தில் 30.03.2018 இடம்பெற்ற நிகழ்வில் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ட்ரம்ப் "சிரியா போரிலிருந்து அமெரிக்கா வெகுவிரைவில் வெளியேறும்"என்று கூறிப்பிட்டார்.

அங்கு மேலும் உரையாற்றிய ட்ரம்ப் சிரியாவில் நமது படைகள் ஐ.எஸ் பயங்கரவாதிகளை வீழ்த்திக் கொண்டிருக்கிறது. பயங்கர வாதிகளும் தோல்வியடைந்து விட்டார்கள். சிரியாவிலிருந்து ஐ.எஸ் தீவிரவாதிகளை ஒழிக்க அமெரிக்க இராணுவம் தனது அனைத்து வளங்களையும் பயன்படுத்தி வருகிறது. சிரியாவில் உள்ள ஐ.எஸ் தீவிரவாதிகளை மரணத்தின் கதவை நாம் தட்ட வைத்துள்ளோம். அவர்களால் "மதப் பேரரசு" என்று அழைக்கப்படும் பகுதியை விரைவில் மீட்டுப்போம். அந்தப் பணியை முடித்து விட்டு, அமெரிக்காவும் சிரியாவில் நடந்து வரும் போரிலிருந்து முழுமையாக வெளியேறும்.

தொடர்ந்து ட்ரம்ப் உரையாற்றுகின்ற போது மத்தியகிழக்கு நாடுகளில் அமெரிக்கா இராணுவம் முகாமிட்டு போரிட்டு வருகிறது. மத்திய கிழக்கு நாடுகளில் போருக்காக நாம் 7 லட்சம் கோடி டாலரை (சுமார் ரூ 4.55 லட்சம் கோடி) வீணாக செலவழித்து விட்டோம். ஆனால் நாம் திரும்ப பெற்றது எவ்வளவு? ஒரு டாலர் கூட இல்லை. அங்கு நாம் ஒரு பள்ளியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுவோம். அவர்கள் (தீவிரவாதிகள்) மீண்டும் அழிப்பார்கள். இப்படியே தான் நடந்து வருகிறது. நம்முடைய ஒஹியோவின் பள்ளியில் ஒரு ஜன்னலை அமைப்பதற்கு கூட நம்மால் நிதியை திரட்ட முடியவில்லை. இதேபோல தான் பென்சில வேனியா மற்றும் ஐயோவாவில் பள்ளியை அமைக்க நிதி கிடைப்பதில்லை. அதேவேளை மத்திய கிழக்கில் போரிட்டதற்கு பலனாக எண்ணெய் கூட கிடைக்கவில்லை. மாறாக ஐ.எஸ் தீவிரவாதி களுக்கு தான் அதிகமாக எண்ணெய் மூலம் வருமானம் பெறுகின்றனர். அவர்களுக்காக நாம் ஏன் அங்கு பணத்தை முதலீடு செய்ய வேண்டும் என கேள்வியெழுப்பிய அவர் அது முட்டாள் தனமான செயல் என தெரிவித்தார்.

எனினும் சிரியாவில் ஐ.எஸ் பயங்கரவாதிகளை முற்றிலிலுமாக அழிக்கும் முக்கிய கடமை அமெரிக்காவுக்கு இன்னும் உள்ளதாக அந்த நாட்டு பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தார். இது குறித்து அந்த அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் டானா ஒயிட் கூறியதாவது: சிரியாவில், கடந்த ஒராண்டுக்கு முன்பு இருந்த அளவுக்கு, தற்போது ஐ.எஸ் பயங்கரவாதிகள் பலசாலிகளாக இல்லை. அவர்கள் கைப்பற்றிய பகுதிகள் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டு நிர்மூலமாக்கப்பட்டிருக் கின்றன. எனினும் அந்த அமைப்பால் அமெரிக்காவுக்கும் பிறநாடுகளுக் கும் உள்ள அச்சுறுத்தல் இன்னும் முழுமையாக அற்றுப் போகவில்லை. எனவே, ஐ.எஸ் பயங்கரவாதத்தை சிரியா மண்ணிலிருந்து முற்றிலிலுமாக ஒழிக்க வேண்டிய கடமை நமக்கு இன்னும் இருக்கிறது என்றார் செய்தித் தொடர்பாளர்.

அமெரிக்காவின் இராணுவ ஆதரவை ஐ.நா உட்பட உலகநாடுகள் பல ஆண்டுகளாக தொடர்ந்து விமர்சித்து வந்த நிலையில் குறித்த அமெரிக்கா ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு செயலாளரின் சிரியாவிலிருந்து அமெரிக்கா இராணுவத்தின் வெளியேற்றம் தொடர்பான அறிக்கைகள் முக்கியம் வாய்ந்தாக காணப்படுகிறது. ரஷ்சியா – சிரியா கூட்டு சிரிய யுத்தத்தில் பெற்று வருகின்ற இராணுவ ரீதியான வெற்றிகள் காரணமாக தனது இராணுவத்தினை வெளியேற்றும் நிர்ப்பந்தம் ஏற்பட்டாலும் அதன் மூலம் ரஷ்சியா – சிரியா கூட்டு மனிதாபிமான மற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற என்று குற்றச்சாட்டி வருகின்றது. இத்தகைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜதந்திரத்தினை கையாண்டு எதிர் காலத்தில் ரஷ்சியாவிற்கு நெருக்கடியினை ஏற்படுத்த அமெரிக்கா திட்டமிடுகிறது.

உலக வல்லரசு ஒன்று தனது அரசியல் பொருளாதார நலன்களை மையமாக கொண்டு மேற்கொள்ளும் யுத்தங்களுக்கு வரவு செலவுக் கணக்கின் அடிப்படையில் செயற்படுவதில்லை. பிராந்தியத்தில் ஏற்படும் இழப்பீடு இன்னோர் பிராந்தியத்தில் அல்லது பிற பிராந்தியத்தில் பாரிய இலாபத்தினை ஏற்படுத்தும். ஆனால் எல்லாவற்றிற்கும் அரசியல் அதிகாரம் மிக அவசியமானது. ஆனால் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் கணீப்பீடு விநோதமானது. அவர் அடிப்படையில் வியாபார சிந்தனை கொண்டவர். அதிகாரத்தினையும் வரவு செலவுக்குகணக்காக அளக்க முயற்சிக் கின்றார். இதுவே அமெரிக்காவின் தோல்விக்கு பின்னால் உள்ள காரணம் அவரின் சிரியா இராணுவ வெளியேற்றம் குறித்த அறிக்கை அமெரிக்கா வின் வல்லாதிக்க தன்மையை பலவீனப்படுத்தும் ஒன்றாகவே அமையும்.

21 ஆம் நூற்றாண்டில் உலக வல்லரசு தன்மையை பேண விரும்பும் நாடு ஆசியா பிரதேசத்தினை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருதல் என்பது தவிர்க்க முடியாதது. எனவே மேற்காசியா அரசியல் சூழலை தனக்கு ஏற்ப ஒன்றாக மாற்றிக் கொள்ளுவதற்கு தேவையான அனைத்து இராஜதந்திர நடவடிக்கைகளையும் அமெரிக்கா சளைக்காது மேற் கொண்டு வருகின்றது. எனினும் அவை பலத்த சவாலுக்கு உட்பட்டு வருகின்றன. சிரியாவில் ரஷ்சியா – சிரியா கூட்டுவின் வெற்றியே அதனை சவாலுக்குட்படுத்தியுள்ளது. மேற்காசியா அரசியல் அதிகார சமநிலையில் அமெரிக்காவின் சிரியா மீதான பின்னடைவு பாரிய மாற்றங்களை ஏற்படுத்தலாம். மேற்காசியா அரசியலினை பொறுத்த வரை அமெரிக்கா வின் ஒருதுருவ அரசு நிலையில் மீளமுடியாத அளவு பின்னடைவை சிரிய யுத்தம் ஏற்படுத்தியுள்ளது. ரஷ்சியா – சிரியா கூட்டின் வெற்றியின் மூலம் இனி மேற்காசியா அரசியலை தீர்மானிக்கும் சர்வதேச சக்தியாக ரஷ்சியாவும் பிராந்திய சக்தியாக அதன் நட்பு நாடான ஈரானும் சிரியாவும் விளங்கும்.

**07.04.2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியா மீதான அமெரிக்க கூட்டுப்படையின் தாக்குதல் மேற்காசியாவில் பிராந்திய போட்டிக்கு வழிவகுத்துள்ளது

அரபுக்கள், ஈரானியர்கள், துருக்கியினர், யூதர்கள், குர்திஷ்கள், எனப் பலதரப்பட்ட இனங்கள் ஆயிரக்கணக்கான இனக் குழுமங்கள் போன்றவற்றை கொண்ட இயற்கை வளம் மிக்க மேற்காசியாவில் மன்னராட்சி, மக்களாட்சி, மதவாத ஆட்சி, தன்னதிகாரிகளின் ஆட்சி, எனப் பல விதமான ஆட்சிகள் இருப்பதால் அங்கு சிக்கலுக்கு குறைவில்லை. பிராந்திய வல்லரசுகளுக்கு இடையிலும் உலக வல்லரசுகளுக்கும் இடையிலான போட்டி அந்த சிக்கல்களை மேலும் மோசமாக்கின்றது. குறிப்பாக சிரியாவின் உள்நாட்டு யுத்தத்தினை மையமாக வைத்து ஏற்பட்டுள்ள இப்போட்டி மினி உலக யுத்தத்தினையே ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது. கிட்டத்தட்ட இருபது சர்வதேச பிராந்திய நாடுகளின் தலையீடு மூன்றாம் உலக யுத்தத்திற்கு வித்திடும் ஒரு நடவடிக்கையாக எதிர்வு கூறப்படுகிறது. உலகின் சக்தி வாய்ந்த நாடுகள் சிரியா விவகாரத்தில் இரு அணிகளாக பிரிந்து நிற்கின்றன. இப் பின்னணியில் சிரியப் போர் மற்றும் அப்போரில் மேற்காசியா நாடுகளின் பிராந்திய போட்டியும் மேற்காசிய அரசியலில் ஏற்படுத்தவுள்ள தாக்கங்கள் தொடர்பாகவும் அறிந்து கொள்ள முடியும்

அரபு வசந்தம் மேற்காசிய முழுவதும் மிகத் தீவிரமான மாற்றத்தை ஏற்படுத்தி வந்தது. பெருமளவுக்கு அமெரிக்காவுக்கு எதிரான தரப்புக்களை அழித்து சார்பான தரப்பினை ஆட்சியில் அமர்த்துவதற்கான நடவடிக்கையாகவே அரபு வசந்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன் நலனினை கட்டுப்படுத்தவும் சிரியாவின் முக்கியத்துவத்தையும் உணர்ந்த ரஷ்சியா, சீனா போன்ற ஐ.நா பாதுகாப்பு சபை நாடுகள் அமெரிக்காவுக்கு போட்டியாக செயல்பட்டு வருகின்றன. ஏறக்குறைய சிரியா அமெரிக்க தரப்பின் மேற்காசியா மீதான எண்ணத்தை தடுக்கும் மையமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கொக்குவில் பொது நூலகம்
நல்லூர் பிரதேச...



விளங்குகின்றது. சிரியாவை கடந்து அமெரிக்க அரபு வசந்தம் செயல்பட முடியாத நெருக்கடி நிலையானது ரஷ்சியாவினால் ஏற்படுத்தப்பட்டது.

2011 இல் கிளர்ச்சிப் படைகளுக்கும் சிரியாவின் அரச படை களுக்கும் இடையில் ஆரம்பித்த போர் சிரியாவின் துறைமுகமான **tartus** இனை ரஷ்சியா தன் வசப்படுத்தியதன் பின் வல்லரசு போராக மாறியது. சிரியாவின் துறைமுகமானது ரஷ்சிய கடற்படைத்தளமாக அமைந்திருக்கின்றது.

Tartus




படம் -05


சிரியா யுத்தம் முடிவின்றி தொடர பிராந்திய சக்திகளின் அதிகாரப் போட்டியே வலுவானதாக காணப்படுகின்றது. இத்தகைய போட்டிக்கு அமெரிக்கா – ரஷ்சியா என்பனவும் அவற்றின் நலன்களும் இன்னோர் காரணமாக கொள்ள முடியும். இக்கருத்தினை வலுவூட்டும் விதத்தில் ஐக்கிய அமெரிக்கா முன்னாள் இராஜாங்கச் செயலாளர் கொலின் பாவெலின் ஆலோசகராக இருந்த லோரன்ஸ் விலக்சன் மூன்றாம் உலகப் போர் ஒன்று எதிர்நோக்கப்படுமாயின் அது இஸ்ரேலின் தூண்டுதலாயே நடைபெறும் என்ற அவரின் எச்சரிக்கை அமைய பெற்றது. மேலும் 2018 ஏப்ரல் 09 திகதி இஸ்ரேல் நிகழ்த்தியதாக கூறப்படும் ஏவுகணை தாக்கு தலினையும் 15.04.18 அமெரிக்கா சார் நாடுகளின் கூட்டுபடை தாக்கு தலையும் குறிப்பிட முடியும். பிரதானமாக அமெரிக்கா சார்பு மேற்காசியா நாடுகளான இஸ்ரேல், சவுதி அரேபியாவும் ரஷ்சியா சார்பு நாடுகளான ஈரான், சிரியா என்பனவும் பிராந்திய வல்லரசிற்கான அதிகாரப் போட்டியில் ஈடுபடுவதன் பிரதிபலிப்பே சிரியா யுத்தம் தொடர காரணமாகின்றன.

“மேற்காசிய பிராந்தியத்தில் இஸ்ரேல் வலிமையான விமானப் படையினை கொண்டு இயங்குகின்றது இது லெபனான் மீதும் பலஸ்தீனத்தின் மீதும் தனது ஆதிக்கத்தினையும் ஆக்கிரமிப்பையும் செயற்படுத்தி வருகிறது. ஏறக்குறைய இஸ்ரேலுக்கு சமமாக மேற்காசியாவில் விமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SCUD




படம் -06

எதிர்ப்பு ஏவுகணைகள் கொண்ட நாடாக சிரியாவை ரஷ்சியா மாற்றியிருக் கின்றது சிரியாவிடம் சிறந்த ஏவுகணைகள் மட்டுமன்றி நீண்ட தூரம் சென்று தாக்கக் கூடிய ஸ்கட் (SCUD) ஏவுகணைக ளையும் கொண்டுள்ளது. 2013 இல் அமெரிக்காவின் எதிர்ப்புக்களையும் புறக் கணித்து ரஷ்சியா சக்தி வாய்ந்த உயர் ரக விமான எதிர்ப்பு ஏவுகணை தளத்தினை சிரியத் தலைநகர் டமஸ்கஸில் நிறுவியது. இராணுவ வரலாற்றில் எஸ் – 300 ரக ஏவுகணை அதி நவீனத்துவம் வாய்ந்ததாகும். இதன் வலு இஸ்ரேல், அமெரிக்கா நாடுகளின் எதிர் தாக்குதல்களை சிரிய அரசு முறியடிக்கும் நிலைக்கு உயர்ந்தியது."

"லெபனான் மற்றும் பாலஸ்தீன நாடுகளின் விடுதலை போராளிகளான ஹிஸ்புல்லா மற்றும் ஹமாஸ் போன்ற அமைப்புக் களுக்கும் சிரியாவிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இவ்நெருங்கிய உறவு மேற்காசியாவில் இஸ்ரேலின் விமானப்படை ஆதிக்கத்தினை கேள்விக் குட்படுத்தும் அளவு வளர்ந்துள்ளது. எனவே இஸ்ரேலை அழிக்க நினைக்கும் ஹிஸ்புல்லா அமைப்பைப் பலவீனப்படுத்தி லெபனானைக் கட்டுப்பாட்டுக் குள் கொண்டு வந்து இஸ்ரேலின் பாதுகாப்பை உறுதி செய்து சிரியாவைக் கட்டுக்குள் வைத்திருப்பது அவசியம் என இஸ்ரேலும் அமெரிக்காவும் கருதுகின்றன. யூத தேசியவாதத்தை சவாலுக்குட்படுத்தும் ஒன்றாக ஈரான் – சிரியா நாடுகளின் அரபு தேசியவாத்தை இஸ்ரேல் கருதுவதால் அவ்சவாலை முறியடிக்க சிரியா போரில் தலையீடு செய்கின்றது."

மேலும் கலாநிதி கே.ரீ. கணேசலிங்கம் அவர்கள் கடந்த டிசம்பர் மாதம் இப்பத்தியில் "மேற்காசிய விவகாரத்தில் அமெரிக்காவுக்கும் – இஸ்ரேலுக்கும் இடையில் சரியான புரிந்துணர்வு உள்ளது. தெளிவான உடன் பாட்டுடன் பயணிக்கின்ற இரு நாடுகளும் பரஸ்பரம் ஒத்துழைத்து மேற் காசியாவை கையாளுகின்றனர். சிரியாவின் இராணுவத்தளம் மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரேல் தொடர்ச்சியாக தாக்குதலை மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் ஈரானின் அணுவாயுத பரிசோதனையை கணிணிகள் மூலம் அழித்தது மட்டுமன்றி ஈரான் அணு உலைகள் மீது தாக்குதல் செய்து இஸ்ரேல் அழித்த தனை கருத்தில் கொள்ளுதல் வேண்டும். எனவே மேற்காசிய அரசியலில் அவ்வப்போது செயல்பட்டு வந்த இஸ்ரேல் தற்போது முழுமையாக ஈடுபடத் திட்டமிடுவதனை காணமுடிகின்றது. மேற்காசியாவின் அரசியலை யூதர் களிடம் ஒப்படைத்துவிட்டு கண்காணிப்பினை மட்டும் செய்து கொண்டு கிழக்காசியாவில் பலமாகச் செயல்பட அமெரிக்கா திட்டமிடுகிறது." எனக் கூறியிருந்தார். அக்கூற்றை நிருபீக்கும் வகையிலே அண்மைய தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

சவூதி அரேபியாவினை பொறுத்தவரை சிரியா மீதான அதன் தலையீடு என்பது சிரியாவின் சர்வாதிகாரம், அடக்கு முறைக்குட்பட்ட ஆட்சி என்பவற்றை எதிர்க்கின்றது. இதனுடைய அர்த்தம் மக்களுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதும் ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க சிரிய மக்களுக்கு உதவுவதும் என்று இல்லை. மன்னர் ஆட்சிக்கும் சர்வாதிகாரத்திற்கும் மேற்காசியாவில் மற்றொரு அடையாளமாக விளங்கும் சவூதி அரேபியா ஜனநாயகப் போராட்டங் களை ஆதரிக்கும் அரசியல் பக்குவத்தைப் பெற்றுள்ளதாக வாதிட வாய்ப்பில்லை.

வளைகுடாவிலும் முழுப் பிராந்தியத்திலும் மேலாண்மை பெற்று வரும் சவூதி அரேபியாவின் வல்லமைக்கு ஈரானின் சிரியத் தொடர்பு பெரும் சவாலாகவுள்ளது. சிரியாவிலும் மற்றும் சில அரபு நாடுகளிலும் ஈரானின் வளர்ந்து வரும் தொடர்புகள் நீண்ட காலத்தில் அரபு கலாசாரத் திலும் பிராந்திய மேலாண்மையிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்து மென்று சவூதி அரேபியாவும் அமெரிக்க சார்பு வளைகுடா நாடுகளும் அஞ்சுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரியா முரண்பாடு வெறும் உள்நாட்டு முரண்பாடு அல்ல. சவூதி அரேபியாவுக்கும், ஈரானுக்குமான பலப்பரீட்சை நடக்கும் யுத்த களமாக சிரியா இன்று மாறியுள்ளது. சிரியாவின் ஷியாக்களுக்கு பாதுகாப்பளிக்க ஈரான் தயாராகவுள்ளது. ஷன்னிக் கிளர்ச்சியாளர்களுக்கு சவூதி நிதி உதவிகளையும் ஆயுத உதவிகளையும் வழங்கி வருகின்றது. 2014 ஆம் ஆண்டில் அமெரிக்காவுடன் இணைந்து சிரியாவில் உள்ள ஐ.எஸ் தளங்களின் மீது எட்டு தடவைக்கு மேல் வான் தாக்குதலைகளையும் மேற்கொண்டது. அத்துடன் அமெரிக்க உட்பட மேற்கு நாடுகளின் இராஜதந்திர மற்றும் இராணுவ நடவடிக்கைகள் மூலமாக ஷன்னி முஸ்லீம்களை ஆட்சியாளர்காளாக்கி விடலாம் என்று சவூதி அரேபியா அதற்காக போராடுகிறது. இதுவே சிரியா மீதான அமெரிக்க தலையீட்டிற்கு சவூதி அரேபியா உதவ அடிப்படையாக அமைந்துள்ளது.

மேற்காசியாவில் ஈரானின் மிகச்சிறந்த நட்பு நாடாக சிரியா காணப்படுகிறது. ஷியா மதக்கொள்கையினை பின்பற்றுபவர்கள் எனும் ஒரு மார்க்க ரீதியான பிணைப்பும் இரு நாடுகளுக்கிடையில் நிலவுகிறது. மேற்காசியா பிராந்தியத்தில் அணுசக்தி கொண்ட நாடாக ஈரான் விளங்கு கிறது. ரஷ்சியாவுடன் சிறந்த அரசியல் பொருளாதார உறவுகளையும் பேணி வருகின்றது. ஆசாத்தின் சிரியா இராணுவத்திற்கு உதவி செய்வதுடன் அதற்கு தேவையான ஆயுதங்களையும் பொருளாதார உதவியையும் வழங்கி வருகிறது. அதுமட்டுமல்ல, தனது நாட்டில் இருந்தே சிரியாவில் செயல்படும் கிளர்ச்சி அமைப்புக்களின் மீது ஏவுகணை தாக்குதல்களை நடத்தியும் வருகிறது. ஆசாத்க்கு சார்பாக ரஷ்யாவுடன் இணைந்து போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. சிரியா அரச தரப்புக்கு ஈரானின் ஆதரவானது தீவிர இஸ்ரேல் எதிர்ப்புடன் தொடர்புடையது. அத்துடன் ஷியா மத கொள்கை அடிப்படையிலும் அமெரிக்காவின் நட்பு நாடு எனும் சவூதி அரசு என்ற அடிப்படையிலும் சிரியா யுத்தத்தில் ஈரான் தலையிட முனைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மேற்காசிய நாடுகளின் சிரியா யுத்தம் மீதான ஈடுபாடு என்பது இஸ்ரேலின் பிராந்திய ஆதிக்கத்திற்கு சார்பானதும் எதிரானதுமான ஒன்றாக காணப்படுகின்றது. அமெரிக்க மேற்குலக நாடுகளின் உதவியுடன் சவூதி அரேபியாவின் ஒத்துழைப்புடன் மேற்காசிய பிராந்தியத்தில் இஸ்ரேலின் ஆதிக்கத்தினை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளில் ஒன்றாக அண்மைய அமெரிக்க தலைமையிலான கூட்டுப்படைகளின் தாக்குதலினை குறிப்பிட லாம். அதே வேளை ரஷ்சியா ஆதரவுடன் அதனை சவாலுக்குட்படுத்தும் விதத்தில் ஈரான் செயல்பட்டு வருகின்றது. இதற்கு சான்றாக சிரியா மீதான அமெரிக்கா படைகளின் தாக்குதலினை கடுமையாக கண்டித்துள்ளது. ஈரான் நாட்டின் மிக முக்கியமான மதத்தலைவரும் ஆட்சி பொறுப்பில் இல்லா விட்டாலும் அந்நாட்டு அரசின் முடிவுகளில் அதிகாரம் மிக்கவருமான அயாத்துல்லா அலி கொமேனி “சிரியா மீது நடத்தப்பட்ட தாக்குதல் குற்றச் செயலாகும்.“ என தெரிவித்தார் இந்த குற்றத்தை இழைத்த அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், பிரிட்டன் பிரதமர் தெரசாமே மற்றும் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் ஆகியோரை குற்றவாளிகள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



**அலி கொமேனி**
**மதத் தலைவர்**

சிரியா யுத்தத்தை மையமாக வைத்து மேற்காசியாவில் அரங்கேறும் சர்வதேச மற்றும் பிராந்திய நாடுகளின் அதிகாரப் போட்டி யானது பல தாக்கங்களை ஏற்படுத்தவுள்ளது. மேற்காசியா அரசியலை தீர்மானிக்கும் இரு சர்வதேச சக்திகளாக ரஷ்சியாவும் அமெரிக்காவும் விளங்கும் அதே வேளை பிராந்திய சக்திகளாக ஈரானும் இஸ்ரேலும் காணப்படுகின்றன.

ஷியா ஷன்னி மதப் பிரிவினைகளுக்கு இடையிலான மோதல் கள் மற்றும் அதன் அடிப்படையில் தமது ஆதிக்கத்தை தக்க வைப்பதற்கு முனையும் இஸ்ரேலினதும் அமெரிக்காவினதும் செயற்பாடுகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியிலேயே மேற்காசியா பிராந்தியத்தின் அரசியல் நிலைமைகள் மோசமாக்கப்பட்டு வருகின்றன.

தற்போதைய நிலைமையின் அடிப்படையில் உலகின் ஒட்டு மொத்த முஸ்லீம்களில் 85–90 வீதம் ஷன்னி முஸ்லீம்கள் எனவும் 10 – 15 வீதம் ஷியா பிரிவைச் சேர்ந்தவர்கள் எனவும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இவ்விபரங்கள் ஒவ்வொரு நாட்டினதும் அரசியல் மற்றும் பிராந்திய அரசியலில் செல்வாக்கு செலுத்துகின்றன. அதன் விளைவே சவூதி அரேபியாவுக்கும் ஈரானுக்கும் இடையிலான நிழல் யுத்தம், அரபு வசந்தம் மற்றும் சிரியா யுத்தம் ஆகும். இந்நிலையில் மேற்காசியாவில் குறிப்பாக சிரியாவுக்கும், ஈரானுக்கும் எதிராக ஏதாவது நடவடிக்கையை மேற்கொள்ள இஸ்ரேல் தலைப்படுமாயின், அது மூன்றாம் உலகப் போருக்கு இட்டுச் செல்வது தவிர்க்க முடியாதது.

எண்ணெய் வளம் மிக்க மேற்காசியாவில் இடம்பெற்று வரும் சிரியா போர் ஆனது சர்வதேச அரசியலில் பாரிய நெருக்கடியை அரசியல் பொருளாதார ரீதியாக ஏற்படுத்தவுள்ளது. அமெரிக்காவினை பொறுத்த வரை மேற்காசியாவில் இஸ்ரேலின் ஆதிக்கத்தினை உறுதிப்படுத்துவதன் மூலம் ரஷ்சியா மற்றும் சீனாவின் நலன்களை சவாலுக்குட்படுத்த முற்படுகின்றது. சீனா மற்றும் ரஷ்சியாவிற்கு மேற்காசிய எண்ணெய் வளம் மிகவும் அவசியமானது. சிரியாவை மையமாக வைத்து மேற்காசியாவில் அரங்கேறும் போர் சூழ்நிலைகள் சீனா, ரஷ்சியா நாடுகளின் எண்ணெய் வளம் சார்ந்த நலன்களை பாதிப்படையச் செய்யும். எனவே இரு நாடுகளும் அதனை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சிக்கும். இது மேற்காசியா பிராந்தியத்தின் சூழலை எப்பொழுதும் கொதிநிலைக்குள் வைத்திருக்க போகின்றமை தவிர்க்க முடியாது.

**21.04.2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்குலகு – இஸ்ரேல் தந்திரமும் சிரியா – பாலஸ்தீன விவகாரமும்

பெருமளவு மேற்காசியாவை மையம் கொண்டு அமெரிக்க சார்பான மேற்குலக நாடுகளால் உருவாக்கப்பட்டதே அரபு வசந்தம். அரபு வசந்தம் மேற்காசிய அரசியலை வேறு ஒரு பரிமாணத்திற்கு பயணிக்க வைத்துள்ளது. இது தமக்கு சார்பான மேற்காசிய ஆட்சியாளர்களை ஆட்சி பீடத்தில் அமர்த்துவதன் மூலம் அப்பிராந்தியத்தின் பொருளாதார வளங் களை சுரண்டுவதுடன் இஸ்ரேலின் நலன்களை பாதுகாக்க முயற்சிக்கிறது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக எகிப்து, லிபியா போன்ற நாடுகளில் அரபு வசந்தத்தின் மூலம் இஸ்ரேலுக்கு சார்பான ஆட்சியாளர்களை முன் நிறுத்துவதில் மேற்குலகம் வெற்றி கண்டுள்ளது. அவ்வாறே சிரியாவில் ஆட்சி கவிழ்ப்பிற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எனினும் அம்முயற்சி தோல்வியை நோக்கி எதிர்கொள்கிறது. சிரியா, இஸ்ரேல் எல்லை யோரத்தில் அமைந்துள்ள தீவிர எதிர்ப்பு நாடு ஆகும். இதன் பின்னணியில் சிரியா விவகாரமும் ஏப்ரல் மாதத்தின் இறுதியில் இடம்பெற்ற பாலஸ்தீனர்களின் மீதான தாக்குதலும் இஸ்ரேலின் பாதுகாப்பை தக்கவைப்பதானது என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

இஸ்ரேலின் இருப்பு என்பது அரபு வசந்தம் உருவாகுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே அசைக்கமுடியாத ஒன்றாகிவிட்டது. அரபு வசந்தம் ஆரம்பித்த பின்னர் பல சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் இஸ்ரேலுக்கு அது ஆபத்தான ஒன்றாக அமையும் என எச்சரித்தார்கள். மேற்குக்கரையில் இருக்கும் பாலஸ்தீனியர்கள், லெபனானிலிருந்து செயற்படும் ஹிஸ்புல்லா அமைப்பு, காசா நிலப்பரப்பில் செயற்படும் ஹமாஸ் அமைப்பு ஆகிய வையே இஸ்ரேலுக்கு அச்சுறுத்தல் விளைவிக்கக் கூடியவையாக இருக்கின் றன. அரபுவசந்தம் சிரியாவிற்கு பரவியதுடன் ஷியா முஸ்லீம்களுக்கு ஷன்னி முஸ்லீம்களுக்கும் குர்திஷ் மக்களுக்கும் இடையிலான போராக மாறிய போது ஈரானின் நிர்ப்பந்தத்தின் பேரில் ஹிஸ்புல்லா அமைப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரியா அரச படைகளுடன் இணைந்து போரடத் தொடங்கினர். எனினும் வளைகுடா நாட்டு ஆட்சியாளர்களும் செல்வந்தர்களும் சிரியா அதிபர் பஷார் அல் ஆசாத்தை ஆட்சியில் இருந்து அகற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டதனால் இஸ்ரேலுக்கான அச்சுறுத்தல்கள் ஒரளவு குறையத் தொடங்கியது. ஆனால் ஈரானின் சிரியா மீதான தீவிர ஈடுபாட்டுடன் கூடிய சிரியா அரச தரப்பின் வெற்றி மீண்டும் இஸ்ரேலுக்கான அச்சுறுத்தலுக்கான வாய்ப்பை அதிகரித்தது. இதனால் இஸ்ரேல் தனது இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள ஆரம்பித்தது.



பஷார் அல் ஆசாத
19 வது சிரிய ஜனாதிபதி
2000 ஆம் ஆண்டிலிருந்து


அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் ஜெருசலேத்தினை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்தல் மற்றும் அமெரிக்கா தூதரகத்தினை ஜெருசலேத்திற்கு மாற்றுவது பற்றிய அறிவிப்பு இஸ்ரேலின் இருப்பு தொடர்பான நடவடிக்கைக்கு முதல் ஆரம்பமாக அமைந்தது. எனினும் இந்நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்த பாலஸ்தீனியர்கள் போராட்டங்களில் ஈடுபடத் தொடங்கினர். ஆனால் இஸ்ரேல் அப்போராட்டங்கள் மீது தனது தாக்குதல் நடவடிக்கையை மேற்கொள்ள ஆரம்பித்தது. காசா எல்லையோரத்தில் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனர்கள் இஸ்ரேலை எதிர்த்து மார்ச் இறுதியில் பேரணியை முன்னெடுத்தனர். அவர்களைக் கலைக்க இஸ்ரேல் இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பாலஸ்தீனர்களின் பேரணி வன்முறையாக மாறியது. இதில் 30க்கும் மேற்பட்டோர் பலியாகியதாக ஊடகங்கள் தெரிவித்தன. அத்துடன் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இத் தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்ய ஐ.நா தீர்மானம் நிறைவேற்றிய போதிலும் அதனை இஸ்ரேல் நிராகரித்தது. இந்தநிலையில் மீண்டும் கடந்த வாரத்தில் பாலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசா எல்லையில் இஸ்ரேல் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பாலஸ்தீனத்தை சேர்ந்த 4 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந் துள்ளனர். இது குறித்து பாலஸ்தீன அதிகாரிகள் தரப்பில், காசா எல்லைப் பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 15வயது சிறுவன் உட்பட 4 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 150 இற்கும் மேற்பட்டோர் காய மடைந்துள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது. இஸ்ரேல் இராணுவத்தின் இத்தாக்குதலுக்கு பாலஸ்தீன அரசு கண்டம் தெரிவித்துள்ளது.

**ஜெருசேலம்**



படம் –07

1967ம் ஆண்டு வரை கிழக்கு ஜெருசேலம் நகர் ஜோர்டான் வசமிருந்தது. இந்தநிலையில் கிழக்கு ஜெருசலேமை கைப்பற்றிய இஸ்ரேல் அரசு கடந்த 1980 ஆம் ஆண்டில் அந்நகரை தங்கள் நாட்டுடன் இணைத்து கொண்டது. ஜெருசலேம் நகரில் யூத, கிறிஸ்தவ, இஸ்லாமிய வழிபாட்டு தலங்கள் அதிகமாக உள்ளதால், மூன்று மதத்தினரும் இந்நகரை தங்களுக்கே உரிமையாக்கிக் கொள்ள முயன்று வருகின்றனர். சுமார் 3 லட்சத்து 50 ஆயிரம் பாலஸ்தீனியர்கள் வசித்து வரும், ஜெருசலேம் நகரின் கிழக்கு பகுதியில் இஸ்ரேல் அரசு அத்துமீறலாக அமைத்த வசிப்பிடங்களில் சுமார் 2 லட்சம் யூத இனத்தவர்கள் வாழ்கின்றனர். இதனால் இஸ்ரேலியர்கள் ஆக்கி ரமிப்பு செய்த நிலங்களை தங்களுக்கு வழங்கக் கோரி, இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையிலான காஸா என்ற பகுதியை கைப்பற்றியுள்ள ஹமாஸ் போராளிகள், ஜெருசலேம் நகரை இஸ்ரேலின் பிடியில் இருந்து மீட்பதற்காக ஆயுத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இப்போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் விதத்தில் சிரியா யுத்தத்தின் வெற்றி அமைந்து விடக்கூடாது என்பதனாலேயே அமெரிக்கா சார்பான மேற்குலக நாடுகள் சிரியா மீது கூட்டுத் தாக்குதலை மேற்கொண்டன. கவுட்டா கிளர்ச்சியாளர்களின் வெளியேற்றம் சிரிய ஆளும் தரப்பின் 80 வீதமான வெற்றியை உறுதிப்படுத்தியது. இதன் மூலம் பாலஸ்தீனர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்பாக செயற்படும் சிரியாவை தோற்கடிப்பது இஸ்ரேல் – மேற்குலக கூட்டின் நோக்கமாகும். இதனை மேலும் வலுப்படுத்தவே சிரியா இரசாயன ஆயுதங்களை யுத்தத்தில் பாவித்தது எனக் குற்றம் சாட்டுகிறது. அதற்கான விசாரணை ஐ.நா சபையால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

1948 ஆம் ஆண்டு முதற்கொண்டு தங்களது நிலத்திலிருந்து துரத்தப்பட்ட பாலஸ்தீனர்கள் உலகின் பல்வேறு நாடுகளில் அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள். அதில் ஆறு லட்சத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர் கள் இஸ்ரேலுக்கு மிக அருகிலேயே சிரியாவில் அகதிகளாக இருந்து வருகின்றனர். அவர்களுக்கு சிரிய அரசு ஆதரவளித்து வருகிறது. பாலஸ் தீனம் என்கின்ற தேசம் உருவாகிவிடும் என்ற எண்ணத்தோடு தங்களது சொந்த நிலத்திற்கு மீண்டும் திரும்பிச் சென்றுவிடலாம் என்ற நம்பிக்கை யோடு அம்மக்கள் சிரியாவில் வாழ்ந்து வருகின்றனர்.

இதனாலேயே சிரியாவின் ஸ்திரத்தன்மையை நிலை குழையச் செய்து, அங்கிருக்கும் பாலஸ்தீனர்களின் இருப்பை நெருக்கடிக்குள் ளாக்கி இஸ்ரேலின் இருப்பை பாதுகாத்தல் என்ற நோக்குடன் செயல்பட்டு வருகின்றது. இதற்கு வலுவான ஆதாரம் பாலஸ்தீனர்களின் மீதான இஸ்ரேலின் தாக்குதலுக்கு ஐ.நா அமைத்த விசாரணை நடவடிக்கையை அமெரிக்கா கடுமையாக எதிர்த்துடன் ட்ரம்ப் இஸ்ரேலை விட சிறந்த நட்பு நாடு உலகத்தில் இல்லை என குறிப்பிட்டமை கவனிக்கத்தக்கது.


சிரியாவின் கோலன் குன்றின் தென்பகுதியை இஸ்ரேல் ஆக்கிர மித்து வைத்திருக்கிறது. இது சிரியாவின் சொந்தமான பிரதேசம். 1967 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆறு நாள் யுத்தத்தின் போது கைப்பற்றியது. சிரியா பலம் அடைந்தால் இப்பகுதியை மீளவும் கைப்பற்ற எத்தணிக்கும். இஸ்ரேல் கோலன் குன்று பகுதியை இழக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும். அது இஸ்ரேலின் பாதுகாப்பை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும். காரணம் அப்பகுதி இஸ்ரேலின் தந்திரோபாய பிரதேசம் ஆகும் (Strategic land) நீண்ட நாட்களாக ஹிஸ்புல்லா அமைப்பை அழிக்க வேண்டும் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரேலின் இலட்சியமாக இருந்து வருகிறது. எனினும் சிரியாவின் ஆசாத் அரசு தன்னாலான உதவி களை பாலஸ்தீனத்தில் இயங்கும் எதிர்ப்பு அமைப்புக்களுக்கு செய்து வருகிறது. அதனால் சிரியாவின் ஆட்சியை கவிழ்த்து விட்டால் பாலஸ்தீன போராட்ட இயக்கங்களை ஒடுக்குவதும் எளிதாகிவிடும் என்பது இஸ்ரேலின் எதிர்பார்ப்பு.

**கோலன் குன்று**




படம் –08

சிரியாவின் ஆசாத்தின் ஆட்சி இல்லாது போனால் பாலஸ்தீனர்களின் தனிநாட்டு கோரிக்கையும் மெல்ல மெல்ல வலுவிழந்து அழிந்து போகும் என்பது இஸ்ரேலின் வலுவான நம்பிக்கை. அதனாலேயே சிரியா மீது பல தடவை இஸ்ரேல் ஏவுகணை தாக்குதலை மேற்கொண்டு தனது வலுவினை உறுதிப்படுத்தி வருகிறது.

மேற்காசிய பிராந்தியத்தில் இஸ்ரேல் அரசியல் பொருளாதார இராணுவ ரீதியான வலிமையான நாடு. எனினும் அதன் உருவாக்கம் இன்னோர் இனத்தின் அழிவின் மேல் கட்டமைக்கப்பட்டமையால் அது தனது இருப்பை தக்க வைத்துக்கொள்ள பல சவால்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. பாலஸ்தீனர்களுக்கு சார்பாக நடக்கும் மேற்காசிய பிராந்திய நாடுகளான சிரியா, ஈரான் போன்றவற்றிற்கு எதிராக இராஜதந்திர ரீதியான செயற்பாடுகளை இஸ்ரேல் மேற்கொண்டு வருகிறது. எனினும் சிரியா – ரஷ்சியா – ஈரானின் கூட்டு வெற்றியும் அதனால் மேற்காசியாவில் ஏற்படப்போகும் மாற்றங்களையும் இஸ்ரேல் எதிர்கொள்ளவேண்டிய நிலையிலுள்ளது. இஸ்ரேல் – பாலஸ்தீன முரண்பாட்டில் தவிர்க்க முடியாத சக்திகளாக சிரியாவும் ஈரானும் விளங்கும். அதற்கு ஏற்றவகையில் இஸ்ரேல் தனது இருப்பு நடவடிக்கைகளை அமெரிக்கா சார் மேற்குலக நாடுகளின் துணைகொண்டு மேற்கொண்டு வருகிறது. எனவே சிரியா விவகாரமும் பாலஸ்தீன விவகாரமும் அதற்கான பதிலீடுகளும் இஸ்ரேலினை மையப்படுத்தியது.

**28.04.2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுவாயுத விவாகாரத்தில் மேற்கின் இராஜதந்திரத்தை ஈரான் வெற்றி கொள்ளுமா?

பனிப்போர் காலப்பகுதியிலிருந்து அரசியல், பொருளாதார, புவியியல் அமைவிடம் சார்ந்து அதிகளவு முக்கியத்துவம் பெற்ற பகுதியாக மேற்காசியா விளங்கி வருகிறது. 1979இற்கு பின்னர் அமெரிக்காவினால் தோற்கடிக்கப்பட முடியாத சக்தியாக ஈரான் விளங்குகிறது. ஈரானியப்புரட்சி சுதேச பண்பாடுகளையும் மதவாதத்தையும் முதன்மைப்படுத்தியிருந்தது. இதனோடு ஒபாமா நிர்வாகம் அணுவாயுத விவகாரத்தை முன்நிறுத்தி ஈரானோடு உறவுகொள்ள ஆரம்பித்தது. இதனை ட்ரம்ப் நிர்வாகம் சீர் குலைத்தோடு மேற்காசிய அரசியலில் நெருக்கடிமிக்க சவால்களை எதிர்கொண்டு வருகிறது. இதனை அடிப்படையாக கொண்டு ட்ரம்பின் அணு வாயுத ஒப்பந்தம் பற்றிய முடிவுகள் ஈரானுக்கு நெருக்கடி மிக்கதாக அமையப்போகின்றது.

ஈரான் அணு ஆயுதங்களைக் குவித்து வருவதாகக் கூறி அதன் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்தது. இந்தத் தடைகள் 2015ஆம் ஆண்டு விலக்கிக் கொள்ளப்பட்டன. இதற்காக, 2015 ஆம் ஆண்டு ஒபாமாவின் ஆட்சிக்காலத்தில் ஈரானுடன் கூட்டு செயல்திட்ட ஒப்பந்தத்தை அமெரிக்கா, சீனா, பிரிட்டன், பிரன்ஸ் உள்ளிட்ட நாடுகள் மேற் கொண்டன. அணுசக்தி ஆராய்ச்சிகளை ஈரான் நிறுத்திக் கொண்டதன் பேரில் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இவ்ஒப்பந்தம் பாலிஸ்டிக் ஏவுகணை மற்றும் மேற்காசியாவில் அதன் பங்கு ஆகிய அம்சங்கள் கொண்ட ஒன்றாக விளங்கிறது.



**பாராக் ஒபாமா** (2009-2017)
44 வது அமெரிக்கா ஜனாதிபதி

மேலும் இவ்ஒப்பந்தத்தின் பிரகாரம் அணு ஆயுதங்களை மேற்காசிய நாடுகளுக்கோ அல்லது ஏனைய பிராந்திய நாடுகளுக்கோ விநியோகிப்பதற்கான தடையையும் ஏற்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனிடையே அமெரிக்க அதிபராக கடந்த ஆண்டு பதிவியேற்ற டொனாலட் டிரம்ப் மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்தை தேர்தல் காலத்திலிருந்து கடுமையாக விமர்சித்தார். அவர் இந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு, ஈரான் மீது மீண்டும் பொருளாதார தடைகள் விதிக்கப்படும் எனவும் அச்சுறுத்தி வருகிறார். அதற்கான காலக்கெடு 2018 மே 12 எனவும் அவர் தெரிவித்துள் ளார். 2015ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அந்த ஒப்பந்தம் ஏமன், சிரியா, மற்றும் மத்திய கிழக்கின் பிற்பகுதிகளை உள்ளடக்கி இருக்க வேண்டும். எனவே அந்த ஒப்பந்தம் பைத்தியக்காரத்தனமானது. ஆகையால் அதைவிட சிறப்பான ஒரு ஒப்பந்தம் உருவாக்கலாம் என்றார்.

ட்ரம்பின் இவ் அறிவிப்பின் பின்னால் சிரியா விவகாரத்தினை அமெரிக்காவிற்கு சாதகமாக்கிக் கொள்வதற்கான இராஜதந்திர நடவடிக்கைகளை பற்றியும் அறிந்து கொள்ளவேண்டும். இரசாயன தாக்குதலை காரணம் காட்டி மேற்கொண்ட கூட்டுப் படைதாக்குதல் ரஷ்சியாவின் எஸ் 300 ரக ஏவுகணையினால் நெருக்கடிக்குள்ளாக்கப் பட்டதை தொடர்ந்து ஈரானின் அணு உடன்படிக்கை மூலம் சிரியா மீதான இராஜதந்திர நடவடிக்கை மேற்கொள்ள முயற்சிக்கிறது. இதனை இவ்வு டன்படிக்கை தொடர்பான அமெரிக்காவின் அறிவிப்பை தொடர்ந்து பேச்சு வார்த்தை மேற்கொள்ள சென்ற ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் நாட்டுத் தலை வர்களுடனான கலந்துரையாடல்களிலிருந்து அறிந்து கொள்ளாலாம்.

ஜெர்மனி நாட்டின் பிரதமர் 27.04.2018 அன்று வாஷிங்டன் நகரில் உள்ள வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேசிய டிரம்ப் அவருடன் கூட்டாக செய்தியாளர்களிடம் அளித்த பேட்டியின் மூலம் ஈரான் மீதான அணு உடன்படிக்கை சார்ந்த விமர்சனங்கள் அனைத்தும் மறைமுகமாக சிரியா விவகாரம் சார்ந்தே என்பதை பறைசாற்றுகின்றன. அச்செய்தியாளர் மாநாட்டில் ட்ரம்பு அளித்த வாக்கு மூலங்கள் பின்வருமாறு


ஏஞ்சலா மேர்க்கெல்
ஜேர்மனியின் சான்சிலர்
2005ஆம் ஆண்டிலிருந்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய கிழக்கு நாடுகளில் எங்கே எந்த பிரச்சனை என்றாலும் அதற்கு ஈரான் நாட்டின் தலையீடு காரணமாக உள்ளது. அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தை மீறிய வகையில் ஆபத்தான ஏவுகணைகளை தயாரிப் பதையும், பயங்கரவாதத்தை ஆதரிப்பதையும் நிறுத்தும் வரை, ஈரான் நாட்டின் கொலைக்கார ஆட்சியாளர்கள் அணு ஆயுதங்களை நெருங்க விடாதவாறு நாம் உறுதிப்படுத்த வேண்டும்.

சிரியாவில் இருந்து ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத இயக்கத்தை முழுவதுமாக துடைத்து எறிய அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டு கூட்டமைப்பு உறுதி பூண்டுள்ளது. ஆனால் இந்த வெற்றியை ஈரான் தனக்கு சாதகமாக்கி கொள்ளாத வகையில் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்.

சிரியா மற்றும் லெபனானில் ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கும் ஈரானின் திட்டங்களை தடுத்து தகர்க்க வேண்டும் என்னும் ஜெர்மனியின் கண்ணோட்டத்தில் நாமும் இணைந்திருக்கிறோம்.

மத்திய கிழக்கு நாடுகளில் வன்முறையையும் ரத்தக்களறி யையும், குழப்பங்களையும் ஏற்படுத்தி வரும் ஈரான் நாட்டின் ஆட்சியாளர்களைப் பற்றி இன்றைய சந்திப்பின் போது நானும் ஜெர்மனி பிரதரும் விரிவாக ஆலோசித்தோம். ஈரானுக்கு எதிராக இராணுவ பலத்தை அமெரிக்கா பயன்படுத்துமா என்பது தொடர்பாக இப்போது பேசுவது பொருத்தமாக இருக்காது. ஆனால் அவர்கள் அணுஆயுதங்களை தயாரிக்ககூடாது என்பதை என்னால் கூற முடியும் என்று டிரம்ப் குறிப்பிட்டார்.



இம்மானுவல் மேக்ரோன்
பிரான்ஸ் ஜனாதிபதி
2017ஆம் ஆண்டிலிருந்து

தொடர்ந்து பிரான்ஸ் நாட்டு ஜனாதிபதி இமானுவல் மேக்ரான் அமெரிக்க நாடாளுமன்ற கூட்டத்தில் உடன்படிக்கை பற்றி தெரிவித்த கருத்துக்களை நோக்குகையில்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரானில் அணுசக்தி பரிசோதனைக் கட்டுப்படுத்துவதற்காக அந்த நாட்டுக்கும், வல்லரசு நாடுகளுக்கும் இடையே ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டது. அமெரிக்காவின் முன்முயற்சியினால் உருவாக்கப்பட்ட அந்த ஒப் பந்தத்தில் நாங்களும் கையெழுத்திட்டோம். அந்த ஒப்பந்தத்தில் அமெரிக்காவும் கையெழுத்திட்டுள்ளது. எனவே இந்த ஒப்பந்தத்தை விட்டு விலகி விடுவோம் என்று சுலபமாக கூறிவிட முடியாது.

அந்த ஒப்பந்தத்தில் எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வு இருப்பதாகச் சொல்லமுடியாது. இருந்தாலும் அதைக் காரணம் காட்டி ஒப் பந்தத்தைக் கைவிடுவதைக் காட்டிலும், அதிலுள்ள குறைபாடுகளைக் களைவதில் நாம் முனைப்பு காட்ட வேண்டும். இந்த ஒப்பந்தம் குறித்த அமெரிக்காவின் அனைத்து கவலைகளுக்கும் தீர்வு கிடைக்கச் செய்வதற் காக ஒருங்கிணைந்து செயல்பட நாம் முன்வரவேண்டும்.

ஈரான் ஒருபோதும் அணு ஆயுதபலம் பெறாது என்பதை உறுதி செய்வதே அணுசக்தி ஒப்பந்தத்தின் அடிப்படை நோக்கமாகும். ஆனால் அதற்காக மத்தியக் கிழக்குப் பகுதியில் போரிட முடியாது என்றார் அவர்.

ரஷ்சியா சிரியாவில் காணும் வெற்றியும் அதனை மையமாக கொண்டு மேற்காசியாவில் ரஷ்சியா – சிரியா – ஈரான் ஆதிக்கமும் மேற்கினால் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி நாடுகளினால் ஏற்றுக்கொள்ள முடியாது உள்ளது. ரஷ்சியா பெற்று வரும் இவ்வளர்ச்சிக்கு மேற்காசியா நாடான ஈரான் – சிரியா பாரிய பங்களிப்பு ஆற்றி வருகிறது. எனவே ஈரானுடன் மேற்கொண்ட உடன்படிக்கையில் பலவீனமான அம்சங்கள் இருப்பதாக கூறி அதனை மீண்டும் தமக்கு சாதகமான வகையில் மீளுருவாக்கம் செய்து சிரியா விவகாரத்தினை கையாள மேற்குலக நாடுகள் முயலுகின்றன. இதனை வலுச்சேரக்கும் விதத்தில் மக்ரோன் புதிய ஒப்பந்தம் என்ற உருவாக்கப்படும் எனவும் அதில் ஈரானின் கண்டம்



தொக்குவில் பொது நூலகம் கல்விப் பிரதேச சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு கண்டம் பாயும் ஏவுகணை நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஈரான் மத்திய கிழக்கு நாடுகளில் வகித்து வரும் அங்கம் தொடர்பிலான விடயங்களை உள்ளடக்கியதாக அமையும் என குறிப்பிட்டார்.

ரஷ்சியா சிரியாவிற்கு வழங்கப் போவதாக கூறிய ஏவுகணை பற்றிய அறிவிப்பின் தொடர்ச்சியாகவே இவ் ஈரான் பற்றிய உடன்படிக்கை யின் சர்ச்சைகளை மேற்காசிய அரசியலில் காணக் கூடியதாக உள்ளது என்பதே அமெரிக்காவின் சிரியா விவகாரத்திற்கான இராஜதந்திர நடவடிக்கையின் பிரதிபலிப்பு என விளங்கிக் கொள்ளலாம்.

சிரியா விவகாரத்திலும் மேற்காசியா அரசியலிலும் அமெரிக்கா அடைந்து வரும் தோல்விகளுக்கு ஈரான் பாரிய பங்கு வகிக்கின்றது. மேற் காசியா விடயங்களில் அமெரிக்காவிற்கு ஈரான் கொடுக்கும் சவால்கள் தொடர்பாக நோக்குவோம்.

மேற்காசியாவில் ஈரான் பெற்றுள்ள பூகோள ரீதியான முக்கியத்துவமே அமெரிக்காவிற்கான பாரிய சவாலாக விளங்குகிறது. கடல் மூலமான உலக எரிபொருள் வழங்கலில் 40 வீதம் ஈரானின் ஹோம்ஸ் நீரிணையூடாக நடக்கிறது. உலக மொத்த எண்ணெய் வழங்கலில் இது 20 வீதம் ஆகும். ஹோம்ஸ் நீரிணை, ஓமான் வளைகுடாவையும் பாரசீக வளைகுடாவையும் இணைக்கும் 35 மைல்கள் அகலமுள்ள நீரிணையாகும். நாளொன்றிற்கு 15 எண்ணெய் தாங்கிக் கப்பல்கள் இதனூடாக பயணம் செய்கின்றன. சவூதி அரேபியா, ஈராக், குவைத், பஹ்ரெய்ன், கட்டார், துபாய் போன்ற நாடுகளிலிருந்து ஏற்றுமதியாகும் எரிபொருள் ஹோம்ஸ் நீரிணை யூடாகவே நடக்கின்றது.

**ஹோம்ஸ் நீரிணை**




படம் -09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நீரிணையை மூடிவிடுவேன் என்று ஈரான் அடிக்கடி மிரட்டு வதுண்டு. அமெரிக்கா இந்த நீரிணையை தனது கடற்படையின் கண் காணிப்பின் கீழ் வைத்திருக்கின்றது. அமெரிக்காவின் மேற்காசிய நகர்வு களுக்கு என்றும் பிரச்சினையாகவும் சவாலாகவும் இருப்பது ஈரான்.

ஈரான் – சிரியா நட்புறவும் அமெரிக்காவிற்கு உள்ள மற்றுமொரு சவாலாகும். சிரியாவில் இடம்பெற்று வரும் யுத்தத்தில் ஆளும் ஆசாத் அரசிற்கு ஈரான் பல வழிகளில் உதவி வருகிறது. இரண்டு நாடுகளும் ஷியா மதக்கொள்கையினை பின்பற்றுபவர்கள் என்னும் மார்க்க ரீதியான பிணைப்பையும் கொண்டவர்கள். சிரியா ஆளும் அரசின் அதிகரித்து வரும் பலத்திற்கு ரஷ்சியாவிற்கு அடுத்ததாக ஈரானே பெருமளவு பங்காற்றி வருகிறது. எனவே சிரியா அரசின் வெற்றியின் மூலம் மேற்காசியாவில் ஈரானின் ஆதிக்கம் இன்னும் வலுவடையும். இதனால் அமெரிக்காவின் நலன்கள் பெரிதும் பாதிப்படையும் வாய்ப்புள்ளது.

மேற்காசியாவில் ஈரானின் ஆதிக்கம் வலுவடைதல் என்பது அமெரிக்காவின் நட்பு நாடான இஸ்ரேலின் பிராந்திய ஆதிக்கத்திற்கு சவாலான விடயம் ஆகும். மேற்காசியா நாடுகள் அனைத்திலும் அமெரிக்கா சார்பான ஆட்சியாளர்களை ஏற்படுத்தி, எதிரான ஆட்சியாளர்களை பலவீனப்படுத்தி இஸ்ரேல் – பாலஸ்தீன முரண்பாட்டை முடிவுக்கு கொண்டு வருவதன் மூலம் இஸ்ரேலினை பிராந்திய வல்லரசு ஆக்குவதற்கான நீண்ட காலதிட்டமொன்று இஸ்ரேல் – அமெரிக்க கூட்டு நாடுகளிடம் காணப்படுகின்றது. அதற்கான உத்திகளாகவே ஈராக் போர், அரபுவசந்தம், சிரியா போர் என்பனவாகும். இஸ்ரேலினை பிராந்திய வல்லரசு ஆக்குவதன் மூலம் அதன் நட்புறவை பலமாக்குவதுடன் அதன் துணையுடன் மேற்காசிய வளங்களை சுரண்டுவதனை நோக்கமாக அமெரிக்கா கொண்டுள்ளது. எனினும் இந் நோக்கங்களை அடைவதற்கு பாரிய தடங்கலாக சிரியா – ஈரான் – ரஷ்சியா நாடுகளின் நடவடிக்கை மேற்காசியாவில் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரான் மேற்கொண்டு வரும் அணு ஆயுத பரிசோதனைகள் மற்றும் யூரோனிய செறிவூட்டல் நடவடிக்கைகளும் அமெரிக்காவிற்கு தலையிடி கொடுக்கும் விடயமாக அமையபெற்றது. அதனால் பொருளாதார தடைகளை பல ஆண்டுகளாக விதித்து வந்த போதிலும் 2015 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் மூலம் ஈரானின் அணு ஆயுத நடவடிக்கைகளை நிறுத்துவதனை உறுதிப்படுத்தி அதன் மீதான பொருளாதார தடைகளையும் நீக்கியது ஒபாமாவின் அரசாங்கம். எனினும் ரஷ்சியாவின் நட்பின் மூலம் ஈரான் அணு ஆயுத ரீதியில் பலமடைவதும் அதன் ஊடாக சிரியா போர் கையாளப்படுவதும் அமெரிக்காவிற்கு சவாலாக உள்ளது.

மேற்காசியாவில் அமெரிக்கா தனது அரசியல் பொருளாதார புவியியல் நலன்களை அடைவதற்கும் இஸ்ரேலின் பிராந்திய வல்லரசாவதற்கான நடவடிக்கைகளையும் சவாலுக்குட்படுத்தும் நாடாக ஈரான் விளங்குகின்றது. அமெரிக்கா ஒப்பந்ததில் இருந்து விலகுமாக இருந்தால் ஈரான் அவ்ஒப்பந்தத்தையே இரத்து செய்யப்போவதாக எச்சரித்துள்ளது. அதேபோன்று அமெரிக்கா சார்பான மேற்குலக நாடுகளால் கூறப்படும் புதிய ஒப்பந்தம் ஒன்று ஏற்படுவதும் நடைமுறை சாத்தியமற்ற ஒன்றாகும். ஈரானின் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்வதும் சாத்தியமற்ற ஒன்றாகும். எனவே ட்ரம்பின் எச்சரிக்கைகளும் மிரட்டல்களும் இராஜதந்திரமும் அமெரிக்கா – ஈரான் மோதலை மேலும் அதிகரிக்க வழிவகுத்துள்ளது.

**05.05.2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் – அமெரிக்க கூட்டின் தந்திரோபாயமே ஈரான் அணு உடன்படிக்கையிலிருந்து வெளியேற காரணம்

மேற்காசிய நாடான ஈரான் உலகில் வளர்ந்து வரும் நாடுகளில் ஒன்று. எண்ணெய் வளம் நிறைந்து காணப்படும் ஒரு பாரசீக வளை குடாநாடு. இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலாகவும் சவூதி அரேபியாவிற்கு விரோதியாகவும் உள்ள நாடாக பார்க்கப்படுகிறது. அண்மைக்கால மேற்காசிய அரசியலில் சர்ச்சைக்குரிய விடயமாக ஈரானின் அணுவாயுத உடன்படிக்கை பற்றிய விடயங்கள் இடம் பெற்று வருகிறது. இதற்கு முற்று புள்ளி வைக்கும் விதமாக கடந்த வாரம் (09.05.2018) ஆம் திகதி டரம்ப் உடன்படிக்கை பற்றிய தனது இறுதி தீர்மானத்தினை முன்வைத்தார். அதாவது ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் குறைபாடுகள் உள்ளதால் ஒப்பந்தத்தைவிட்டு அமெரிக்கா வெளியேற முடிவு செய்துள்ளது என அறிவித்துள்ளார். இதன் பின்னணியில் ஈரானின் அணுசக்தி உடன் படிக்கை மற்றும் அவ்உடன்படிக்கையினால் மேற்காசிய அரசியலில் ஏற்படவுள்ள அரசியல் ரீதியான தாக்கங்கள் பற்றி அறிந்து கொள்ள முடியும்.

அமெரிக்கா ஈரானுடனான அணுவாயுத உடன்படிக்கையிலிருந்து விலகினால் அது பெரும் வரலாற்று தவறாக அமையும் என கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார் ஈரான் ஜனாதிபதி ஹசான் ருகானி. டிரம்ப் என்ன முடிவை எடுத்தாலும் ஈரானின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வது மற்றும் ஆயுதங்கள் தொடர்பில் எந்தவித விட்டுக்கொடுப்பிற்கும் இடமில்லை எனக் கூறி யிருந்தார். இந்நிலையிலேயே ட்ரம்பின் அறிவிப் பானது எத்தகைய தாக்கத்தை மேற்காசிய அரசியல் சமநிலையில் மாற்றத்தை ஏற்படுத்த போகின்றது என்பது பிரதான கேள்வியாகும்.



ஹசன் ரூஹானி
ஈரானின் 7வது ஜனாதிபதி
2013ஆம் ஆண்டிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2015. 07. 14 அன்று முன்னால் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வின் முயற்சியின் காரணமாக அமெரிக்கா இங்கிலாந்து, ரஷ்சியா, பிரான்ஸ், சீனா, மற்றும் ஜேர்மனி உள்ளிட்ட வல்லரசு நாடுகளுடன் ஈரான் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அணு ஒப்பந்தத்தை செய்து கொண்டது. சுவிஸ் நாட்டின் Lusanne மாநிலத்தில் உடன்படிக்கை மேற்கொள்வதற் கான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டன. ஈரானின் அணுசக்தி உற்பத்தித் திட்டத்தினை அணுவாயுத உற்பத்திக்கு இட்டுச் செல்லவிடாது தடுப்பதன் மூலம் ஈரான் ஒர் அணுவாயுத வல்லரசாக உருப்பெறாதிருப்பதை உறுதிப்படுத்துவது மேற்குலகின் நோக்கமாக இருந்தது. இவ்வுடன்படிக்கை ஈரான் அணு ஆயுத திட்டங்களை நிறுத்திக் கொள்ளவும், பிரதிபலனாக அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்ட பொருளாதார தடைகளை மேற்கத்திய நாடுகள் விலக்கிக் கொள்ளவும் வழிவகுத்துள்ளது. இவ்வுடன்படிக்கையின் அம்சங்கள் தொடர்பாக நோக்கு கையில் :

அணுத் தொழில்நுட்பத்திற்குரிய யுரேனிய செறிவாக்கத்தினை ஈரான் தொடர முடியும். ஈரானின் அணுத்தொழில்நுட்பம் அணுவாயுத உற்பத்திக்கு இட்டுச் செல்லாத வகையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் யுரேனிய செறிவாக்கத்தினையும் உற்பத்தியையும் பேணுவதற்குரிய அனுமதி ஈரானுக்கு வழங்கப்படுகின்றது. அணுத்தேவைக்கு யுரேனியம் ஐந்து சதவீதத்திற்கு மேல் கொள்வனவு செய்வதற்கு ஈரானுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

ஈரானில் யுரேனியத்தை செறிவூட்டி அணுகுண்டாக மாற்ற பயன் படும் சென்ட்ரிபியூஸ் எண்ணிக்கை மூன்றில் இரு பங்குக்கும் கீழாக குறைக்கப்படும். அடுத்த 15 ஆண்டுகளுக்கு 3.67 சதவீதத்துக்கு அதிகமாக யுரேனியத்தை செறிவூட்டக் கூடாது என முடிவு செய்யப்பட்டது.

இந்த ஒப்பந்தத்துக்கு முன்னதாக ஈரானில் சேமித்து வைக்கப் பட்டுள்ள யுரேனியத்தை கப்பலில் ஏற்றி வெளிநாடுகளுக்கு அனுப்பி விட வேண்டும் என்ற நிபந்தனைக்கும் ஈரான் சம்மதித்தது. அதன்படி அதிகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியான இருப்பில் இருந்த யூரேனியம் கப்பல்களில் ஏற்றப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதன் இறுதிக்கட்டமாக இருபது சதவீதம் செறிவூட்டப்பட்ட 11 ஆயிரம் கிலோ யுரேனியத்தை ஈரான் அரசு கடந்த 29.12.2015 அன்று கப்பலில் ஏற்றி ரஷ்சியாவுக்கு அனுப்பி வைத்தது.

ஆனால் ஈரானின் அனைத்து அணுத்திட்டங்களும் அதற்குரிய தொழில்நுட்ப மையங்களும் அனைத்து உலக அணுசக்தி மையத்தின் (International Atomic Energy Agency – IAEA) தீவிர கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. அணுத்திட்டத்தை முடக்கியதற்காக இலங்கை நாணயப்படி 100,000 கோடி ரூபாய்கள் ஈரானுக்கு நஷ்ட ஈடாக வழங்கப்படும். அணுவாயுத திட்டத்தை முற்றாக ஈரான் கைவிடும் பட்சத்தில் இதனை விட பன்மடங்கு நன்மைகள் ஈரானுக்கு கிடைக்க ஒழுங்குகள் செய்யப்படும் போன்ற விடயங்கள் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டு ள்ளது.

IAEA




படம் –10

இந்நிலையில், இந்த ஒப்பந்தத்துக்கு பின்னரும் ஈரான் அரசு இரகசியமாக அணு ஆயுதங்களையும். அணுகுண்டுகளையும் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வந்தாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு தற்போது குற்றம் சாட்டியுள்ளார். இதற்கு ஆதாரமாக ஈரான் அணு ஆயுத திட்டம் தொடர்பான சுமார் 500 கிலோ எடையுள்ள இரகசிய கோப்புக்களின் 55 ஆயிரம் பக்கங்கள் மற்றும் 138 சி.டிக்களை செய்தியாளர்கள் முன்னிலையில் பெஞ்சமின் நேதன்யாகு காட்சிப்படுத்தி பேட்டியளித்தார்.



**பெஞ்சமின் நெடன்யாகு**
**இஸ்ரேலின் 9வது பிரதம மந்திரி**
**2009ஆம் ஆண்டிலிருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து நெதன்யாகு கூறுகையில் "ஒரு போதும் அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபடவில்லை என்று ஈரான் தலைவர்கள் தொடரந்து கூறுவது உங்களுக்கு தெரிந்திருக்கும். இன்று நான் உங்களுக்கு ஒன்றை கூறுகிறேன். ஈரான் மிகப்பெரிய பொய் கூறுகிறது. என்று நெதன்யாகு குறிப்பிட்டார். உலக வல்லரசு நாடுகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு பின்னர் ஈரான் தனது அணுசக்தி திட்டம் தொடர்பான ஆவணங்களை மறைக்க தீவிர முயற்சிகளில் ஈடுபட்டது. மிகப்பெரிய புலனாய்வு சாதனையாக சிலவாரங்களுக்கு முன்னர் இந்த பெட்டகத்தில் இருந்து அரைத்தொன் அளவான பொருட்களை இஸ்ரேலால் பெற முடிந்தது எனக் கூறினார்.

இவ்வாறு இஸ்ரேலின் ஈரான் மீதான குற்றச்சாட்டுக்களும் அது சமரப்பித்த ஆதாரங்களுமே ட்ரம்பின் அணுவாயுத உடன்படிக்கை சார்ந்த முடிவை எடுப்பதற்கு காரணமாக அமைந்தது எனக் குறிப்பிடலாம். எனினும் நெதன்யாகு முன்வைத்த பெரும்பாலான ஆதாரங்கள் ஈரான் அணுத் திட்ட ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கு முன்னர் ஈரான் அணு ஆயுத நடவடிக்கையில் ஈடுபட்டது பற்றி ஏற்கனவே அறிந்திருந்த விடயங்கள் என அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர். எனவே இதிலிருந்து நாம் விளங்கிக் கொள்வதுயாது எனில் மேற்காசிய அரசியலில் சிரியா விவகாரம் மூலம் பலம் பெற்று வரும் ஈரான் நாட்டினை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் அமெரிக்கா – இஸ்ரேல் மேற்கொள்ளப்பட்ட உத்தியே அணுவாயுத உடன்படிக்கையிலிருந்து அமெரிக்காவின் வெளியேற்றம் ஆகும்.

சிரியா யுத்தத்தில் ஈரான் – சிரியா– ரஷ்சியா கூட்டு பெற்று வரும் வெற்றி தனது இருப்புக்கும் பிராந்திய வல்லரசு தன்மைக்கும் பாதிப்பினை ஏற்படுத்தும் என்று இஸ்ரேல் கருதுகிறது. அத்துடன் ஏப்ரல் 9, 2018 ஆம் திகதி மேற்கொண்ட ஏவுகணை தாக்குதலில் ஈரானியர்கள் கொல்லப்பட்டமைக்கு ஈரான் கடும் எச்சரிக்கையை விடுத்துள்ளது. இதனால் அச்சமடைந்த இஸ்ரேல் ஈரானின் அச்சுறுத்தலிருந்து பாதுகாத்துக் கொள்ள அணுவாயுத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்படிக்கையை கையிலெடுத்தது. இதனை உறுதி செய்யும் வகையில் இஸ்ரேல் எரிசக்தி அமைச்சரின் அறிக்கை வெளிக்காட்டுகிறது.

ஈரானை மிக ஆபத்தான எதிரியாகக் கருதும் இஸ்ரேல் சிரியாவைத் தளமாகப் பயன்படுத்தித் தங்கள் மீது தாக்குதல் நடத்த ஈரான் தயாராகி வருவதாகக் குற்றம் சாட்டியுள்ளது. இஸ்ரேலுக்கு எதிராகத் தாக்குதல் நடத்த சிரியாவைப் பயன்படுத்த அதிபர் பஷார் அல் ஆசாத் அனுமதித்தால் அவரை ஆட்சியிலிருந்து அகற்றுவோம் என இஸ்ரேல் அமைச்சர் யுவல் ஸ்டெயின்ஸ் தெரிவித்துள்ளார்.

சிரிய மண்ணில் ஈரானை செயல்பட அனுமதிப்பது சிரியாவிற்கு சிக்கலையே ஏற்படுத்தும். சிரியாவில் இருந்து கொண்டு இஸ்ரேலுக்கு எதிராக ஈரான் செயல்பட்டால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும். சிரியாவின் வடக்கு எல்லையில் ஈரான் நிலை கொண்டுள்ளது. அங்கிருந்து எதிர்காலத்தில் இஸ்ரேல் மீது ஏவுகணை தாக்குதலுக்கு அவர்கள் திட்டமிடலாம். இதனை உணர்ந்து ஈரானை தனது மண்ணிலிருந்து சிரியா வெளியேற்ற வேண்டும். இல்லையெனில் இதற்கான விலையை சிரியா கொடுக்க வேண்டி யிருக்கும்.

சிரியா மீது ஏப்ரல் 9ஆம் நாள் நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் ஈரான் இராணுவ ஆலோசகர்கள், படைவீரர்கள், ஏழு பேர் உயிரழந்ததாகக் கூறப்படுகிறது. இதற்குப் பதிலடி கொடுக்க ஈரான் தீர்மானித்துள்ளதாக இஸ்ரேல் கருதுவதால் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்கா ஜனாதிபதி ட்ரம்ப் ஈரானின் அணுவாயுத உடன்படிக்கையிலிருந்து வெளியேறுவது தொடர்பில் ஐ.நா சபை மற்றும் உடன்படிக்கை மேற்கொண்ட ஏனைய நாடுகள் எதிரான கருத்துக்களையே கொண்டுள்ளனர். பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளின் ஜனாதிபதிகள் அமெரிக்கா ஜனாதிபதியின் முடிவை பெரிதும் விரும்பவில்லை. ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா வெளியேறினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் மூளும் அபாயம் உள்ளது. என ஐ.நா பொதுச் செயலாளரான அன்டோனியோ கட்டெரஸ் எச்சரித்திருந்தார். ஈரானுடனான இந்த உடன் படிக்கை ஒரு முக்கிய இராஜதந்திரவெற்றி. இது தொடர்ந்து நீடிக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் போர் மூளும் அபாயம் உள்ளது. இதற்கு நல்ல தீர்வு அல்லது மாற்று யோசனை இல்லாமல் ஒப்பந்தத்தை அகற்ற கூடாது. அப்படி செய்தால் அபாயகரமான சூழலை சந்திக்க நேரிடும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்காவின் ஈரானின் அணுவாயுத உடன்படிக்கையிலிருந்து வெளியேறியமை உலகத் தலைவர்களாலும் சர்வதேச ஆய்வாளர்களாலும் தவறானது என்றே முடிவே எட்டப்படுகிறது. இது இஸ்ரேல் – அமெரிக்கா கூட்டின் வெளிப்பாடே. அமெரிக்கா இஸ்ரேலின் நலன்களுக்காக இந்த உடன்படிக்கையிலிருந்து வெளியேறியதனால் அதீத வலிகளை எதிர் கொள்வது தவிர்க்கமுடியாது.

**05.12.2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா – இஸ்ரேல் கூட்டுக்கு நெருக்கடி கொடுக்கும் ஈரான்

சர்வதேச அரசியலில் இராஜதந்திரத்தினை சரியாகவும் திறமையாகவும் கையாளும் எந்தவொரு நாடும் தனது தேசிய சர்வதேச நலன்களை இலகுவில் தக்கவைத்துக் கொள்ளும். அந்த வகையில் ஈரான் அணுவாயுத உடன்படிக்கை விடயத்தில் கைக்கொண்ட இராஜதந்திர நடவடிக்கைகள் அதனை பலமான சக்தியாக மாற்றி வருகிறது. அணுவாயுத உடன்படிக்கை விவகாரத்தில் ஈரான் பல இராஜதந்திர நடவடிக்கைகளை கைக்கொண்டுள்ளது.

அணுவாயுத ஒப்பந்த நடவடிக்கையிலிருந்து வெளியேறினால் அமெரிக்கா கடுமையான விளைவுகளை சந்திக்கும் எனவும் தேசிய நலன்களை கருத்தில் கொண்டு அணுவாயுத நடவடிக்கையில் ஈடுபட தயங்க மாட்டோம் எனக்கூறிய ஈரான் ஜனாதிபதி ரவுகாணி தற்போது அந்நிலைப் பாட்டைக்கு புதியதொரு வடிவம் எடுத்துள்ளார். அந்நிலைப்பாட்டிற்கு பின்னால் உள்ள இராஜதந்திர நடவடிக்கைகள் அமெரிக்கர்களை விஞ்சும் அளவிற்கு மதிப்பிடமுடியும்.

இலங்கை ஜனாதிபதிக்கும் ஈரானிய ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஈரானிய ஜனாதிபதி அணுவாயுத உடன்படிக்கையினை தொடர்ந்து பின்பற்றுவது பற்றிய கருத்துக்களை தெரிவித்திருந்தார். 13.05.2018 அன்றைய இலங்கை ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது இந்த ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா வெளியேறியது தர்மநெறிகளுக்கு எதிரான செயல். அமெரிக்கா விலகினாலும் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ள ஐந்து நாடுகளின் துணையுடன் நாங்கள் தொடர்ந்து நீடிப்போம் எனக் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுவாயுத ஒப்பந்தத்தில் இருந்து விலகாமல் இருப்பதன் மூலம் ஈரான் பல விடயங்களை சாதித்துள்ளது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளுடனான நட்பு இதன் மூலம் அதற்கு வலுவடைந்துள்ளது. இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஐரோப்பிய நாடுகளான பிரித்தானிய, பிரான்ஸ், ஜெர்மனி என்பன இதலிருந்து விலகாததுடன் அமெரிக்காவின் வெளியேற்றத்தினையும் கண்டித்துள்ளனர். ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகிய மறுகணமே இஸ்ரேல் – ஈரான் நாடுகள் ஏவுகணைகளை வீசி தாக்குதலில் ஈடுபட்டுள்ளன. இது தொடர்பாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பை பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மெக்ரான் தொலைபேசியில் அழைத்து பேசியுள்ளார். ஈரானுடான ஒப்பந்தத்திலிருந்து விலகியதால் மேற்காசிய நாடுகளில் பதற்றம் நிலவுவதாக மெக்ரான் கவலை தெரிவித்துள்ளார். இது அமெரிக்காவிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் விரிவினை ஏற்படுத்தியுள்ளது. இப்பிரிவினை ஈரான் சார்ந்து அதிக நன்மைகளை மேற்காசிய பிராந்தியத்தில் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களை அதிகரித்துள்ளது.

அணுவாயுத ஒப்பந்தம் சார்ந்து சீனாவின் ஆதரவினையும் ஈரான் பெற்றுக் கொண்டுள்ளது. அணுவாயுத ஒப்பந்தம் குறித்து சீனாவுடன் ஆலோசனை செய்ய ஈரான் நாட்டின் வெளியுறவுத்துறை மந்திரி மொகமது ஜாவித் சாரிப் மே 13 (2018) அன்று சீனாவிற்கு விஜயத்தினை மேற்கொண்டிருந்தார். அங்கு சீன வெளியுறவுத்துறை மந்திரி வாங்யியை சந்தித்துப் பேசினார். அதன் போது கருத்து வெளியிட்ட மொகமது ஜாவித் சாரிப் மே “ஈரான் எடுக்க வேண்டிய முடிவுகள் குறித்து விவாதிப்போம். ஒப்பந்தம் செய்யப்படுவதற்கு முன்னரும் பின்னும் சீனாவுடன் நட்புறவில் இருந்து வருகிறோம். சீனா தான் ஈரானின் முதன்மை பொருளாதார பங்குதாரர். சீனா இப்பொழுதும் எங்களுக்கு ஆதரவாக தான் இருக்கிறது என அவர் கூறினார். சீனாவின் விஜயத்தின் மூலம் அமெரிக்கா விதிக்க போகும் பொருளாதார தடைகள் ஈரானின் பொருளாதாரத்தை பெரிதும் பாதிக்காது என்பதனையும் அமெரிக்காவினால் ஈரானுக்கு எவ்விதத்திலும் தடைகளையும் சவால்களையும் ஏற்படுத்தமுடியாது என்பதனை நிருபீத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவின் அணுவாயுத ஒப்பந்தத்திலிருந்து விலகுவது பற்றிய அறிவித்தலை தொடர்ந்து ஐரோப்பிய நாடுகள் ஒப்பந்தத்திலிருந்து விலகமால் இருப்பற்கு ஈரானுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டன. இது மேற்காசிய பிராந்தியத்திலும் உலக அரசியலிலும் ஈரானின் அரசியல் ரீதியான அந்தஸ்தினை உயர்த்தியுள்ளது. ஒப்பந்தத்திலிருந்து ஈரான் விலகாமல் இருந்து மேற்கொண்ட இராஜதந்திர வெற்றி யாக அரசியல் அவதானிகளால் இது பார்க்கப்படுகிறது.

ஈரானுடன் வல்லரசு நாடுகள் மேற்கொண்ட அணுசக்தி ஒப்பந்தத்தைக் காக்க ரஷ்சிய அதிபர் விளாடிமீர் புடினும் ஜெர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்கலும் உறுதி பூண்டனர். இது குறித்து ரஷ்சிய அதிபர் மாளிகை கடந்த வாரம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அமெரிக்கா அறிவித்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட



விளாடிமிர் புடின்
ரஷ்சியா ஜனாதிபதி
2012ஆம் ஆண்டிலிருந்து

சூழல் குறித்து இரு தலைவர்களும் விவாதித் தனர். பிராந்திய மற்றும் உலக அமைதிக்கும் ஸ்திரத் தன்மைக்கும் அந்த ஒப்பந்தம் மிகவும் முக்கியமானது என்பதை மீண்டும் உறுதி செய்து கொண்ட இருவரும், அந்த ஒப்பந்தத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து தங்களது கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

இது தவிர, சிரியா விவகாரம் குறித்தும் பிரதமர் ஏஞ்சலா மெர்கலின் அடுத்த வார ரஷ்சிய சுற்றுப்பயணம் குறித்தும் இரு தலைவர்களும் ஆலோசித்தனர் என்று அந்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இராஜதந்திர உத்திகளில் சிறிய வகை போர் நடவடிக்கையும் ஒன்றாகும். அமெரிக்கா அணுவாயுத ஒப்பந்தத்திலிருந்து வெளியேறியதனை தொடர்ந்து ஈரான் சிரியாவிலிருந்து இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு பிரதேசமான கோலன் குன்றின் பகுதிகள் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளது. கடந்த வாரத்தின் தொடக்கத்தில் இஸ்ரேலின் நிலைகள் மீது ஈரானிய புரட்சிப் படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபது ராக்கெட்டுகளை ஏவியதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது. இதற்குப் பதிலடியாக ஈரானிய ஆயுதக் கிடங்குகள், போக்குவரத்துக் கேந்திரங்கள், உளவு மையங்கள் ஆகியவை மீது இலக்கு வைத்துத் தாக்கியதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது. அதேநேரம் இஸ்ரேலின் ஏராளமான ஏவுகணைகளை சுட்டு வீழ்த்தியதாகவும் இஸ்ரேல் தாக்குதலை தம் நாட்டு வான் பாதுகாப்பு அமைப்பு முறியடித்தாகவும் சிரியாவின் அரசு ஊடகம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் ஈரான் மேற்காசிய பிராந்தி யத்தில் வலுவாகவுள்ளதை அமெரிக்கா – இஸ்ரேல் கூட்டுக்கு காட்டி யுள்ளது.

அணுவாயுத ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா மீது முன் வைக்கப்படும் விமர்சனங்களை பொருட்பாடுத்தாத ட்ரம்ப் ஈரானிலிருந்து வணிக நிறுவனங்களை வெளியேற உத்தரவிட்டார். இதனை பிரான்ஸ் கண்டித்துள்ளது. அமெரிக்கா ஈரானுக்கு எதிராக மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கைக்கும் ஈரான் பதில் கூற முன்னர் ஐரோப்பிய நாடுகள் கூறுவது அதன் செல்வாக்கினை உலக அளவில் அதிகரித்துள்ளது

ஈரானுடன் வணிக தொடர்பு வைத்துள்ள நிறுவனங்களுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளதை பிரான்ஸ் கண்டித்துள்ளது. ஏர்பஸ், டோடல் எண்ணெய் நிறுவனம், ரெனால்ட் மற்றும் போஷொ கார் நிறுவனங்கள் ஈரானுடன் பில்லியன் டாலர் மதிப்பிலான ஒப்பந்தங்களை செய்துள்ளன. 2015 முதல் நடைமுறையில் ஒப்பந்தங்கள் உள்ளன. இந்நிலையில் அதிபர் ட்ரம்ப் ஈரானுடனான ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டுள்ளார். இதன் அடுத்த கட்டமாக ஈரானுடன் வணிக ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ள நிறுவனங்கள், நவம்பர் மாதத்தோடு தங்களது தொழில்களை முடித்துக் கொள்ள வேண்டும், புதிய ஒப்பந்தங்கள் போடக் கூடாது என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. இதற்கே பிரான்ஸ் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் இந்த முடிவை ஐரோப்பிய நிறுவ னங்கள் ஏற்கவேண்டியதில்லை. நாடுகளுக்கிடையிலான ஒப்பந்த முறிவு வேறு, வணிக ஒப்பந்தங்கள் வேறு. வணிகநடவடிக்கைகள் நிறு வனங்கள் தொடரலாம் என பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜான் ஈவ்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீடிரியன் கூறியுள்ளார். இது ஈரானின் இராஜதந்திரத்திற்கு கிடைத்துள்ள இன்னொரு வெற்றியாகும். இதனைவிட பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி ஆகிய நாடுகள் 15.05.2018 அன்று சந்தித்து அணுவாயுத ஒப்பந்தம் தொடர்ந்து செயற்படுத்தவதற்கான கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். அணுவாயுத அரசியல் மூலமாக ஈரானின் மீது பொருளாதார தடைகளை விதித்து மேற்காசியாவில் ஈரானை தனிமைப்படுத்தும் அமெரிக்கா – இஸ்ரேல் கூட்டின் இராஜதந்திரம் தோல்வியடைந்துள்ளது.

ஈரானின் இவ்வெற்றி மேற்காசிய பிராந்தியத்தில் அதன் செல்வாக்கை அதிகரித்துள்ளது. சிரியா – ரஷ்சியா – ஈரானியா கூட்டும் பலமடைந்துள்ளது. ஈரானுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இப்புதிய புரிந்துணர்வு உறவின் மூலம் அமெரிக்கா – இஸ்ரேல் கூட்டின் ஆதிக்கம் பலவீனமடையத் தொடங்கியுள்ளது. இதற்கு பதிலீடாக இஸ்ரேலிய இராணுவம் பாலஸ்தீனர்களை படுகொலை செய்ய ஆரம்பித்துள்ளது. இதனையே எதிர்காலத்திலும் மேற்காசியா முழுவதும் இஸ்ரேல் அமெரிக்க கூட்டு மேற்கொள்ள திட்டமிட்டு வருகிறது.

**19.05.2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்காசிய அரசியலில் ஜனநாயக சக்திகளின் எழுச்சிகள் அமெரிக்காவின் உத்திகளுக்கு சவாலாக மாறிவருகின்றன.


2018 ஆண்டு ஆரம்பத்திலிருந்தே மேற்காசிய அரசியலில் அமெரிக்காவின் செல்வாக்கு படிப்படியாக வீழ்ச்சி அடைந்து வரும் போக்கினை அவதானிக்கலாம். ஜனநாயகம் சார்ந்த வழிகளிலும் சரி வன்முறை சார்ந்த வழிகளிலும் அமெரிக்கா கைக்கொள்ளும் உத்திகள் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றது. மேற்காசிய அரசியலில் அமெரிக்கா மீதான அதிருப்தியும் எச்சரிக்கைகளும் ஜனநாயக வழிமுறைமைக்கு ஊடாக ஏற்பட்டு வருகிறது. அத்தகைய ஜனநாயக வழிமுறைகளை மேற்காசியாவில் அறிமுகப்படுத்திய அமெரிக்காவே அதன் விளைவுகளால் பாதிப்படைந்துள்ளது. அவ்வகை அமெரிக்காவிற்கு எதிரான ஜனநாயக பரப்பின் பின்பற்றப்பட்டு வரும் உத்திகள் பல வழிகளில் கையாளப்படுகின்றன.

ஈராக்கில் சதாம் உசைன் வீழ்ச்சிக்கு பிறகு அங்கு ஜனநாயக ஆட்சி மலர்ந்தது. இந்த நிலையில் திடீரென ஐ. எஸ் தீவிரவாதிகள் எழுச்சி பெற்று பெரும் பகுதியை கைப்பற்றி தனிநாடு அமைத்தனர். அவர்களின் ஆட்சி முறையால் வன்முறைகள் நிகழ்ந்து வருகின்றன. எனினும் அமெரிக்கா–ரஷ்சியா ஆகிய நாடுகளின் படைகளால் ஐ.எஸ் இன் பலம் கடந்த வருட இறுதியில் அழிக்கப்பட்டது. ஆனாலும் ஐ.எஸ் இன் எச்சங்கள் ஈராக்கிலிருந்து முற்றாக விலகிக் கொண்டவை என்றோ இஸ்லாமிய அடிப்படைவாதம் முற்றாக அழிந்து விட்டன என்று குறிப்பிடமுடியாது. இப்பின்னணியில் 12, மே–2018 ஈராக்கில் பாராளுமன்ற தேர்தல் நடத்தப்பட்டது. அதில் மும்முனை போட்டி நிலவியது. பிரதமர் ஹைதர் அல் – அபாடி தலைமையிலான கூட்டணி போட்டியிட்டது. அதனை எதிர்த்து ஷியா மதப் பிரிவு மதகுரு மக்தாதாசதாரின் கூட்டணியும், பதே கூட்டணியும் போட்டியிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈராக் நாட்டின் 2018ம் ஆண்டின் தேர்தல் முடிவுகள்**




படம் –11

இத் தேர்தலில் 44.5 சதவீதவாக்குகள் பதிவாகியதாக ஈராக்கிய ஊடகங்கள் தகவல் வெளியிட்டது. அதன்படி மதகுரு மக்தா தலைமை யிலான கூட்டணி 54 ஆசனங்களை கைப்பற்றியது. இக்கூட்டணிக்கு அடுத்தபடியாக பதேகட்சி இரண்டாவதாக பெரும்பாண்மையாக 47 இடங்களை கைப்பற்றியுள்ளது. அதேநேரம் இத்தேர்தலில் அமெரிக்கா வின் விஸ்வாசியான பிரதமர் அபாடி தலைமையிலான நசார் கூட்டணி 42 இடங்களை தக்கவைத்து தோல்வியுடன் மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

எந்தக்கூட்டணிக்கும் பெரும்பாண்மை இல்லாத காரணத்தால் கூட்டு அரசு ஒன்று அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்துள்ளது. இந்நிலையில் அதிக இடங்களில் வெற்றி பெற்ற மதகுரு மக்தாதா பிரதமர் அபாடினை கடந்தவார ஆரம்பத்தில் சந்தித்து ஆலோசனை நடத்தினார். ஹைதர் அல் அபாடி தலைமையில் புதிதாக கூட்டணி அரசு அமைப்பது தொடர்பாக இருவரும் பேச்சுவார்த்தை நடத்தியதாக தெரியவருகிறது. இதர கட்சிகளுடனும் ஆலோசனை நடத்தி மக்களுக்கு தேவையான பாதுகாப்பு, வளம் மற்றும் கூட்டு அரசு அமையும் என இந்த சந்திப்புக்கு பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ஹைதர் அல் அபாடி குறிப்பிட்டார்.

அமெரிக்கா மற்றும் ஈரான் நாட்டின் மிரட்டல்களை கையாண்ட திலும், ஐ.எஸ் பயங்கரவாதிகளை ஒடுக்கியதிலும் அபாடி தலைமை யிலான அரசு மிகவும் சிறப்பாக செயல்பட்டதால் அவரது தலைமையிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கூட்டணி அரசுக்கு எதிர்ப்பு இருக்காது என தெரிகிறது. எனினும் தேர்தல் முடிவுகள் வெளியான 90 நாட்களுக்குள் புதிய அரசு அமைத்தாக வேண்டும் என்னும் நிலையில் இதர கூட்டணி கட்சிகளின் ஆதரவையும் பெற்று போதுமான பெரும்பாண்மையுடன் புதிய அரசு அமைக்க சற்று தாமதம் ஆகலாம் என ஈராக் ஊடகங்கள் கருதுகின்றன.

இந்நிலையில் அமெரிக்காவிற்கு விரோதமான சக்திகளின் எழுச்சி நிகழ்கிறது என்பதை அவதானிக்க முடிகிறது. அதனை விரிவாக நோக்கு வோம். முதலாவது தேர்தலில் சதாரின் கூட்டணி வெற்றி பெற்றாலும் மதகுரு மக்தாசதார் பிரதமாரக முடியாது. காரணம் அவர் இத் தேர்தலில் போட்டியிடவில்லை. இத் தேர்தல் மேற்காசியாவில் அமெரிக்காவின் நலன் களுக்கு பாதகமான அம்சமாக மாறியது. வெற்றி பெற்ற அபாடி ஷியா மதப் பிரிவு தீவிரவாத இயக்கத்தின் தலைவராக உள்ளமை மற்றும் அமெரிக்கா வின் நீண்டகால எதிரியும் ஆவார்.

இரண்டாவதாக கம்யூனிசக் கட்சியின் வெற்றியும் அமெரிக்கா வின் செல்வாக்கினை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. ஈராக்கில் நடந்த பொதுத் தேர்தலில் ஈராக்கிய கம்யூனிஸ்ட் கட்சி குறிப்பிடத்தக்களவு வெற்றி பெற்றுள்ளது. அக்கட்சியின் சார்பில் இரண்டு பெண்கள் பாராளு மன்றம் செல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அமெரிக்க எதிர்ப்பை அடிப்படையாக கொண்டு அமைக்கப்பட்ட கம்யூனிஸ்ட் சதரிஸ்ட் கூட்டணி சார்பில் போட்டியிட்ட ஈராக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டு உறுப்பி னர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 1934 இல் உருவாக்கப்பட்ட ஈராக் கம்யூனிஸ்ட் கட்சி முதல் முறையாக நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளது. முஸ்லீம் மதநம்பிக்கையாளர்களின் புனித நகரங்களில் ஒன்றான நஜாபில் சுகாப் அல் கதீப் வெற்றி பெற்றுள்ளார். கதீப் ஒரு ஆசிரியை. வறுமைக்கு எதிரான சமூகப் போராளி, பெண்ணுரிமை போராளியுமாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராக் கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றி மத்திய கிழக்கு பகுதியில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு உற்சாகமளிக்கும் என்பது உறுதி.

இவை அமெரிக்காவின் ஆதிக்கத்திற்கு எதிராக ஜனநாயக ரீதியில் மக்கள் கொடுத்த பதிலடியாக அரசியல் அவதானிகளால் பார்க்கப்படுகின்றது. இதேபோன்றுதொரு பதிலடி மேற்காசிய நாடான லெபனானிலும் நடந்துள்ளது. இஸ்ரேல், சிரியாவை அண்டை நாடாக கொண்ட லெபனானில் கடைசியாக 2009 ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் நடந்தது. அடுத்த நான்கு ஆண்டில் தேர்தல் நடந்திருக்க வேண்டும். ஆனால் தேர்தல் இடம் பெறாததுடன் பிராந்திய அரசியல் சூழ்நிலையை கருத்தில் கொண்டு இரண்டு முறை பாராளுமன்றத்துக்கு நீட்டிப்பு அளிக்கப்பட்டது. இந்நிலையில் ஒன்பது ஆண்டுகளுக்கு பின்னர் மே.06, 2018 தேர்தல் இடம்பெற்றது.

128 இடங்களுக்காக நடந்த வாக்குப்பதவில் 49 சதவீதவாக்குகள் பதிவானது. தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் லெபனானில் உள்ள முக்கிய அரசியல் மற்றும் ஆயுத இயக்கமான ஹிஸ்புல்லா முன்னிலை வகிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவினாலும் இஸ்ரேலினாலும் பயங்கரவாத அமைப்பு என்று பிரகடனம் செய்யப்பட்டிருக்கும் லெபனானின் மிகவும் பலம் பொருந்திய ஷியா இயக்கமான ஹிஸ்புல்லா அமைப்பின் வெற்றியானது மேற்காசியா அரசியலில் காத்திரமான மாற்றங்களை ஏற்படுத்தலாம். அவை அமெரிக்காவின் ஆதிக்கத்திற்கு சவாலாகவே அமையப்பெறும். வெற்றி பெற்றுள்ள ஹிஸ்புல்லா அமைப்பு ஈரானின் ஆதரவு பெற்றதது என்பதும் ஷியா மத பிரிவைச் சேர்ந்த அமைப்பு என்பதும் இஸ்ரேல் – அமெரிக்க கூட்டிற்கு நெருக்கடி மிக்கதாக அமையும்.


அமெரிக்காவும் ஐரோப்பாவும் ஈரானில் தொடங்கி சிரியா லெபனானின் ஹிஸ்புல்லா இயக்கம், ஈராக்கில் தற்போதுள்ள அரசாங்கம் வரை படர்ந்து இருக்கும் "ஷியா பிறை நிலாவை தன் மேலாதிக்கத்திற்கு அச்சுறுத்தல் கொடுக்கும் திறன் உடையது என்று கருதுகிறது. ஷன்னி அரேபிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகள், துருக்கி மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் ஷியா பிறை நிலாவிலுள்ள பலமிக்க நாடுகளினை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் விருப்பத்தினை அமெரிக்காவிடம் பகிர்ந்தது. அவ்வகையில் சிரியா, ஈரான் ஆகிய நாடுகளின் பலத்தினை குறைக்க சிரியாவை முதலில் தம் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதன் மூலம் ஈரான் தன்னிலையாகவே பலம் குன்றி விடும் என்பதும் சிரியா மீதான அமெரிக்கா வின் தலையீட்டினை நோக்க முடியும்.எனினும் அமெரிக்கா எதிர்பார்க்காத வகையில் ஷியா பிறை நிலா பலமடைந்து வருகின்றது.

**ஷியா பிறைநிலா**



படம் –12

ஜனநாயக ரீதயான அம்சங்கள் மாத்திரமன்றி வன்முறை ரீதியான வழிகளிலும் மேற்காசியாவில் அமெரிக்காவின் ஆதிக்கம் நெருக்கடிக் குள்ளாக்கப்பட்டுள்ளது. பிரதானமாக சிரியா விவகாரம் குறித்தான சிரியா– ரஷ்சியா – ஈரான் கூட்டின் வெற்றியானது அமெரிக்காவின் அரசியல், இராணுவ ரீதியான ஆதிக்கங்களிலிருந்து மேற்காசியாவை ஓரளவிற்கு மீட்டு எடுத்துள்ளது. குறிப்பாக சிரியா அரசு கிளர்ச்சியாளர் களிடம் இருந்த கடைசி பகுதியையும் சிரியா இராணுவம் கடந்தவாரம் மீட்டுள்ளாக சிரியா ஊடகமான சனா செய்தி வெளியிட்டுள்ளது. மத்திய சிரியாவில் உள்ள ஹோம்ஸ் மற்றும் ஹாமாவுக்கு இடையிலான ஒரு பிரதேசத்திலிருந்து நூற்றுக்காண போராளிகள் தங்களின் குடும்பத்தோடு பேருந்து வழியாக வெளியேறி வருகின்றனர்.

சிரியா அரசு மற்றும் அதன் ரஷ்சியா கூட்டணியுடன் ஏற்பட்ட ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்கு சிரியாவில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசத்திற்கு இப்போராளிகள் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்படுகின்றனர். நீண்டகால முற்றுகைக்கு பிறகு கிளர்ச்சியா ளர்கள் வெளியேறும் கடைசி பகுதி இது. அத்துடன் சிரியாவிலிருந்து வெளிநாட்டுப் படைகள் விரைவில் வெளியேறும் என்று ரஷ்சியா அதிபர் புட்டின் தெரிவித்திருக்கிறார். இது தொடர்பான செய்தியை சிரியா அரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகமான சனா வெளியிட்டுள்ளது. சிரியா அதிபர் அல் ஆசாத்தின் திடீர் ரஷ்சியா சந்திப்பில் புடின் இதனை தெரிவித்திருக்கிறார். இது குறித்து புடின் கூறும் போது "பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் கிடைத்த வெற்றிகளையும் பயங்கரவாதத்துக்கு எதிரான சிரியா இராணுவத்தின் வெற்றிகளையும் நாங்கள் தொடர்படுத்தியே பார்கிறோம். விரைவில் வெளிநாட்டுப் படைகள் சிரியா பிராந்தியத்திலிருந்து வெளியேறும் என்றார்." இது மறைமுகமாக அமெரிக்கா இராணுவத்தின் வெளியேற்றம் பற்றியே குறிப்பிட்டுள்ளார்.

அணுவாயுத அரசியல் சார்ந்தும் சிரியா மண்ணில் இஸ்ரேல் – ஈரான் தாக்குதல்கள் நடவடிக்கைகள் மூலமும் ஈரானை பணிய வைக்கும் வன்முறை சார்ந்த உத்திகளில் அமெரிக்கா பெருமளவிற்கு தொடர்ச்சியான நெருக்கடியை கண்டு வருகிறது.

மேற்காசியாவில் அமெரிக்கா நலன்சார்ந்த அம்சங்கள் தொடர்ந்தும் சவாலுக்கும் நெருக்கடிக்குள்ளும் உட்பட்டு வருகின்றது. அமெரிக்காவின் உத்திகளை மேற்காசியா நாடுகள் ஜனநாயக சாதனங் களுக்குடாக பதிலளித்து வருவதோடு அமெரிக்காவிற்கு எதிரான வல்லரசுகளின் உதவியுடன் முறியடித்து வருகின்றன. லெபனான், ஈராக் நாடுகளில் எழுந்துள்ள ஜனநாயக வெற்றிகள் அமெரிக்காவின் உத்திகளை முறியடித்து வருகிறது. இதன் எதிர்காலம் ஜனநாயக வெளிக் கூடாக அமெரிக்கா அடைய இருந்த இலக்குகள் தகர்க்கப்படுகின்ற நிலை ஏற்படவுள்ளது. எனவே வன்முறையிலும் சரி ஜனநாயக மரபிலும் சரி மேற் காசிய மக்களின் விழிப்பு அமெரிக்காவின் ஆதிக்கத்தினை மட்டுப்படுத்து கின்ற போக்கு தவிர்க்க முடியாதது.

**26.05.2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்காசியா நாடுகள் மீதான அமெரிக்காவின் இராணுவ உத்திகளுக்கு பதில் பொருளாதார உத்திகள்

மேற்காசியா அரசியல் தற்போது பொருளாதார போர் மேகத்தினால் சூழ்ந்துள்ளது. சர்வதேச பிராந்திய நாடுகளுக்கிடையில் பொருளாதாரத்தினை அடிப்படையாக கொண்ட போர் இடம் பெற்று வருகின்றது. உலகமயமாக்கம், ஏகாதிபத்தியம் போன்றன அரசியலுக்கும் பொருளாதாரத்திற்கும் இடையில் உள்ள உறவை மேலும் நெருக்கமடையச் செய்துவிட்டன. அரசியலும் பொருளாதாரமும் எங்கும் எதிலும் தனித்து இயங்க முடியாத சூழல் உள்ளது. இதன் விளைவே இன்றைய மேற்காசிய பிராந்திய நாடுகளின் அரசியல் பொருளாதார நிலைமைகளுக்கு காரணமாகும்.

பெற்றோலிய தங்கம் நிறைந்த வளம் மிக்க பாலைவனப் பூமி மேற்காசியா. இங்கு எண்ணெய் வளம் நிறைந்த அளவுக்கு மனிதனின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் ஏனைய வளங்கள் அரிதானவை. எனவே தனது பெறுமதி மிக்க எண்ணெய் வளத்தினை வைத்து ஏனைய அத்தியாவசிய தேவைகளை பிறநாடுகளிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் மேற்காசிய பிராந்திய நாடுகளுக்கு உண்டு.

இதனை நன்கு அறிந்த வளம் சுரண்டும் நோக்கம் உடைய வல்லரசு நாடுகள் அந்நாட்டினை பலவீனப்படுத்தி தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து இலாபத்தினை ஈட்டிக் கொள்ள முயற்சிக்கின்றன. தமக்கு கட்டுப்பாடாத நாடுகள் மீது போர் தொடுத்து கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகின்றனர். எனினும் வல்லரசு நாடுகளின் போர் உத்தி எல்லா நாடுகள் மீதும் பிரயோகப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அதனால் அந் நாடுகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அவ்வல்லரசுகள் பொருளாதார தடை சார்ந்த உத்திகளை கையாளுகின்றன. பல்வேறு மாற்றங்களை கண்டு வரும் மேற்காசியாவின் அரசியல் பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் பொது நூலகம்
நல்லூர் பிரதேச சபை



சூழலில் கடந்த வாரம் பொருளாதாரம் சார்ந்த உத்திகள் அதிகளவு கையாளப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். அவ் உத்திகள் பற்றி பின் வருமாறு நோக்குவோம்.

சிரியா விவகாரம் சார்ந்து ஈரான் நாட்டினை கட்டுப்படுத்த அமெரிக்கா – இஸ்ரேலியா கூட்டு அணுவாயுத அரசியலை கையில் எடுத்தன. அமெரிக்கா அவ் ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக ட்ரம்ப் அறிவித்தார். எனினும் அது வெற்றியளிக்காத காரணத்தினால் ஈரான் மீது கடுமையான பொருளாதார தடைகளை விதிப்போம் என அமெரிக்கா எச்சரிக்கை விடுக்கின்றது. ஈரான் சில நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால் அப்பொருளாதார தடை நீக்கப்படும் என இராஜதந்திரமாகவும் ஈரானை தன் வசப்படுத்த முயற்சிக்கின்றது.

தங்களது நிபந்தனைகளை ஏற்காவிட்டால் ஈரான் மீது வரலாறு காணாத அளவு மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மைக் கேல் பாம்பியோ சூளுரைத்துள்ளார். இது குறித்து தலைநகர் வாஷிங்டனி லில் நடைபெற்ற ஹெரிடேஜ் அறக்கட்டளை என்ற ஆய்வு அமைப்பின் கூட்டத்தில் ஈரானுக்கான 12 அம்ச நிபந்தனைகளை முன்வைத்து அவர் பேசியதாவது:

அணு ஆயுத ஆய்வுகளை நிறுத்துவது மட்டுமன்றி, நீண்ட தொலைவு பாயக் கூடிய பலிஸ்டிக் வகை ஏவுகணைத் திட்டத்துக்கும் ஈரான் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அத்துடன் ஏமனில் ஹ•தி கிளர்ச்சியாளர்கள், சிரியாவில் அதிபர் அல் – அஸாத், லெபானில் ஹிஸ்புல்லா அமைப்பு போன்ற பிரிவினருக்கு ஆதரவு அளிப்பதன் மூலம் அந்த நாடுகளின் விவகாரங்களில் தலையிட்டு பிராந்திய ஆதிக்கத்தை நிலை நாட்டும் முயற்சியையும் ஈரான் கைவிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது போன்ற நிபந்தனைகளை ஏற்க மறுத்தால், அந்த நாட்டின் மீது வரலாறு காணாத அளவுக்கு மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும். நாங்கள் கொடுக்கும் பொருளாதார நெருக்கடி, இந்த விவகாரத்தில் அமெரிக்கா எவ்வளவு தீர்க்கமாக இருக்கிறது என்பதை ஈரான் தலைமைக்கு உணர்த்தும் அளவுக்கு மோசமாக இருக்கும். தற்போது ஈரான் சென்று கொண்டிருக்கும் மோசமான பாதையை அந்த நாடு மாற்றிக் கொள்ளாவிட்டால் அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் அந்த நாட்டுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றார் பாம்பேயோ.

பனிப்போர் காலத்திலிருந்து மேற்காசியாவில் அமெரிக்காவின் ஆதிக்கத்திற்கு சவாலாகவும் எண்ணெய் வளச் சுரண்டலுக்கு தடையாகவும் இருக்கும் ஈரானை கட்டுப்படுத்த நீண்டகால திட்டமிடலை கொண்டிருக்கும் அமெரிக்காவின் ஒரு உத்தியே அரபுவசந்தமும் சிரியா போரும். எனினும் அது பெரும்பாலும் தோல்வி கண்டுள்ள நிலையில் பொருளதாரம் சார் இராஜதந்திரத்தினை கைக்கொண்டு ஈரானை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர அமெரிக்கா கடும் பிரயத்தனம் செய்கின்றது. எனினும் அதுவும் சவால் மிக்க ஒன்றாக விளங்கி வருகிறது. காரணம் அமெரிக்கா வின் கூட்டு நாடுகளான ஐரோப்பிய நாடுகள் அணுவாயுத ஒப்பந்தத்திலி ருந்து விலகாமையும் பாரிய போர் ஒன்றினையும் விரும்பாமையே ஆகும். இதனை உறுதிப்படுத்தும் விதமாக கடந்த வாரம் ஈரானுடனான ஒப்பந்தத்தி லிருந்து அமெரிக்கா விலகினாலும் தாங்கள் விலகப் போவதில்லை என சீனாவும் ஜெர்மனியும் கூட்டாக அறிவித்துள்ளனர்.

ஈரானுடன் செய்து கொண்ட அணுசக்தி ஒப்பந்தம் மிகவும் மோசமானது. அதனால் எந்தப் பயனும் ஏற்படவில்லை என்று ஈரான் உடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் விலகினார். இந்நிலையில் அரசு முறை பயணமாக பெய்ஜிங் சென்றுள்ள ஜெர்மனி பிரதர் ஏஞ்சலா மெர்க்கல் ஈரான் விவகாரம் குறித்து சீன பிரதர் லீகெக்கியாங்குடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் கூட்டாக இருவரும் செய்தியாளர்களை சந்தித்த போது, ஈரான் உடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து விலகப் போவதில்லை என தெரிவித்தனர். முன்னதாக இந்த விவகாரம் குறித்து, அறிக்கை வெளியிட்ட ஈரான் தலைவர் அயதுல்லாகாமேனி 2015 ஆம் ஆண்டு சர்வதேச நாடுகளுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தை இன்றும் மதிப்பதா கவும், ஒருவேளை அந்த ஒப்பந்தத்தில் இருந்து பிறநாடுகளும் விலகினால், நிறுத்தப்பட்ட யூரேனியம் செறிவூட்டும் பணிகளை மீண்டும் தொடங்கி விடுவோம் என்றும் எச்சரித்து இருந்தார்.

அத்துடன் பாம்பியோவின் பொருளாதாரதடை பற்றிய எச்சரிக்கை யும் ஈரானினால் பெரிதாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. காரணம் ஐரோப்பிய நாடுகளின் ஆதரவு, அதன் ஆயுத பலம் போன்றன அமெரிக்கா வின் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளும் பலத்தை அளிக்கும். பாம்பியோவின் எச்சரிக்கைகளுக்கு ஈரான் இராணுவ கமாண்டர் இஸ்மாயின் கோசாரி கடுமையாக பதிலடி கொடுத்துள்ளார். ஈரான் மக்கள் இந்த அச்சுறுத்தலுக்கு எதிராக ஒன்றிணைந்து போராட வேண்டும், அமெரிக்காவின் செயலாளர் பாம்பியோவின் வாயிலேயே குத்த வேண்டும் என்று இஸ்மாயின் கோசாரி கூறியதாக ஈரான் லேபர் நியூஸ் ஏஜென்சி தெரிவித்துள்ளது.

ஈரானின் ஏவுகணைத் திறன்களைக் குறைப்பது அமெரிக்க செயலாளர் பாம்பியோவுக்கு இடப்பட்ட முதல் கட்டளை என்பதும் குறிப்பிடத்தக் கது.

தொடரந்து கருத்து தெரிவித்த இஸ்மாயின் கோசாரி "எங்களது கண்டம் விட்டு பாயும் ஏவுகணைகளை குறைக்கச் சொல்ல அமெரிக்கா யார்? வரலாற்றை உற்று நோக்கினால் ஹிரோஷிமா, நாகசாகியை அணுகுண்டு வீசித் தாக்கிய அமெரிக்கா தான் உலகின் நம்பர் 1 கிரிமினல்" என்று கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரான் மீது எவ்வாறு பொருளாதார தடை உத்தியை அமெரிக்கா பிரயோகின்றதோ அதேபோன்று கட்டார் மீதும் தனது நட்பு நாடான சவூதி அரேபியா மூலம் பொருளாதார தடைகளை விதித்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கின்றது. அதுவும் பெரும்பாலும் நெருக்கடிக்குள் உட்பட்ட ஒன்றாகவே உள்ளது. சிரியா போர் தொடர்பான அல் ஜீரா தொலைக்காட்சி விவகாரம், ஈரான் உடனான உறவு என்பவற்றின் காரண மாக கட்டார் மீது சவூதிஅரேபியா தலைமையிலான வளைகுடா நாடுகள் சில நிபந்தனைகளை விதித்தன. ஆனால் அவ் நிபந்தனைகளை கட்டார் ஏற்றுக் கொள்ளாததன் காரணமாக சவூதிஅரேபியா, பஹ்ரைன், எகிப்து மற்றும் ஐக்கிய அரபுஎமிரேட் ஆகிய வளை குடாநாடுகள் பொருளாதார தடைகளை அந்நாட்டின் மீது 2017 ஜீன் .இல் விதித்தன. எனவே தங்களுக்கு வேண்டிய உணவு பொருட்களை துருக்கி, மொராக் கோ, ஈரான் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து வருகிறது. கடந்த ஆண்டு ஜீலை 5 ம் திகதி முதல் இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் சவூதிஅரேபியா, வளைகுடா நாடுகளின் பொருட்கள் நேரடியாக இறக்குமதி யாகாமல் வேறு நாடுகளின் வழியாக கட்டாருக்குள் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இந்நிலையில் கட்டார் மீது தடைகளை விதித்துள்ள சவூதி தலைமையிலான நான்கு அரபு நாடுகளினதும் தயாரிப்புக்களை விற்பனை செய்வதற்கு கட்டாரின் பொருளாதார மற்றும் வர்த்தக அமைச்சு தடை விதித்துள்ளது. குறித்த நான்கு நாடுகளினாலும் தயாரிக்கப்பட்ட அனைத்துப் பொருட்களையும் கடைகளிலிருந்து நீக்குமாறு நாடு முழுவதிலுமுள்ள அனைத்துக் கடைகளுக்கும் கடந்த வாரத்தின் ஆரம்பத்தில் அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கட்டார் மீதான தடைகளினால் ஏற்பட்ட பாதிப்புக்களிலிருந்து அதனை மீட்க ஈரானும் துருக்கியும் அந்நாட்டுக்கு தேவையான உணவுக ளையும் ஏனைய அவசியமான பொருட்களையும் வழங்கி உதவி செய்து வருகின்றன. சவூதி தலைமையிலான நாடுகளால் கட்டார் மீது விதிக்கப் பட்ட தடைகளால் ஏற்பட்ட பாதிப்புக்கள் மறைந்து வருவதாக கடந்த மார்ச் மாதம் சர்வதேச நாணய நிதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளி நாட்டுக் கொள்கையின் அடிப்படையில் அடிபணியச் செய்வதற்கு காத்திருந்த சவூதி அரேபியாவின் எதிர்பார்ப்புக்களுக்கு விழுந்த அடியாக இது பார்க்கப்படுகிறது.

மேற்காசியாவினை தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர அந்நாடுகள் மீது போரினை விட சிறந்த ஆயுதமாக பொருளாதாரம் சார்ந்த உத்திகளை அமெரிக்கா கைக்கொள்ள முயற்சிக்கிறது. குறிப்பாக ஈரான் நாட்டின் அணுவாயுத பலம் அந்நாட்டின் மீதான போர் நடவடிக்கை மேற்கொள்ள உள்ள தடையாகும். அதனால் ஈரான் நாட்டின் மீதும் அதன் நட்பு நாடுகள் மீதும் பொருளாதார தடைகளை விதிப்பதன் மூலம் தன்னு டைய ஆதிக்கத்தினை ஏற்படுத்த விளைந்தது. மேற்காசியாவில் ஆரம்ப கால பொருளாதார தடைகளுக்கு அமெரிக்காவின் நட்பு நாடுகள் மற்றும் ஐ.நா சபை போன்றன சிறந்த பங்காளிகளாக இருந்தன. இதனால் அமெரிக்காவின் பொருளாதார தடைகளுக்கு அனைத்து நாடுகளும் அஞ்சின. ஆனால் இன்று அமெரிக்காவின் பொருளாதார தடைகளுக்கு ஐரோப்பிய நாடுகளும் ஐ. நா சபையும் ஒத்துழைக்காத போக்கினையே கொண்டுள்ளன. அரசியல் பொருளாதார ரீதியாக வளர்ந்து வரும் ரஷ்சியா, சீனா போன்ற நாடுகளின் நட்புறவும் அமெரிக்க எதிர் மேற்காசிய நாடுகளுக்கு உள்ளமையால் தற்போது அமெரிக்கா மேற்கொண்டு வரும் பொருளாதார தடை உத்தி பாரிய நெருக்கடிக்கே உள்ளாகும்.

**02.06.2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியா வடகொரியா ஒத்துழைப்பும் அமெரிக்கா எதிர்கொள்ளும் சவாலும்.

அமெரிக்கா ஜனாதிபதி ட்ரம்ப் வடகொரியா தலைவர் கிம் ஆகிய இருவரும் வருகின்ற 12ம் திகதி சிங்கப்பூரில் சந்தித்துப் பேச இருப்பதை உலகமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. அதற்கான ஏற்பாடுகள் முழு வீச்சில் நடந்து வருகின்றன. இந்த நிலையில் சிரியா அதிபர் பஷார் அல் ஆசாத் அரச முறை பயணமாக வடகொரியா செல்ல இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன் பின்னணியில் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவும் சர்வதேச அரசியலில் பல விளைவுகளை ஏற்படுத்தும்.

சிரியாவின் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் வடகொரியாவிற்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டு, அந்நாட்டு அதிபர் கிம் ஜாங் உனை சந்திக்கத்திட்டமிட்டுள்ளதாக வடகொரிய செய்தி ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இதனை சிரியா ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்தும் உறுதிப்படுத்தியுள்ளார். அவர் தனது வடகொரிய விஜயம் தொடர்பாக குறிப்பிட்டது கவனிக்கத்தக்கது.

“நான் வடகொரியாவிற்கு விஜயம் மேற்கொண்டு அந்த நாட்டின் ஜனாதிபதி கிம் ஜொங் அன்னை சந்தித்து பேசவுள்ளேன் என சிரியாவிற்கான வடகொரியாவின் புதிய தூதுவரை சந்தித்த வேளையிலேயே தெரிவித்துள்ளார். மேலும் சிரியா அதிபர் குறிப்பிடும் போது வடகொரியா ஜனாதிபதியின் மிகத்திறமையான தலைமைத்துவம் காரணமாக கொரிய தீபகற்பத்தில் இடம்பெற்ற சிறந்த விடயங்களை உலகம் வரவேற்கின்றது என சிரியா ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அவர் இறுதியில் நிச்சயம் வெற்றி பெறுவார், இரு கொரியாக்களின் இணைப்பை சாத்தியமாக்குவார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். வடகொரியா அதிபர் கிம் வரும் ஜீன் 12ம் திகதி அமெரிக்கா அதிபரான ட்ரம்ப்பை சந்திக்கத் திட்டமிட்டுள்ளதால் சிரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபருடனான சந்திப்பு எப்போது என்பது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்புக் கள் இன்னும் வெளியிடவில்லை.

சிரியா அதிபர் வடகொரியா செல்வது உறுதியானால் கிம் ஜாங் உன் அதிபராகப் பதவியேற்ற பின் முதன் முதலாக வடகொரியா செல்லும் வெளிநாட்டு அதிபர் அல் ஆசாத் தான் என்பதும் குறிப்பிடத்தக்கது. வட கொரியா மற்றும் சிரியா ஆகிய இரண்டு நாடுகளும் அணு ஆயுதச் சோதனை நடத்தி வருவதாக உலக அளவில் புகார்கள் கூறப்பட்டன. அந்த வகையில் தற்போது இந்த இரு நாட்டு அதிபர்களின் சந்திப்புக்கான திட்டம், உலக அரசியலில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தாகக் கருதப்படுகிறது. இரு நாடுகளும் சர்வதேச ரீதியில் அமெரிக்காவின் எதிரிகளாக இனம் காணப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன.



கிம் ஜோங் உன்
வடகொரியாவின் தலைவர்
2011ஆம் ஆண்டிலிருந்து

வடகொரியாவிற்கும் சிரியாவிற்கும் இடையில் நல்லுறவுகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. 1973 ஆம் ஆண்டு இடம் பெற்ற அரபு யுத்தத்தின் போது சிரியாவிற்கான ஆயுதங்களை வடகொரியா வழங்கிய திலிருந்து அவ்வுறவு ஆரம்பித்தது. இப்போது சிரியா இரசாயன ஆயுதங்க ளை தயாரிக்க தேவையான உதவிகள் அனைத்தும் வடகொரியா செய்கிறது என்ற குற்றச்சாட்டு மேற்கு நாட்டவர்களால் குற்றம் சாட்டப்பட்டது. அத்துடன் இரசாயன ஆயுதங்களை தயாரிக்க தேவையான உப கரணங்க ளை வடகொரியா அனுப்புகிறது என ஐ.நாவின் அறிக்கை கூறுகிறது.

2012 மற்றும் 2017 காலகட்டங்களில் வடகொரியாவில் இருந்து சிரியாவிற்கு ஆயுதம் தயாரிப்பதற்கு தேவையான பொருட்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளது. விஷவாயு ஆயுதங்கள் தயாரிப்புக்கான கொள்கலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், வால்வுகள் மற்றும் குழாய்கள் ஆகியவை அடங்கும் உபகரணங்கள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது என ஐ.நா அறிக்கையில் மேலும். குறிப்பி டப்பட்டது உள்ளது. இதனை விட வடகொரியாவின் ஏவுகணை தயாரிப்பு நிபுணர்கள் சிரியாவின் ஆயுத தயாரிப்பு மையங்களில் காணப்பட்டதாக ஐ.நாவின் நிபுணர்கள் உறுதிப்படுத்தினர். வடகொரியாவில் இருந்து கிடைக்கும் உதவிக்கு சிரியா சட்ட விரோதமாக நிதியை வழங்கி வருகிறது எனவும் நிபுணர்கள் மேலும் குற்றம் சாட்டுகிறார்கள்.

இந்நிலையில் வடகொரியா – சிரியா அரச தலைவர்களின் சந்திப்பு உலக அளவில் பெரிதும் முக்கியத்துவப்படுத்தப்படும். இரு நாடுகளும் அமெரிக்காவின் பலத்த நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றன. அத்தகைய நெருக்கடிகளுக்கு காரணம் அந்நாடுகள் பிராந்தியத்தில் புவியியல் ரிதீயான முக்கியத்துவத்தினையும் கொண் டுள்ளன. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு நெருக்கமடையுமாக இருந்தால் அந்நாடுகள் கூட்டாக இணைந்து அமெரிக்காவின் நெருக்கடிக ளுக்கு பதில்களை வழங்கும். இது சர்வதேச ரீதியில் இரு நாடுகளுக்கும் உள்ள அரசியல் பொருளாதார சவால்களுக்கு இலகுவாக முகம் கொடுக்க உதவும்.

அத்துடன் இரு நாடுகளும் இணைந்து அமெரிக்கா சார்ந்த நட்பு நாடுகளுக்கு எதிரான ஒர் அணியை பலத்தப்படுத்த முடியும். அவ்வணியில் சீனா, ரஷ்சியா, ஈரான், ஆகிய பலமிக்க நாடுகள் ஏற்கனவே இடம் பெற்றுள்ளன. இவ்வணி மூலம் சர்வதேச ரீதியில் தங்களுக்கான அரசியல் பொருளாதார ரீதியாக ஏற்படக்கூடிய சவால்களுக்கு முகம் கொடுக்கும் அதேநேரம் பொருளாதார ரீதியான நன்மைகளையும், இராணுவ ரீதியான வெற்றிகளையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

வடகொரியாவை பொறுத்தவரை பேச்சுவார்த்தைக்கு முன்னர் தனக்கானதொரு பலமான ஒரு அணியை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக சிரியா – வடகொரியா தலைவர்களின் சந்திப்பு அமையும். இவ்வாறே முடிந்த மாதங்களில் ரஷ்சியா வெளிவிவகார அமைச்சரின் வடகொரியா விஜயம், வடகொரியா தலைவரின் சீனா விஜயம் என்பன வடகொரியா தலைமையின் சிங்கப்பூர் உச்சி மகாநாட்டுக்கான தயாரிப்பாகவே கொள்ளமுடியும். பேச்சு வார்த்தை மேசையில் சீனா, ரஷ்சியா, ஈரான், சிரியா ஆகிய நாடுகளின் பலமானதொரு உதவி அமெரிக்காவின் ஒரு தலைபட்சமான தீர்மானங்கள் எடுப்பதை தடுக்க முடியும். அத்துடன் வடகொரியாவின் கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய நிலை எதிர் தரப்புக்கு ஏற்படும்.

சிரியாவை பொறுத்தவரையில் அமெரிக்காவிற்கு எதிரான அணியினை பலப்படுத்துவது அமெரிக்காவின் அனைத்து வகை உத்திகளையும் முறியடிக்க உதவும் எனக் கருதுகிறது. ஏற்கனவே வலுவடைந்துள்ள சீனா– ரஷ்சியா – ஈரான் – வடகொரியா அணி சிரியாவின் அரசியல் இருப்பையும் ஆட்சியாளர்களின் இருப்பை உத்தரவாதப்படுத்தியுள்ளது. இது மேலும் அமெரிக்காவிற்கு எச்சரிக்கையும் அச்சுறுத்தலையும் இராஜதந்திர சவால்களையும் ஏற்படுத்தக் கூடியது.

அமெரிக்கா எப்போதும் பேச்சுவார்த்தை இராஜதந்திரத்தை மிகநுட்பமாக கையாண்டு தனக்கு எதிரான நாடுகளை அழிக்கும் உத்தியை மிக வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றது. எனினும் இவ்வுத்தியை சவாலுக்கு உட்படுத்தும் விதத்தில் வடகொரியா செயற்பட்டு வருகின்றது. இதனால் அமெரிக்கா அப்பேச்சுவார்த்தையில் வடகொரியாவின் உத்திகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். இதனை பயன்படுத்தி காலதாமதப்படுத்தும் தந்திரத்தை அமெரிக்கா பிரயோகிக்க முடியும்.

எதுவாயினும் சர்வதேச அரசியல் ஒரே தளத்தில் பிராந்தியங்கள் ஒவ்வொன்றுக்குமான விசேட பண்புகளோடு பயணிப்பதில்லை. மேற்காசியாவும் கிழக்காசியாவும் அமெரிக்கா வல்லரசுக்கு எப்படியோ அவ்வாறான தொரு பரிமாணத்தை சிரியா – வடகொரியா கூட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைத்து இருக்கிறது. அமெரிக்காவை எதிர் கொள்ளுதல் என்பது சிறிய தேசிய அரசுகளின் கூட்டு இணைவில் தங்கியுள்ளது. வடகொரியாவை அமெரிக்கா முறியடிக்க முயலுகின்ற போது சிரியாவும் சிரியாவை முறியடிக்கின்ற போது வடகொரியாவும் பரஸ்பரம் நட்பு நாடுகளாக அமெரிக்கா ஆதிக்கத்தை எதிர்கொண்டு வருகின்றன. எனவே சிங்கப்பூர் உச்சிமாநாடு அமெரிக்காவிற்கு பலமான சவால் மிக்க விடயமாகவே அமையும்.

**09.06.2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானின் இராஜதந்திரமும் அமெரிக்காவின் சறுக்கலும்

சர்வதேச அரசியலில் இராஜதந்திரத்தினை சரியாகவும் திறமை யாகவும் கையாளும் எந்தவொரு நாடும் தனது தேசிய சர்வதேச நலன்களை இலகுவில் தக்க வைத்துக் கொள்ளும். அந்தவகையில் ஈரான் அணுவாயுத உடன்படிக்கை விடயத்தில் கைக்கொண்ட இராஜதந்திர நடவடிக்கைகள் அதனை பலமான சக்தியாக மாற்றி வருகிறது. அணுவாயுத உடன்படிக்கை விவகாரத்தில் ஈரான் பல இராஜதந்திர நடவடிக்கைகளை கைக்கொண்டுள்ளது.

ஈரான் அணு ஆயுதங்களைக் குவித்து வருவதாகக் கூறி அதன் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்தது. இந்தத் தடைகள் 2015ஆம் ஆண்டு விலக்கிக் கொள்ளப்பட்டன. இதற்காக, 2015 ஆம் ஆண்டு ஒபாமாவின் ஆட்சிக்காலத்தில் ஈரானுடன் கூட்டு செயல்திட்ட ஒப்பந்தத்தை அமெரிக்கா, சீனா, பிரிட்டன், பிரன்ஸ் உள்ளிட்ட நாடுகள் மேற்கொண்டன. அணுசக்தி ஆராய்ச்சிகளை ஈரான் நிறுத்திக் கொண்டதன் பேரில் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இவ்ஒப்பந்தம் பாலிஸ்டிக் ஏவுகணை மற்றும் மேற்காசியாவில் அதன் பங்கு ஆகிய அம்சங்கள் கொண்ட ஒன்றாக விளங்கிறது. மேலும் இவ் ஒப்பந்தின் பிரகாரம் அணு ஆயுதங்களை மேற்காசிய நாடுகளுக்கோ அல்லது ஏனைய பிராந்திய நாடுகளுக்கோ விநியோகிப்பதற்கான தடையையும் ஏற்படுத்தியது.

இதனிடையே அமெரிக்க அதிபராக கடந்த ஆண்டு பதிவியேற்ற டொனாலட் டிரம்ப் மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்தை தேர்தல் காலத்திலிருந்து கடுமையாக விமர்சித்தார். அவர் இந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு, ஈரான் மீது மீண்டும் பொருளாதார தடைகள் விதிக்கப்படும் எனவும் அச்சுறுத்தினார். அதற்கான காலக்கெடு மே 12 எனவும் அவர் தெரிவித்திருந்தார். அதன்படி இவ்ஒப்பந்த்திலிருந்து மே 9ம் திகதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவின் வெளியேற்றம் பற்றி ட்ரம்ப் அறிவித்தார். 2015ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அந்த ஒப்பந்தம் ஏமன், சிரியா, மற்றும் மத்திய கிழக்கின் பிறபகுதிகளை உள்ளடக்கி இருக்க வேண்டும். எனவே அந்த ஒப்பந்தம் பைத்தியக்காரத்தனமானது. ஆகையால் அதைவிட சிறப்பான ஒரு ஒப்பந்தம் உருவாக்கலாம் என்றார்.

ட்ரம்பின் இவ் அறிவிப்பின் பின்னால் மேற்காசியாவை மையமாக கொண்ட அமெரிக்கா – இஸ்ரேல் சார்ந்த நலன்கள் உள்ளன. ஈரானை கட்டுப்படுத்துவதற்கான ஒரு இராஜதந்திர நடவடிக்கையாகவே அமெரிக்கா – இஸ்ரேல் கூட்டு அணுவாயுத ஒப்பந்தத்தை கையிலெடுத்தது.

அந்த இராஜதந்திர நடவடிக்கையை முறியடிக்க ஈரான் மேற்கொண்ட இராஜதந்திர நடவடிக்கைகளில் முதலாவதாக ஈரான் அணுவாயுத ஒப்பந்தத்திலிருந்து உடனடியாக விலகாமல் இருந்தமை யோகும். இதன் மூலம் ஏனைய ஒப்பந்த நாடுகளுடன் நல்லுறவையும் நற்மதிப்பையும் ஏற்படுத்திக் கொண்டது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளுட னான நட்பு இதன் மூலம் அதற்கு வலுவடைந்துள்ளது. இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஐரோப்பிய நாடுகளான பிரித்தானிய, பிரான்ஸ், ஜெர்மனி என்பன இதலிருந்து விலகாததுடன் அமெரிக்காவின் வெளியேற்றத்தி னையும் கண்டித்திருந்தனர். அமெரிக்கா ஈரானுடான ஒப்பந்தத்திலிருந்து விலகியதால் மேற்காசிய நாடுகளில் பதற்றம் நிலவுவதாக மெக்ரான் கவலை தெரிவித்திருந்தார். இது அமெரிக்கா விற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் விரிசலை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் அணுவாயுத ஒப்பந்தத்திலிருந்து விலகுவது பற்றிய அறிவித்தலை தொடர்ந்து ஐரோப்பிய நாடுகள் ஒப்பந்தத்திலிருந்து விலகமால் இருப்பதற்கு ஈரானுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டன. இது மேற்காசிய பிராந்தியத்திலும் உலக அரசியலிலும் ஈரானின் அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியான அந்தஸ்தினை உயர்த்தியுள்ளது. ஒப்பந்தத்திலிருந்து ஈரான் விலகாமல் இருந்து மேற்கொண்ட இராஜதந்திர வெற்றியாக அரசியல் அவதானிகளால் இது பார்க்கப்படுகிறது.

ஈரானுடன் வல்லரசு நாடுகள் மேற்கொண்ட அணுசக்தி ஒப்பந்தத் ததைக்காக்க ரஷ்சியா அதிபர் விளாடிமீர் புடினும் ஜெர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்கலும் உறுதி பூண்டனர். பிராந்திய மற்றும் உலக அமைதிக்கும் ஸ்திரத் தன்மைக்கும் அந்த ஒப்பந்தம் மிகவும் முக்கியமானது என்பதை மீண்டும் உறுதி செய்து கொண்ட இருவரும், அந்த ஒப்பந்தத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து தங்களது கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர். ஐரோப்பாவிற்குள் எழுந்துள்ள கருத்துப் பரிமாற்றம் ஈரானின் இராஜதந்திர அரசியலை வெற்றிக்கு இட்டுச் சென்றுள்ளது. ஈரானைவிட ஏனைய நாடுகள் அவ்ஒப்பந்தம் தொடர்பாக கரிசனையாக இருப்பதும் அது தொடர்பான சந்திப்புக்களை மேற்கொள்வதும் என்பதும் நன்மையானதே. ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகிக் கொண்டாலும் அதனால் வரும் நெருக்கடிகளுக்கும் சவால்களுக்கும் ஈரான் தனித்து முகம் கொடுக்கப் போவதில்லை என்பதேயே இத் தலைவர்களின் சந்திப்பு உணர்த்தும் செய்தியாகும். இது ஈரானின் அரசியல் உறுதிப்பாட்டிற்கு கிடைத்த அங்கீகார மாகும்.

மூன்றாவதாக அமெரிக்கா அணுவாயுத ஒப்பந்தத்திலிருந்து வெளியேறியதனை தொடர்ந்து ஈரான் சிரியாவிலிருந்து இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு பிரதேசமான கோலன் குன்றின் பகுதிகள் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளது. 2018 மே மாதத்தின் தொடக்கத்தில் இஸ்ரேலின் நிலைகள் மீது ஈரானிய புரட்சிப்படை இருபது ராக்கெட்டுகளை ஏவியதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது. இதற்குப் பதிலடியாக ஈரானிய ஆயுதக் கிடங்குகள், போக்குவரத்துக் கேந்திரங்கள், உளவு மையங்கள் ஆகியவை மீது இலக்கு வைத்துத் தாக்கியதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது. அதேநேரம் இஸ்ரேலின் ஏராளமான ஏவுகணைகளை சுட்டு வீழ்த்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகவும் இஸ்ரேல் தாக்குதலை தம் நாட்டுவான் பாதுகாப்பு அமைப்பு முறியடித்தாகவும் சிரியாவின் அரசு ஊடகம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் ஈரான் மேற்காசிய பிராந்தியத்தில் வலுவாகவுள்ளதை உணரமுடியும்.

நான்காவது, அணுவாயுத ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா மீது முன்வைக்கப்படும் விமர்சனங்களை பொருட்பாடுத்தாத ட்ரம்ப் ஈரானிலிருந்து வணிக நிறுவனங்களை வெளியேற உத்தரவிட்டார். இதனை பிரான்ஸ் கண்டித்தது. அமெரிக்கா ஈரானுக்கு எதிராக மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கைக்கும் ஈரான் பதில் கூற முன்னர் ஐரோப்பிய நாடுகள் கூறுவது அதன் செல்வாக்கினை உலக அளவில் அதிகரித்துள்ளது.

ஐந்தாவது அணுவாயுத ஒப்பந்தம் சார்ந்து சீனாவின் ஆதரவினையும் ஈரான் பெற்றுக் கொண்டுள்ளது. அணுவாயுத ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுவது தொடர்பான அறிவிப்பினைத் அடுத்து ஈரான் நாட்டின் வெளியுறவுச் செயலாளர் சீனாவிற்கு விஜயம் செய்து ஆலோசனை நடத்தினார். சீன தனியார் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் டோங்மிங் பெட்ரோகெ மிக்கல்ஸ் அமெரிக்காவில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்தி விட்டு ஈரானில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதாக அந்த நிறுவன அதிகாரி தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் மீதான சுங்க வரியை அதிகரிக்க சீன திட்டமிட்டுள்ளது. அதற்கு பதிலாக ஈரான் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யவும் திட்டமிட்டுள்ளது. சீனாவின் இவ் நடவடிக்கை மூலம் அமெரிக்கா விதிக்கபோகும் பொருளாதார தடைகள் ஈரானின் பொருளாதாரத்தை பெரிதும் பாதிக்காது என்பதனை காட்டுகின்றது. அமெரிக்காவினால் ஈரானுக்கு பெரியளவிலான தடைகளையும் சவால்களையும் ஏற்படுத்த முடியாது என்பதனை நிருபீத்துள்ளது.

எனினும் அமெரிக்கா தொடர்ந்தும் ஈரானுக்கு எதிராக பொருளாதார தடைகளை விதித்து வருகிறது. அத்துடன் ஈரானுடனான பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளை துண்டிக்குமாறு ஏனைய நாடுகளுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுத்து வருகிறது. இதனால் அமெரிக்கா மீது சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தல் என்பதன் மூலம் அமெரிக்காவின் வல்லரசிற்கு சவால்விடும் இராஜதந்திர நடவடிக்கையை ஈரான் மேற்கொண்டுள்ளது. இது குறித்து டுவிட்டரில் கருத்து பதிவிட்டுள்ள ஈரான் வெளியுறவு மந்திரி முகமது ஜரீப் "ஈரானுடனான உறவு மற்றும் சட்டபூர்வமான கடமைகளை அமெரிக்கா அவமதித்துவிட்டது. இவ்விவகாரத்தை நாங்கள் சட்டபூர்வ மாக எதிர்கொள்ள உள்ளோம்." என தெரிவித்துள்ளார். இந்த வழக்கின் மீதான விசாரணை வரும் அக்டோபர் மாதம் மேற்கொள்ளப்படும் என சர்வதேச நீதிமன்றம் அறிவித்துள்ளது. சர்வதேச நீதிமன்றத்தில் அமெரிக்கா வல்லரசு மீது விசாரணை மேற்கொள்ளப்படுதல் என்பது சர்வதேச அரசிய லில் அதன் மதிப்பினையும் செல்வாக்கினையும் வீழ்ச்சியடையச் செய்யும் ஒன்றாகும். ஈரான் மீது திணித்த அமெரிக்காவின் அணுவாயுத அரசியலை அதன் மீதே திணிக்கும் இச் செய்றபாடு ஈரானின் சமகால இராஜதந்திர நகர்வாக காணப்படுகின்றது.

மேற்காசிய அரசியலில் சிரியா விவகாரம் மூலம் பலம் பெற்று வரும் ஈரான் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் அமெரிக்கா – இஸ்ரேல் மேற்கொள்ளப்பட்ட இராஜதந்திர உத்தியே அணுவாயுத உடன்படிக்கையி லிருந்து அமெரிக்காவின் வெளியேற்றமும் பொருளாதார நடவடிக்கைக ளும் ஆகும். சிரியாவின் வடக்கு எல்லையில் ஈரான் நிலை கொண் டுள்ளது. சிரியா விவகாரத்தின் மூலமாக ஈரான் தனது படைகளை அந் நாட்டிற்கு நகர்த்தி இஸ்ரேலுக்கு அச்சுறுத்தல் கொடுக்கும் வண்ணம் செயல்பட்டு வருகிறது. இது இஸ்ரேலுக்கு பாரிய தலையிடியாகியுள்ளது. இதனால் பாலஸ்தீன விவகாரம் தொடர்பான எந்வொரு நகர்வுகளையும் மேற்கொள்ள முடியாத இக்கட்டான சூழலுக்குள் இஸ்ரேல் தள்ளப் பட்டுள்ளது. சிரியா விவகாரத்திலிருந்து ஈரானை நாட்டினை வெளியேற்ற அந்நாட்டினை பலவீனப்படுத்தும் இராஜதந்திர உத்திகளை அமெரிக்கா –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரேல் கூட்டு கையாண்டு வருகிறது. எனினும் அவ்நடவடிக்கைகள் ஒவ் வொன்றையும் தோற்கடிக்கும் விதத்திலான எதிர் இராஜதந்திர நடவடிக் கைகளை ஈரான் மேற்கொண்டு வருவதுடன் அதில் வெற்றிகளையும் ஈட்டிவருகிறது.

சர்வதேச அரசியலில் இதுவரை காலமும் அமெரிக்க இராஜதந்திரத்திற்குள் அகப்படும் நாடுகள் அதற்கு எதிர் இராஜதந்திர நடவடிக்கைகள் மேற்கொள்ளமுடியாது, திறனிற்று அடிபணிந்துபோகும் அல்லது அழிந்துபோகும் தன்மையே நிலவியது. ஆனால் அமெரிக்காவின் ஈரான் மீதான அணுவாயுத இராஜதந்திர நகர்வுகளுக்கு சிறந்த பதில் இராஜதந்திர நகர்வுகளை ஈரான் துணிந்து மேற்கொண்டு வருவதை அவதானிக்கலாம். சர்வதேச நீதிமன்றத்தில் ஈரானின் தொடுத்த விசாரணை மேற்கொள்ளப்படும் பட்சத்தில் அமெரிக்காவின் பொருளாதார தடைகள் செல்லுபடியற்றது என்றும் முடிவுகள் வரலாம். வழக்கின் முடிவுகள் யார் பக்கம் வந்தாலும் வல்லரசு நாட்டின் மீது ஈரான் வழக்கு தொடுத்தன் மூலம் அமெரிக்காவின் உலகளாவிய தலைமைச் செல்வாக்கு கேள்விக் குள்ளாக்கப்படும்.

**நிமிர்வு (ஆடி,2018)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லரசுகளின் வர்த்தகப் போரும் ஜி–7 மாநாடும் 2018 ஆம் ஆண்டின் யூலை மாதம்

2018 ஆம் ஆண்டின் யூலை மாத உலக அரசியலில் அரசியல் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்புக்களின் மாநாடுகள் நடந்து முடிந்துள்ளது. இம்மாநாடுகளில் உலகளவில் வல்லரசுகளுக்கு இடையில் வர்த்தகப் போரை ஏற்படுத்தும் அபாயமான சூழல் தென்படுகிறது. கனடா நாட்டில் கியூபெக் மாகாணத்தில் உள்ள லமால்பே நகரில் கடந்த வாரத்தின் ஆரம்பத்தில் ஜி – 7 உச்சி மாநாடு நடந்தது. இம் மாநாட்டில் இடம்பெற்ற வர்த்தக போர் பற்றியும் மற்றும் மாநாட்டில் இடம் பெற்ற விடயங்கள் மூலம் உலக அரசியல் பொருளாதாரத்தில் ஏற்படுத்தவுள்ள விளைவுகள் பற்றிய புரிதல் அவசியமானது.

ஜி – 7 மாநாட்டில் ட்ரம்ப் ஏனைய நாடுகளுடன் முரண்பட்டமை வர்த்தகப் போருக்கான சூழலை ஏற்படுத்தியுள்ளது. அம்மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அதிகவிடயங்களில் முரண்பட்டுக் கொண்டதுடன் இறுதியாக மாநாட்டின் கூட்டறிக்கையையும் நிராகரித்தார். இதில் கனடா, அமெரிக்கா, ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், ஆகிய ஏழு நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். இந்த மாநாடு தொடங்கும் முன்பு, அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ரஷ்சியாவும் பங்கேற்க வேண்டும் என்ற கருத்தை தெரிவித்திருந்தார்.

முன்னதாக உக்ரைன் நாட்டின் ஒரு பகுதியாக இருந்த க்ரமியாவை கடந்த 2014 ம் ஆண்டு ரஷ்சியா தன்னுடன் இணைத்துக் கொண்டது. இதனையடுத்து ஜி – 7 அமைப்பிலிருந்து ரஷ்சியா நீக்கப்பட்டது. இருப்பினும் ஜி – 7 மாநாட்டில் ரஷ்சியா பங்கேற்ற விரும்புவதாக அறிவித்தது. மேலும் இது குறித்து ட்ரம்ப் கூறும் போது இம் மாநாடு சுருங்கி விட்டது. ரஷ்சியா இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருக்க வேண்டும். ரஷ்சியா இதில் பங்கேற்க பிறநாடுகள் அனுமதிக்க வேண்டும். உங்களுக்கு பிடிக்கிறதோ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்கவில்லையோ – இது அரசியல் ரீதியாக தவறாகக் கூட இருக்கலாம். ஆனால் நாம் இயக்குவதற்கு ஒரு உலகம் உள்ளது, ஜி – 8 நாடுகள் என இருந்ததிலிருந்து வெளியேற்றிய ரஷ்சியாவை மீண்டும் இதில் சேர அனுமதிக்க வேண்டும் என்று கூறினார்.

ரஷ்சியா ஜனாதிபதி புட்டினின் விருப்பத்தை முன்மொழிந்த ட்ரம்புக்கு ஜி – 7 கூட்டமைப்பு தலைவர்கள், உக்ரைன் விவகாரத்தில் முன்னேற்றம் இல்லாதவரை, ரஷ்சியா இந்த மாநாட்டில் பங்கேற்கக் கூடாது என்ற கருத்தினை ஒரு மனதாக ஒப்புக் கொண்டனர் என்று ஜெர்மன் சான்சிலர் ஏங்கெலாமெர்கல் பதிலடி கொடுத்தார். அத்துடன் ட்ரம்புக்கு எதிரான கருத்துக்களை நேரடியாக பிறநாட்டின் தலைவர்கள் முன் வைத்தனர். இதற்கு காரணம், சமீபத்தில் ட்ரம்ப் அரசு தன்னிச்சையாக செயல்பட்டு, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உருக்கு, அலுமியம், ஆகியவற்றின் மீது வரிவிதித்தது தான் என்கின்றார்கள். ட்ரம்பின் இந்த நடவடிக்கை ஜி – 7 அமைப்பு அந் நாடுகள் இடையில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அலுமினியம், இரும்புக்கு அமெரிக்கா அதிபர் ட்ரம்ப் தன்னிச்சையாக பெரியளவில் இறக்குமதி வரி விதித்த பிரச்சனை இந்த மாநாடு முழுவதும் பிரதிபலித்தது. தனது நட்பு நாடுகளையும் பாதிக்கும் வகையில் இந்த நடவடிக்கையை ட்ரம்ப் எடுத்ததற்கு ஜி – 7 கூட்டமைப்பில் உள்ள ஆறு நாடுகளும் எதிர்ப்பு தெரிவித்தன. இந்த முடிவை கைவிட வேண்டும் என்று வலியுறுத்தின.

“இரும்பு, அலுமினியத்துக்கு அமெரிக்கா விதிக்கும் அதிகளவான இறக்குமதி வரி கனடாவை அவமதிப்பது போன்றது. முதலாம் உலகப் போர் காலத்திலிருந்து பல முரண் பாடான சமயங்களில் அமெரிக்காவின் கூட்டணி நாடுகளுடன் கனடா தலைவர்கள் உறுதுணையாக நின்றுள்ளனர் என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ


ஜஸ்டின் ட்ரூடோ
கனடா பிரதமர்
2015ஆம் ஆண்டிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து தெரிவித்தார். மேலும், வரிகொள்கையை ட்ரம்ப் கைவிடவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. இதனை ட்ரம்ப், ஏற்க மறுத்துவிட்டார். அதுமட்டுமல்லாமல் மற்ற உறுப்பு நாடுகளை விமர்சிக்கும் வகையில் ட்ரம்ப் பேசினார். இதனால் ஜி – 7கூட்டமைப்பு நாடுகளுக்கிடையிலான வர்த்தக உறவை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்ற ட்ரம்பின் கோரிக்கை மாநாட்டில் எடுபடாமல் போனது. ஒருகட்டத்தில் ட்ரம்ப் தனித்து விடப்பட்டார்.

எனினும் ஜி – 7 மாநாட்டில் ஒருமனதாக கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அதில் உலக வர்த்தகம் இன்னும் நியாயமாக இருக்கும் வகையில், உலக வர்த்தக அமைப்பை கூடிய விரைவில் நவீனமாக்க நாம் உறுதி ஏற்கிறோம். வரித்தடைகள், வரியில்லா தடைகள், மானியங்கள் ஆகியவற்றை குறைக்க முயற்சிப்போம் என அதில் கூறப்பட்டிருந்தது. இதற்கு ஜி – 7 தலைவர்கள் ஒப்புதல் அளித்தனர். சிங்கப்பூர் மாநாடு காரணமாக ட்ரம்ப் இடைநடுவில் வெளியேறியமையால் அறிக்கை விமானத்தில் வைத்து தெரிவிக்கப்பட்டது. அதனை ட்ரம்ப் நிராகரித்ததுடன் அது பற்றி ட்விட் பக்கத்தில் காரசாரமான கருத்துக்களை பதிவு செய்திருந்தார்.

ட்விட் பக்கத்தில் ட்ரம்ப் பதிவு செய்த கருத்துக்களாக: ஜஸ்டின் அவ் அறிக்கையில் பொய்யான தகவல்களை அளித்துள்ளார். உண்மை என்னவென்றால் அமெரிக்கா விவசாயிகள், தொழிலாளர்கள், நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு கனடா தான் அதிக வரி விதிக்கிறது. பரஸ்பர பலன்கள் இல்லை என்றால் அது நல்ல வர்த்தகமாக இருக்காது, மாறாக முட்டாள் தனமான வர்த்தகம் என்றே அழைக்கப்படும். 800 பில்லியன் டாலர் வர்த்தக பற்றாக்குறை இது அமெரிக்க மக்களுக்கு நல்லதல்ல. எங்கள் விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் வரி செலுத்துவோர் அதிக விலை கொடுக்கும் போது மற்ற நாடுகள் மிகப்பெரிய வர்த்தக உபரி வருவாய் பெறுவதற்கு அமெரிக்கா ஜனாதிபதியாக நான் ஏன் அனுமதிக்க வேண்டும்? என்றும் கேள்வி எழுப்பி உள்ளார். இந்த கூட்டறிக்கையை அங்கீகரிக்க வேண்டாம் என அமெரிக்க பிரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதிகளுக்கு உத்தரவிட்டு உள்ளேன். ஐரோப்பிய யூனியன் அமெரிக்காவிடம் கடுமையாக நடந்து கொள்கிறது. அது அவர்களுக்கு தெரியும். இதை நான் அவர்களிடம் சொன்னால் என்னைப் பார்த்து சிரிக்கிறார்கள். நான் வெளியேறிய பிறகு கூட்டத்திலும், நிருபர்கள் சந்திப்பிலும் ஜஸ்டின் அடக்கமாக பேட்டி அளித்துள்ளார். அப்படி நடந்து கொண்டால் தான் அவரின் அடாவடி மற்றும் நேர்மையற்ற குணம் என்பது தெரியாது என ட்ரம்ப் தெரிவித்தார்.

இதற்கு பதில் அளித்த ஜஸ்டின் "கனடா நாட்டினர் அடக்க மானவர்கள், நியாயமானவர்கள், நாங்கள் அச்சுறுத்தலாக இருப்பதில்லை. அமெரிக்கர்கள் எங்களுக்கு விதிக்கும் நியாயமற்ற வரிக்கு நிகராக நாங்க ளும் அமெரிக்கா பொருட்களுக்கு வரிவிதித்து ஜீலை மாதம் முதலாம் திகதியிலிருந்து நடவடிக்கை எடுப்போம் என ட்ரம்பிடம் கூறினேன் என்றார்."

ட்ரம்பின் டுவிட்டர் பதிவுகள் தொடர்பாக ஜெர்மனி வெளியுறவுத் துறை அமைச்சர் ஹெய்கோமாஸ் கூறுகையில் "அளவுக்கு அதிகமாக வைத்திருந்த நம்பிக்கையை ஒற்றை டுவிட் மூலம், குறுகிய நேரத்தில், ட்ரம்ப் உடைத்து விட்டார்." என்றார். ஜெர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்க்க லும் ட்ரம்புக்கு கண்டம் தெரிவித்துள்ளார். அவர் கூறுகையில் "அமெரிக்கா நடத்தி வரும் வரிபோரை எதிர்கொள்ள தயாராக இருக்கிறோம். அமெரிக்காவின் ஏதேச்சதிகார போக்கிற்கு இனியும் ஜரோப்பிய யூனியன் அடங்கிபோகாது. ட்ரம்ப் இன் வர்த்தக நடவடிக் கைக்கு எதிராக கிளர்ந்தெழுவோம் என்றார்.

எதிரி நாட்டு தலைவர்களான ரஷ்சியா ஜனாதிபதி புடின், வடகொரியா ஜனாதிபதி கிம் ஆகியோருடன் நட்பை விரும்பும் அமெரிக்கா ஜனாதிபதி ட்ரம்ப் அமெரிக்காவின் கூட்டணி நாடுகளுடன் மோதல் போக்கை கடைப்பிடிப்பதற்கு ஜி – 7 மாநாடு இன்னொரு சம்பவம். ஜி – 7 நாடுகளுக்கும் ட்ரம்ப்க்கும் ஏற்பட்டுள்ள இந்த மோதலால், உலக வர்த்தக போர் ஒன்று உருவாகும் அபாயம் தோன்றியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜி – 7 நாடுகளுடன் ட்ரம்ப் நடத்தி வரும் வர்த்தக மோதல் தற்போது இந்தியா உள்ளிட்ட நாடுகளை நோக்கியும் திரும்பி இருக்கிறது. கனடாவில் இருந்து திரும்பு முன் செய்தியாளர்களை சந்தித்த ட்ரம்ப் அமெரிக்காவை பிற நாடுகள் கொள்ளையிடுவதாகவும் எனவே அந்த நாடுகளுடனான வர்த்தக உறவுகளை துண்டிக்கப் போவதாகவும் மிரட்டினார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் "அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு உலகின் மிகப்பெரிய பொருளாதார சக்திகளாக விளங்கும் நாடுகளும், இந்தியாவும் 100 சதவீத வரி விதிக்கின்றன. ஆனால் அமெரிக்கா அது போல் வரி எதையும் விதிக்கவில்லை. அந்த நாடுகள் அனைத்தும், அமெரிக்காவை உண்டியலாக நினைத்து அதில் இருக்கும் பணத்தை திருடுகின்றன. இதனால் தான் அந்த நாடுகளுடன் வரிவிதிப்பு தொடர்பாக அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இந்த போக்கை அந்தநாடுகள் உடனடியாக நிறுத்தவேண்டும். இல்லையெனில், அந்த நாடுகளுடனான வர்த்தகத்தை அமெரிக்கா நிறுத்திக் கொள்ளும் என்று ட்ரம்ப் எச்சரித்தார்.

உலக பொருளாதாரம் சார்ந்து அமெரிக்கா – ஐரோப்பிய நாடு களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடு எந்தவொரு நாட்டுக்கும் நன்மை அளிக்கும் அம்சமாக அமையப்போவதில்லை. அத்துடன் இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அதிகளவு முகம் கொடுப்பதும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளே ஆகும். ஈரானுடனான அணுவாயுத அரசியல் காரணமான பொருளாதார தடை எவ்வாறு பெற்றோல் விலையேற்றத்திற்கு காரண மாக அமையப்பெற்றதோ அதே போன்று ஜி – 7 மாநாட்டின் முரண்பாடும் பல விளைவுகளை உலக பொருளாதாரத்தில் ஏற்படுத்துவது தவிர்க்க முடியாதது ஆகும். அத்துடன் அமெரிக்கா ஜனாதிபதி ட்ரம்ப் ஐரோப்பிய நாடுகளுடன் முரண்பட்டுக் கொண்டமை எதிர் காலத்தில் அமெரிக்கா முன்னெடுக்கும் அரசியல், இராணுவ நடவடிக்கைகளில் ஐரோப்பிய நாடுகளின் பங்களிப்பையும் சவாலுக்குட்படுத்தலாம். ஜி – 7 மாநாடு பற்றிய ட்ரம்ப் இன் ட்விட் பதிவுகள் உலக அரங்கில் அமெரிக்கா தலைமையின் செல்வாக்கை குறைக்கும் ஒரு செயற்பாடு எனவும் விமர்சிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வர்த்தக போரை ஜனாதிபதி ட்ரம்ப் தீவிரபடுத்துகிறாரா

சமகால சர்வதேச அரசியலில் பொருளாதார ரீதியான போருக்கான சூழலினை அமெரிக்கா ஏற்படுத்தி வருகிறது. வரலாற்று முக்கியத்துவம் மிக்க அரச தலைவர்களின் சந்திப்பு வல்லரசுகளின் ஒன்றிய மாநாடுகள், நாடுகள் மீதான வரிவிதிப்பு போன்ற உத்திகள் மூலம் பொருளாதார ரீதியாக அமெரிக்கா எதிரி நாடுகள் மீதும் மட்டுமல்லாது தனது நட்பு கூட்டணி நாடுகள் மீதும் வர்த்தக போரை நிகழ்த்தி வருகிறது. அமெரிக்கா நிகழ்த்தி வரும் வர்த்தகப் போர் பற்றியும் அது உலக அளவில் ஏற்படுத்தக் கூடிய தாக்கங்கள் பற்றிய அறிதல் அவசியமாகும்.

கனடா நாட்டில் கியூபெக் மாகாணத்தில் உள்ள லமால்பே நகரில் ஜீன் மாதத்தின் 10,11 திகதிகளில் ஜி – 7 உச்சி மாநாடு நடந்தது. இம்மாநாட்டில் ட்ரம்ப் ஏனைய நாடுகளுடன் முரண்பட்டமை வர்த்தகப் போருக்கான சூழலை ஏற்படுத்தியுள்ளது. அம்மாநாட்டில் அமெரிக்கா ஜனாதிபதி ட்ரம்ப் அதிக விடயங்களில் முரண்பட்டுக் கொண்டதுடன் இறுதியாக மாநாட்டின் கூட்டறிக்கையையும் நிராகரித்தார். இந்த மாநாடு தொடங்கும் முன்பு, அமெரிக்கா அதிபர் ட்ரம்ப் ரஷ்சியாவும் பங்கேற்க வேண்டும் என்ற கருத்தை தெரிவித்திருந்தார்.

ரஷ்சியா ஜனாதிபதி புட்டினின் விருப்பத்தை முன்மொழிந்த ட்ரம்புக்கு ஜி – 7 கூட்டமைப்பு தலைவர்கள், உக்ரைன் விவகாரத்தில் முன்னேற்றம் இல்லாதவரை, ரஷ்சியா இந்த மாநாட்டில் பங்கேற்கக் கூடாது என்ற கருத்தினை ஒருமனதாக ஒப்புக் கொண்டனர் என்று ஜெர்மன் சான்சிலர் ஏங்கெலாமெர்கல் பதில் அளித்தார். அத்துடன் ட்ரம்புக்கு எதிரான கருத்துக்களை நேரடியாக பிறநாட்டின் தலைவர்கள் முன்வைத்தனர். இதற்கு காரணம், சமீபத்தில் ட்ரம்ப் அரசு தன்னிச்சையாக செயல்பட்டு, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உருக்கு, அலுமியம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றின் மீது வரி விதித்ததும் ஒரு காரணம் என்கின்றார்கள். ட்ரம்பின் இந்த நடவடிக்கை ஜி – 7 அமைப்பு நாடுகள் இடையில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அலுமினியம், இரும்புக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தன்னிச்சையாக பெரியளவில் இறக்குமதி வரிவிதித்த பிரச்சனை இந்த மாநாடு முழுவதும் பிரதிபலித்தது. தனது நட்பு நாடுகளையும் பாதிக்கும் வகையில் இந்த நடவடிக்கையை ட்ரம்ப் எடுத்ததற்கு ஜி – 7 கூட்டமைப்பில் உள்ள ஆறு நாடுகளும் எதிர்ப்பு தெரிவித்தன. இந்த முடிவை கைவிடவேண்டும் என்று வலியுறுத்தின.

“இரும்பு, அலுமினியத்துக்கு அமெரிக்கா விதிக்கும் அதிகளவான இறக்குமதி வரி கனடாவை அவமதிப்பது போன்றது. முதலாம் உலகப் போர் காலத்திலிருந்து பல முரண்பாடான சமயங்களில் அமெரிக்காவின் கூட்டணி நாடுகளுடன் கனடா தலைவர்கள் உறுதுணையாக நின்றுள்ளனர் என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கருத்து தெரிவித்தார். மேலும், வரி கொள்கையை ட்ரம்ப் கைவிட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. இதனை ட்ரம்ப், ஏற்க மறுத்து விட்டார். அதுமட்டுமல்லாமல் மற்ற உறுப்பு நாடுகளை விமர்சிக்கும் வகையில் ட்ரம்ப் பேசினார். இதனால் ஜி – 7 கூட்டமைப்பு நாடுகளுக்கிடையிலான வர்த்தக உறவை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்ற ட்ரம்பின் கோரிக்கை மாநாட்டில் எடுபடாமல் போனது. ஒரு கட்டத்தில் ட்ரம்ப் தனித்து விடப்பட்டார்.

எனினும் ஜி – 7 மாநாட்டில் ஒரு மனதாக கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அதில் உலக வர்த்தகம் இன்னும் நியாயமாக இருக்கும் வகையில், உலக வர்த்தக அமைப்பை கூடிய விரைவில் நவீனமாக்க நாம் உறுதி ஏற்கிறோம். வரித்தடைகள், வரியில்லாதடைகள், மானியங்கள் ஆகியவற்றை குறைக்க முயற்சிப்போம் என அதில் கூறப்பட்டிருந்தது. இதற்கு ஜி – 7 தலைவர்கள் ஒப்புதல் அளித்தனர். சிங்கப்பூர் மாநாடு காரணமாக ட்ரம்ப் இடை நடுவில் வெளியேறியமையால் அறிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானத்தில் வைத்து தெரிவிக்கப்பட்டது. அதனை ட்ரம்ப் நிராகரித்த துடன் அது பற்றி ட்விட் பக்கத்தில் காரசாரமான கருத்துக்களை பதிவு செய்திருந்தார்.

ட்விட் பக்கத்தில் ட்ரம்ப் பதிவு செய்த கருத்துக்களாக: ஜஸ்டின் அவ் அறிக்கையில் பொய்யான தகவல்களை அளித்துள்ளார். உண்மை என்ன வென்றால் அமெரிக்கா விவசாயிகள், தொழிலாளர்கள், நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு கனடா தான் அதிக வரிவிதிக்கிறது. பரஸ்பர பலன்கள் இல்லை என்றால் அது நல்ல வர்த்தகமாக இருக்காது, மாறாக முட்டாள் தனமான வர்த்தகம் என்றே அழைக்கப்படும். 800 பில்லியன் டாலர் வர்த்தக பற்றாக்குறையை ஏற்படுத்தும் .இது அமெரிக்க மக்களை பாதிக்கும். எங்கள் விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் வரி செலுத்துவோர் அதிக விலை கொடுக்கும் போது மற்ற நாடுகள் மிகப்பெரிய வர்த்தக உபரி வருவாய் பெறுவதற்கு அமெரிக்க ஜனாதிபதியாக நான் ஏன் அனுமதிக்க வேண்டும்? என்றும் கேள்வி எழுப்பி உள்ளார். இந்த கூட்டறிக்கையை அங்கீகரிக்க வேண்டாம் என அமெரிக்க பிரதிநிதிகளுக்கு உத்தரவிட்டு உள்ளேன். ஐரோப்பிய யூனியன் அமெரிக்காவிடம் கடுமையாக நடந்து கொள்கிறது. அது அவர்களுக்கு தெரியும். இதை நான் அவர்களிடம் சொன்னால் என்னைப் பாரத்து சிரிக்கிறார்கள். நான் வெளியேறிய பிறகு கூட்டத்திலும், நிருபர்கள் சந்திப்பிலும் ஜஸ்டின் அடக்கமாக பேட்டி அளித்துள்ளார். அப்படி நடந்து கொண்டால் தான் அவரின் அடாவடி மற்றும் நேர்மையற்ற குணம் என்பது தெரியாது என ட்ரம்ப் தெரிவித்தார்.

இதற்கு பதில் அளித்த ஜஸ்டின் “கனடா நாட்டினர் அடக்க மானவர்கள், நியாயமானவர்கள், நாங்கள் அச்சுறுத்தலாக இருப்பதில்லை. அமெரிக்கர்கள் எங்களுக்கு விதிக்கும் நியாயமற்றவரிக்கு நிகராக நாங்களும் அமெரிக்க பொருட்களுக்கு வரிவிதித்து ஜீலை மாதம் முதலாம் திகதியிலிருந்து நடவடிக்கை எடுப்போம் என ட்ரம்பிடம் கூறினேன் என்றார்.“



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெர்மன் பிரதமர் ஏஞ்சலாமெர்க்கலும் ட்ரம்புக்கு கண்டம் தெரிவித்துள்ளார். அவர் கூறுகையில் “அமெரிக்கா நடத்தி வரும் வரி போரை எதிர்கொள்ள தயாராக இருக்கிறோம். அமெரிக்காவின் ஏதேச்சதிகார போக்கிற்கு இனியும் ஐரோப்பிய யூனியன் அடங்கி போகாது. ட்ரம்ப் இன் வர்த்தக நடவடிக்கைக்கு எதிராக கிளர்ந்தெழு வோம். என்றார்.

ரஷ்சியா ஜனாதிபதி புடின், வடகொரியா ஜனாதிபதி கிம் ஆகியோருடன் நட்பை விரும்பும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அமெரிக்காவின் கூட்டணி நாடுகளுடன் மோதல் போக்கை கடைப் பிடிப்பதற்கு ஜி – 7 மாநாடு ஓர் எடுத்துக்காட்டாகும். ஜி – 7 நாடுகளுக்கும் ட்ரம்ப்க்கும் ஏற்பட்டுள்ள இந்த மோதலால், உலக வர்த்தக போர் ஒன்று தீவிர நிலைக்குச் செல்லும் அபாயநிலை தோன்றியுள்ளது.

அடுத்து உலக வர்த்தகப் போருக்கான அடித்தளம் சீனா – அமெரிக்கா நாடுகளுக்கு இடையே காணப்படும் முரண்பாடு மூலம் தெளிவுபடுத்த முடியும். அமெரிக்காவின் அறிவுசார் சொத்துக்களை சீனா திருடுவதுடன், தொழில் நுட்பத்தையும் கடத்திக் கொண்டு போகிறது என்பது சீனா மீது அமெரிக்கா முன்வைக்கிற குற்றச்சாட்டாகும். இதன் காரணமாக சீனா,அமெரிக்காவுக்கு வர்த்தகப் பற்றாக்குறையை உருவாக்கி உள்ளதாகவும் அமெரிக்கா ஜனாதிபதி ட்ரம்ப் குற்றம் சாட்டி வருகிறார். அதாவது அமெரிக்கா சீனாவுக்கு சுமார் 13,000 கோடி டாலர் மதிப்புக்கு பொருட்களை ஏற்றுமதி செய்கிறது. ஆனால் சீனாவில் இருந்து அமெரிக்காவுக்கு 50,600 கோடி டாலர் மதிப்பிலான பொருட்கள் ஏற்றுமதியாகின்றன. அமெரிக்கா – சீனா இடையே சுமார் 37,000 கோடி டாலருக்கு வர்த்தப் பற்றாக்குறை நிலவுகிறது.

சீனாவில் இருந்து ஜவுளி, இயந்திரங்கள், எலக்ட்ரானிக் பொருட்கள் அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகின்றன. அமெரிக்காவிலிருந்து மாட்டிறைச்சி, ஸ்டீல் பைப்,பழங்கள் போன்றவற்றை மட்டுமே சீனா இறக்குமதி செய்கிறது. இந்த வேறுபாட்டை 10,000 கோடி டாலராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைக்க வேண்டும் என்பது ட்ரம்ப் விருப்பம். அமெரிக்காவில் சீனப் பொருட்கள் குவிவதால், அமெரிக்க வர்த்தகம் கடும் பாதிப்பை எதிர் கொண்டுள்ளது. இதன் காரணமாக சீனா மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் ஆகிறது என ட்ரம்ப் கருதுகிறார்.

அந்த அடிப்படையில் கடந்த வாரம் சீனாவிலிருந்து இறக்குமதி ஆகிற பொருட்களுக்கு அமெரிக்கா 50 பில்லியன் டாலர் (சுமார் 3 லட்சத்து 40 ஆயிரம் கோடி) வரிவிதிப்பதாக அறிவித்தது. உடனடியாக சீனாவும், அமெரிக்காவிருந்து இறக்குமதி செய்யப்படுகிற பொருட்களுக்கு அதே 50 பில்லியன் டாலர் அளவுக்கு பதில் அளித்துள்ளது. இது ட்ரம்புக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. இந்தநிலையில் கடந்த 18ம் திகதி ட்ரம்ப் சீனாவை மிரட்டும் விதமாக ஒரு அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது:

“சீனா மீண்டும் வரிகளை அதிகரித்தால், அந்த நாட்டின் மீது மேலும் 200 பில்லியன் டாலர் அளவுக்கு (சுமார் ரூ.13 லட்சத்து 60 ஆயிரம் கோடி) வரி விதிப்போம். இதற்காக சீனாவில் இருந்து இறக்குமதி ஆகிற 10 சதவீத வரி விதிக்கத்தக்க பொருட்களை அடையாளம் கண்டறியுமாறு அமெரிக்கா வர்த்தக பிரதிநிதி ராபர்ட் லைசத்திசருக்கு உத்தரவு போட்டுள்ளேன். சீனா தனது நடைமுறைகளை மாற்றிக்கொள்ள மறுத்தால், சட்ட நடைமுறைகள் முடிந்த பின்னர் அந்த நாட்டின் மீதான 200 பில்லியன் டாலர் வரிவிதிப்பு, அமுலுக்கு வரும். அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையேயான வர்த்தக உறவு மிக மிக சமநிலையில் இருக்க வேண்டும். ஆனால் துரதிஷ்டவசமாக அமெரிக்கா பொருட்கள் மீது 50 பில்லியன் டாலர் அளவுக்கு வரியை சீனா நிர்ணயித்து உள்ளது.

அமெரிக்கா அறிவு சார் சொத்துக்களை, தொழில் நுட்பத்தை கையகப்படுத்துகிற நேர்மையற்ற வர்த்தக நடைமுறைகளை மாற்றிக் கொள்ளும் எண்ணம் சீனாவுக்கு இல்லை என்பது வெளிப்படையாக தெரிகிறது. தங்கள் நடைமுறை மாற்றிக்கொள்வதைவிட, எந்ததவறுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாத அமெரிக்க கம்பெனிகளை, ஊழியர்களை, விவசாயிகளை சீனா மிரட்டுகிறது. சீனாவின் சமீபத்திய நடவடிக்கை அமெரிக்காவை நிரந்தமாகவே நியாயமற்ற முறையில் வைத்திருப்பதற்கான உறுதியை தெளிவாக காட்டுகிறது. அமெரிக்காவுக்கு 376 பில்லியன் டாலர் (சுமார் ரூ.25 லட்சத்து 56 ஆயிரத்து 800 கோடி) வர்த்தக சமனற்ற நிலையை ஏற்படுத்துவதாகவுள்ளது.

சீனா தனது நடைமுறையை மாற்றிக் கொள்வதற்கும், அமெரிக்கா பொருட்களுக்கு அதன் சந்தைகளை திறக்கவும், சமமான வர்த்தக உறவை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கும் மேலும் நடவடிக்கை அவசியம் ஆகிறது." இவ்வாறு ட்ரம்ப் கூறியிருந்தார்.

ட்ரம்பின் இந்த அச்சுறுத்தல் "மிரட்டி பணிய வைக்கும் முயற்சி என சீனா கூறியுள்ளது. அத்துடன் ட்ரம்பின் அறிவிப்புக்கு பதிலடி கொடுக்கிற வகையில், சீன வர்த்தக அமைச்சகம் ஒரு அறிக்கை வெளியிட்டு உள்ளது. அதில் "பல்வேறு பேச்சுவார்த்தைகளின் போது இரு தரப்பிலும் ஏற்படுத்தப் பட்ட கருத்து ஒற்றுமையில் இருந்து விலகிச் செல்கின்ற வகையில், அமெரிக்கா மேலும் அழுத்தம் தருகிறது. மிரட்டி பணிய வைக்கிற யுத்தி யையும் பின்பற்றுகிறது. இது சர்வதேச சமூகத்துக்கு ஏமாற்றத்தை அளித்து உள்ளது. அமெரிக்கா இழப்பை சந்தித்தால் அதை பட்டியலிட்டும். சீனாவுக்கு பதில் நடவடிக்கை எடுப்பதை தவிர வேறு வழியில்லை. எனவே அதற்கு நாங்கள் தயராக இருக்கிறோம்." என அவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ட்ரம்பின் இவ்வரிவிதிப்பு நடவடிக்கைகள் அமெரிக்காவின் தேசிய பொருளாதாரத்தை காப்பாற்றும் நடவடிக்கைகளாக காணப்படுகின்றன என பொருளாதார வல்லுனர்களால் கூறப்படுகின்றது. ஆனால் அமெரிக்கா தேசிய அரசு என்பதை விட அது ஒரு வல்லரசு. வல்லரசு என்ற ரீதியில் அமெரிக்காவினால் மேற்கொள்ளப்படும் வரிவிதிப்பு வர்த்தக போர் சர்வதேச அரசியலில் அதன் அதிகாரம் சார்ந்து அதிக கேள்விகளை எழுப்புகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு

## ஹோர்மஸ் நீரிணை (Straits of Hormz)

ஹோர்மஸ் நீரிணை (Straits of Hormz) தென்கிழக்கில் ஒமான் குடாவையும், தென்மேற்கில் பாரசீகக் குடாவையும் கொண்டு அமைந்துள்ள ஒரு குறுகலான கடற்பரப்பாகும். இதன் வடக்கில் ஈரானும், தெற்கில் ஐக்கிய அரபு அமீரகமும் ஒமானின் ஒரு பகுதியான முசாந்தமும் அமைந்துள்ளன.

இந்நீரிணையின் மிக ஒடுங்கிய பகுதி 21 மைல்கள் அகலம் கொண்டது. இதிலே, ஒன்றிலிருந்து ஒன்று 2 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள ஒவ்வொன்றும் ஒரு மைல் அகலம் கொண்ட இரண்டு கால்வாய்கள் கப்பல் போக்குவரத்திற்கு பயன்படுகின்றன. பாரசீக குடாவைச் சுற்றியுள்ள பெட்ரோலிய உற்பத்தி நாடுகள் திறந்த கடற்பகுதியை அடைவதற்கான ஒரே வழி இதுவே. உலகில் பயன்படுத்தப்படும் எண்ணெயின் 20% இந்நீரிணையூடாகவே கொண்டு செல்லப்படுகின்றது. இதனால் வளைகுடா நாடுகளைப் பொறுத்தவரை இந்நீரிணை, இராணுவ முக்கியத்துவம் கொண்ட ஒன்றாகும்.

2012 மற்றும் 2018 ஆண்டுகளில் ஈரான் அணு உலைக்கு எதிராக அந்நாடு மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளதை அடுத்து இந்த வழியே செல்லும் எண்ணெய் கப்பல்களின் போக்குவரத்துக்களை தடுத்து நிறுத்துவோம் என்று ஈரான் அறிவித்திருந்தது.

ஈரான் எண்ணெய்க்கு அமெரிக்கா தடை விதித்திருப்பதற்கு எதிராக அரேபிய தீபகற்பத்தின் கச்சா எண்ணெய்களை உலகிற்கு எடுத்து செல்லும் முக்கிய வழியான இந்நீரிணையை மூடுவதற்கு ஈரான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 100 பேர் கையெழுத்துயிட்டு இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டார்ட்டஸ் துறைமுகம் (Tartus)

சிரியாவினுடைய இரண்டாவது மிகப்பெரிய துறைமுகம் ஆகும். (Latakiaவே சிரியாவின் மிகப்பெரிய துறைமுகம்). இதன் உயரம் 22மீ (72 அடி) ஆகும். மத்தியதரைக் கடலின் கிழக்கிந்திய கடற்கரையோரத்தில் சிரியாவின் கிழக்கு பகுதி கரையோர மலைத்தொடரால் சூழப்பட்ட துறைமுகமாக காணப்படுகின்றது.

டார்ட்டஸ் சிரியாவில் ஒரு முக்கியமான வர்த்தக மையமாக விளங்குகிறது. மத்திய தரைக்கடல் நாடுகளின் இரண்டு பிரதான துறை முகங்களில் ஒன்றாக டார்ட்டஸ் காணப்படுகின்றது. டார்ட்டஸின் மொத்த பரப்பு 162980 ஆகும்.

தற்போது டார்ட்டஸ் துறைமுகம் நான்கு நடுத்தர அளவிலான கப்பல்களை தரித்து நிறுத்தக்கூடிய வசதியினை கொண்டுள்ளது. 2017 ஜனவரி 18ம் திகதி ரஷ்சியாவும் சிரியாவும் ஒரு ஒப்பந்தத்தில் கையொப்ப மிட்டன. இதன் விளைவாக ரஷ்சியாவை 49 ஆண்டுகளுக்கு டார்ட்டஸ் இல் கடற்படை வசதி விரிவுபடுத்தவும் பயன்படுத்தவும் அனுமதிக்கப் பட்டுள்ளது. மேலும் இவ் ஒப்பந்தத்தின் மூலம் இத்துறைமுகத்தின் ரஷ்சியாவின் 11 வகையான ஆயுத கப்பல்கள், சரக்கு கப்பல்கள் மற்றும் அணுசக்தி கப்பல்கள் போன்றன தரித்து நிற்பதற்கு அனுமதிக்கப்பட் டுள்ளது. இவ் ஒப்பந்தம் ஆனது சிரியாவின் அதிகார எல்லைக்குள் ரஷ்சியாவிற்கான சலுகைகளையும் விதிமுறைகளை உறுதிப்படுத்துகிறது.

## வளைகுடா நாடுகள்

அராபிய பாரசீக வளைகுடா நாடுகள் (Arab States Of the Persian Gulf அல்லது சுருக்கமாக வளைகுடா நாடுகள்) (Gulf States) என்பவை நடுவன் ஆசியாவில் பாரசீக வளைகுடாவினை ஒட்டி அமைந்துள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணெய் வளமிக்க முடியாட்சிகளான சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் கத்தார், பக்ரைன் மற்றும் ஓமன் ஆகிய நாடுகளைக் குறிக்கும். ஈராக் மற்றும் ஏமன் நாடுகளும் பெர்சிய வளைகுடாவினை ஒட்டியிருந் தாலும் அரபு நாடுகளாக இருப்பினும் அவை வளைகுடா நாடுகளாகக் கருதப்படுவதில்லை.

பாரசீக வளைகுடாவின் அனைத்து அரபு நாடுகளும் எண்ணெய் மற்றும் எரிவாயு மூலம் மிகுந்த வருமானம் பெறுகின்றன. சவுதி அரேபி யாவைத் தவிர ஏனைய நாடுகள் சிறிய மக்கள் தொகையைக் கொண் டுள்ளன. இதனால் இந்நாட்டு மக்களின் தனிநபர் வருமானம் அண்டை நாடுகளின் வருமானத்தை விட கூடுதலாக உள்ளது. தங்களின் பணியாள் தேவைகளுக்காக தெற்காசியா, தென்கிழக்கு ஆசியா, பகுதிகளிலிருந்து குடியுரிமையற்ற பொருளாதார குடியேறிகளை அமர்த்துகின்றனர்.

## பாரசீக வளைகுடா அல்லது அரேபிய வளைகுடா

பாரசீக வளைகுடா அல்லது அரேபிய வளைகுடா தென்மேற்கு ஆசியப் பகுதியில் இந்தியப் பெருங்கடலின் நீட்சியாக ஈரானுக்கும் அரேபியக் குடாநாட்டுக்கும் இடையில் அமைந்துள்ள ஒரு வளைகுடா ஆகும். இது ஓமான் வளைகுடாவின் தொடர்ச்சியாக ஈரானுக்கும் அராபியத் தீவக்குறைக்கும் இடையே அமைந்துள்ளது.

ஏறத்தாழ 233000 சதுரகிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்ட இந்நீர்ப்பரப்பு, இதன் கிழக்குப் பகுதயில் ஹோர்மஸ் நீரிணை (Straits of Hormz) வழியாக ஓமான் வளைகுடாவுடன் தொடுக்கப்பட்டுள்ளது. இதன் மேற்குப் பகுதியில் டைகிரிஸ், இயூபிரட்டிஸ் ஆகிய ஆறுகளின் கழிமுகம் உள்ளது. முக்கியமாக ஈரானையும் சவூதி அரேபியாவையும் பிரிக்கும் இதன் நீளம் 989 கிலோமீட்டர். மிகக்குறுகிய பகுதியான ஹோர்மஸ் நீரிணைப் பகுதியில் இதன் அகலம் 56 கிலோ மீட்டர் ஆக உள்ளது. பொதுவாக இவ்வளைகுடா ஆழம் குறைந்தது. அதிகூடிய அளவாக 50 மீட்டர் ஆழத்தைக் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரசீக வளைகுடாவின் இயற்கைச்சூழல் மிகவும் வளம் பொருந்தியது. சிறந்த மீன்பிடிப் பகுதிகள், விரிந்து பரந்த பவளப்பாறைகள், பெருமளவு முத்துச்சிப்பிகள் என்பவற்றைக் கொண்டு விளங்கும். இது அளவுக்கதிக மான தொழில்மயமாக்கம் மற்றும் அண்மைக்காலத்தில் இப்பகுதியில் நிகழ்ந்த போர்களினால் ஏற்பட்ட எண்ணைக் கசிவுகளினாலும் பெரும் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளது.

ஈரான் – ஈராக் போர், பாரசீக வளைகுடாப் போர் போன்ற போர்க் காலங்களில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக இக்குடா கடல் இருந்தது.

## ஓமான் குடா

ஓமான் குடா அரபுக் கடலையும் ஹோர்மஸ் நீரிணையையும் இணைக்கும் ஒரு நீரிணை (உண்மையான நீரிணை அன்று) ஆகும். ஓமான் குடா ஹோர்மஸ் நீரிணையை இணைத்த பிற பாரசீக குடாவிற்கு இட்டுச்செல்கிறது. ஓமான் குடா, பாரசீகக் குடாவின் ஒரு பகுதியாகவே கருதப்படுகிறது. அரபுக்கடலின் பகுதியாகக் கருதப்படுவதில்லை. இக்குடாவின் வடபுறம் பாகிஸ்தானும், ஈரானும் தென்பகுதியில் ஓமானும் மேற்குப்புறமாக ஐக்கிய அரபு அமீரகமும் அமைந்துள்ளன.

## ஈரானின் அணுசக்தி திட்டம் (Nuclear program of Iran)

ஈரானின் அணுசக்தி திட்டம் என்பது பல ஆராய்ச்சி தளங்கள் இரண்டு யுரேனியம் சுரங்கள், ஒரு ஆராய்ச்சி அணு உலை மற்றும் மூன்று அறியப் பட்ட யுரேனிய செறிவூட்டல் நிலையங்கள் உள்ளிட்ட யுரேனியம் செயலாக்க வசதிகள் ஆகியவற்றை கொண்டது ஆகும். 1970 ஆம் ஆண்டில் ஈரான் அணு ஆயுத பரவல் தடை உடன்படிக்கையை ஒப்புக்கொண்டது. சர்வதேச அணுசக்தி அமைப்பின் சரிபார்ப்புக்கு உட்பட்டு அதன் அணுசக்தித் திட்டத்தை உருவாக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த திட்டம் அமெரிக்காவின் உதவியுடன் 1950களில் சமாதான திட்டத்திற்கான அணுக்களின் பகுதியாக தொடங்கப்பட்டது. ஈரான் அணுசக்தி திட்டத்தில் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய ஐரோப்பிய அரசாங்கங்களின் பங்கு ஈரானின் ஷாவை கவிழ்த்த 1979 ஈரானிய புரட்சி வரை தொடர்ந்தது. 1979 புரட்சிக்குப் பின் ஈரானுடனான சர்வதேச அணுசக்தி ஒத்துழைப்பு மிகக் குறைக்கப்பட்டது. 1981 இல் ஈரானிய அதிகாரிகள் நாட்டின் அணுசக்தி வளர்ச்சி தொடர வேண்டும் என்று முடிவு செய்தனர். 1980களின் பிற்பகுதியிலும் 1990களின் முற்பகுதியிலும் அர்ஜென்டினாவிலும் பேச்சுவார்த்தைகள் பிரான்சுடன் நடந்தது, மேலும் உடன்பாடுகள் எட்டப்பட்டன. 1990களில் ரஷ்சியா ஈரானுடனான கூட்டு ஆராய்ச்சி அமைப்பு ஒன்றை உருவாக்கியது. ஈரான் ரஷ்யா அணு வல்லுநர்கள் மற்றும் தொழில்நுட்ப தகவலுடன் ஈரானுக்கு அளித்தது.

2000களில், ஈரானின் இரகசிய யுரேனியம் செறிவூட்டல் திட்டத்தின் வெளிப்பாடானது சமாதானமற்ற பயன்பாடுகளுக்கு இது நோக்கமாக இருக்கலாம் என்ற கவலைகளை எழுப்பியது. ஈரானிய அதிருப்தி குழு ஈரானினால் மேற்கொள்ளப்பட்ட வரையறுக்கப்படாத அணுசக்தி நடவடிக்கைகளை அம்பலப்படுத்திய பின்னர் 2003 ஆம் ஆண்டில் IAEA விசாரணை நடத்தப்பட்டது. 2006இல் ஈரானின் NPT கடமைகளுடன் இணங்காததன் காரணமாக, ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் ஈரான் அதன் செறிவூட்டல் திட்டங்களை நிறுத்தி வைக்குமாறு கோரியது. 2007 ஆம் ஆண்டில், 2003 ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்தில் ஈரான் ஒரு தீவிர அணு ஆயுதத் திட்டத்தை செயல்படுத்திவிட்டதாக ஐக்கிய நாடுகளின் தேசிய புலனாய்வு மதிப்பீடு (NIE) அறிவித்தது. நவம்பர் 2011 இல் ஐ.ஏ.ஏ.ஏ 2003 வரை ஒரு அணுகுண்டு தயாரிப்பதற்காக ஈரான் சோதனைகளை நடத்தி வருவதாக நம்பகமான ஆதாரங்களை வெளியிட்டது. அந்த ஆய்வு பின்னர் அந்த நேரத்தில் ஒரு சிறிய அளவிலான ஆய்வு தொடர்ந்தது.

ஈரானின் முதல் அணுசக்தி ஆலை, புஷெர் 1 அணுஉலை, ரஷ்சியா அரசாங்க நிறுவனமான ரோசாம்மின் பிரதான உதவியுடன் நிறைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டு 2011 செப்டம்பர் 12ஆம் திகதி அதிகாரப்பூர்வமாக திறக்கப் பட்டது. 2012ஆம் ஆண்டின் இறுதியில் புஷெர் அணுசக்தி நிலையம் முழு திறனை அடைந்துவிடும் என்று ரஷ்சியா பொறியியல் ஒப்பந்தம் ஆட்டம் நெர்கோபிராம் தெரிவித்தது.

## எண்ணெய் போர்

எண்ணெய் யுத்தம் என்பது பெட்ரோலியம் வளங்கள், அல்லது அவர்களின் போக்குவரத்து, நுகர்வு, அல்லது ஒழுங்குமுறை பற்றிய மோதலை விவரிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. இது எண்ணெய் இருப்பு களைக் கொண்டிருக்கும் ஒரு பிராந்தியத்தில் எந்த மோதலுக்கும் பொது வாக குறிப்பிடலாம்.

## சிரியா மனித உரிமைக் கண்காணிப்பு
(Syrian Observatory for Human Rights)

சிரியா மனித உரிமைக் கண்காணிப்பு (Syrian Observatory for Human Rights) என்பது ஐக்கிய இராச்சியத்தைத் தலைமையமாகக் கொண்டு இயங்கி வருகின்ற ஒரு செய்தி நிறுவனம் ஆகும். சிரியாவில் மனித உரிமைகள் மீறப்படுவதைக் கண்காணித்து வெளி உலகுக்கு அவ்வப் போது தெரிவிக்க ரமிஅப்துல் ரகுமான் என்பவரால் இந்தச் செய்தி நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது.

2011இல் சிரியாவில் நிகழ்ந்த உள்நாட்டுப்போரின் போது இந்த அமைப்பு உருவானது. மேற்கத்திய ஊடகங்களான வாய்ஸ் ஆப் அமெரிக்கா, ராய்ட்டர்ஸ், பிபிசி, சிஎன்என் போன்ற நிறுவனங்கள் சிரியா மனித உரிமைக் கண்காணிப்பின் செய்திகளை அடிக்கடி மேற்கோள் காட்டுகிற வழக்கம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எஸ் - 300 ஏவுகணை

1979ஆம் ஆண்டு எஸ் – 300 ரக ஏவுகணை சோவியத் யூனியன் முதல் முதலில் தயாரித்திருந்தது. பின்னர் ரஷ்சியா ஆயுத படையில் அது சேர்த்துக் கொள்ளப்பட்டது. இது விமானத்தை இலக்கு வைத்து தயாரிக்கப் பட்ட விமான எதிர்ப்பு ஏவுகணை ஆகும். பெருமளவுக்கு தொடர்பாடல் அலகுகளை கணீப்பீடு செய்து துல்லியமாக தாக்கும் விதத்தில் உருவாக் கப்பட்டது. இதனை ரஷ்சியா 1997 ஆம் ஆண்டு எஸ் – 300 PMU – 2 என்னும் விரிவாக்கத்தை செய்துகொண்டதோடு அமெரிக்க ஏவுகணை பாதுகாப்புத் திட்டத்துக்கு நிகரானது என்றும் குறிப்பிடப்படுகிறது. நேட்டோ இதனை SA/20 எனவும் அழைக்கிறது. 2017 ஆம் ஆண்டு எஸ் – 300 ரக ஏவுகணை உற்பத்தியை ரஷ்சியா நிறுத்தி அதன் வழங்கலின் அளவை அதிகரித்து எஸ் – 400 ரக எதிர்ப்பு ஏவுகணையை உற்பத்தி செய்யப் போவதாக அறிவித்தது.

ரஷ்சியா தயாரிப்பான எஸ் – 300 PMU – 2 ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு செயல்படுகின்ற தன்மையானது வலிமை பொருந்தியதாக அமைகிறது என்பதனை இதன் பாதுகாப்பு உத்தி விளக்குகிறது. இதனை விளங்கிக் கொள்ள இதன் இயங்குதிறனை மிகச் சுருக்கமாக அவதானிப்போம்.

இது விமானங்களை ரேடர் மூலம் கண்காணித்து பதில் தாக்குதலை மேற்கொள்கிறது. ஏறக்குறைய 300 கிலோமீற்றர் வரம்புக்குள் அல்லது எல்லைக்குள் பிரவேசிக்கும் விமானங்களை கண்காணிப்பு ரேடர் மூலம் அவதானித்து பதில் தாக்குதலை மேற்கொள்கிறது. அதனோடு அத்தகைய விமானங்கள் அதன் இயந்திரத்தின் வலிமைகள் அதன் தகவல் தொடர்பு இலக்குகள் என்பவற்றை மதிப்பீட்டு ஒரு இலக்கை அடையாளம் கண்டு கட்டளை வாகனத்திலிருந்து ஏவுகணை பிறப்பாக்கி பகுதிக்கு உத்தரவிடுகிறது. இதிலிருந்து வெளிக்கிளம்பும் ஏவுகணைகள் வான் மேற்பரப்பில் இரண்டு ஏவுகணை இலக்குகளை நோக்கி நகர்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறக்குறைய ஆறு ஏவுகணைகளை ஒரே நேரத்தில் வெளியேற்றும் திறன் கொண்டதாக உள்ளது. ஒரேநேரத்தில் 12 ஏவுகணைகளும் ராடர் மூலம் வழிகாட்டக்கூடியதாகவுள்ளது. இத்தகைய வலிமை பொருந்திய 300 ரவுகணை ஒவ்வொரு வாகனங்களிலிருந்தும் அதன் கொள்ளளவு நான்கிலிருந்து இருபத்தினான்காக ஆறுகட்டளை வாகனங்களிலிருந்து அனுப்பக்கூடிய திறன் கொண்டிருக்கிறது. இதன் சிறப்பு மூன்று வினாடி இடைவெளிக்குள் இரண்டு ஏவுகணை விகிதம் மேற்குறித்த ஏவுகணை களை தாக்குதல் எல்லைக்கு நகர்த்தக்கூடியதாகவுள்ளது. இது நிலையான ஏவுகணைத் திட்டமாகவும் செயல்படுத்தக்கூடிய வடிவமைப்பை கொண்டுள்ளது. இதனது நிறுத்தல் காலம் 5 நிமிடங்கள் மட்டுமே.

## எஸ் - 400

உலகிலேயே மிக நவீனமான நிலத்தில் இருந்து வானில் உள்ள இலக்குகளைத் தாக்கும் வான் பாதுகாப்பு அமைப்புக்களில் எஸ் 400 அமைப்பும் ஒன்று. எஸ் – 400 என்றால் Surface என்று பொருள். அதாவது தரையிலிருந்து புறப்பட்டு 400 கி.மீ பயணித்து தாக்க வரும் ஏவுகணை களை இடைமறித்து தாக்கும் ஆற்றல் பெற்றது இதன் சிறப்பம்சம் ஆகும். உலகிலுள்ள மிகவும் அதி நவீன ஏவுகணை தளவாடங்களில் ஒன்றாக ரஷ்சியாவின் எஸ் – 400 கருதப்படுகிறது. ஒரு எஸ் – 400 தொகுதியில் 8 ஏவுகலன்களும் 112 ஏவுகணைகளும் காணப்படும். அத்துடன் ஒரே நேரத்தில் 80 இலக்குகளை தாக்கி வீழ்த்த வல்லது.

எஸ் – 400 ரக ஏவுகணைகள் எவ்வாறு செயல்படும் என்பதனை பின்வருமாறு நோக்குவோம்

1. தொலைதூர கண்காணிப்பு ரேடர்கள் பொருட்களை கண்காணிப்ப தோடு, தகவல்களை கட்டளை வாகனத்திற்கு அனுப்பும். அதனை வைத்து கட்டளை வாகனம் இலக்குகளை மதிப்பீடு செய்யும்.
2. இலக்கை அடையாளம் கண்டவுடன், கட்டளை வாகனங்கள் ஏவுகணைகளை செலுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஏவுதல் தொடர்பான தரவுகள் ஏவு வாகனத்திற்கு அனுப்பப்பட்டு வானில் ஏவுகணைகள் செலுத்தப்படும்
4. மற்றொரு ரேடார் ஏவுகணைகள் இலக்கை நோக்கி பயணிக்க உதவி செய்யும்.

## அனைத்துலக அணுசக்தி மையம்
## (International Atomic Energy Agency)

அனைத்துலக அணுசக்தி மையம் (International Atomic Energy Agency) என்பது அணுசக்தியின் அமைதி வழி பயன்பாட்டினை ஊக்கு விக்கவும், அணுக்கருவிகளின் இராணுவப் பயன்பாடுகளை தடுக்கவும் ஜீலை 29, 1957 அன்று சர்வதேச அணுசக்தி அமைப்பு மசோதா மூலம் நிறுவப்பட்ட ஒரு தன்னாட்சி அமைப்பாகும். மறைந்த அமெரிக்க குடியரசுத் தலைவர் ஐசனோவர் அவர்கள் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் 1953 ஆம் ஆண்டு ஆற்றிய அமைதிக்கான அணுக்கள் எனும் உரையில் அணுசக்தியின் பயன்பாட்டினை கட்டுப்பாட்டுடன் வளர்க்க இப்பன்னாட்டு அமைப்பை உருவாக்கும் ஆலோசனையை முன்வைத்தார். இது ஐக்கிய நாடுகளின் பொதுசபை மற்றும் பாதுகாப்பு சபை ஆகியவற்றுக்கு மட்டும் பதிலளிக்க கடமைப்பட்டது. 2005ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு இவ்வமைப்பிற்கும் இதன் தலைவர் மொகம்மது எல்பரதேய் என்பவருக்கும் கூட்டாக வழங்கப்படுவதாக அக்டோபர் 7, 2005 அன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் தலைமையகம் வியன்னா, மற்றும் ஆஸ்திரியாவில் உள்ளது. மேலும் இது ஜப்பானின் டோக்கியோ மற்றும் கனடாவின் டெரராண்டோ நகரங்களில் இரண்டு பிராந்திய பாதுகாப்பு அலுவலகங்களையும் கொண்டுள்ளது. இதன் இரண்டு தகவல் தொடர்பு அலுவலகம் நியூயோர்க் மற்றும் ஜெனீவா நகரங்களில் அமைந்துள்ளது. மேலும் இதற்கு வியன்னா, செய்பரஸ்டோர்ப், ஆஸ்திரியா, மற்றும் மொனாகோ நகரில் ஆய்வகங்களை கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துலக அணுசக்தி மையம் ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னாவில் 1957 யூலை மாதம் 29 ஆம் நாள் தொடங்கப்பட்டது. இரண்டாவது உலகப்போரில் ஏற்பட்ட அழிவினைக் கண்ட மக்கள் அணு ஆற்றலைப் பற்றி பெரிதும் அச்சம் கொண்டனர். இந்நிலையில் தான் ஆக்கத்திற்கே அணு (Atom For Peace) எனும் கோட்பாட்டுடன் IAEA தொடங்கப் பெற்றது. இந்த அமைப்பின் முக்கிய நோக்கம் அணு ஆற்றலை அமைதி, மருத்துவம், வளமை முதலியவைகளை உலகம் முழுவதும் பரவலாக்கவும் அதனை விரைவுபடுத்தவும் விரிவுபடுத்துவதுமாகும். இவ்வமைப்பின் உறுப்பு நாடுகள் அணு ஆற்றலை இராணுவத்திற்காக பயன்படுத்துவதை கட்டுப்படுத்துவதுமாகும்.

UNO, WHO போன்று இது ஒரு சர்வதேச நிறுவனம். தன்னாட்சி பெற்ற அமைப்பாக இருந்தாலும் இது தனது வருட வரவு செலவு மற்றும் நடவடிக்கைப் பற்றி UNO விற்கும் பொதுசபைக்கும் அனுப்புகிறது. 35நாடுகள் கொண்ட குழுவால் தேர்ந்து எடுக்கப்பட்ட இயக்குனர், அனைத்து உறுப்பு நாடுகளின் பொதுசபையும் முக்கிய பங்கு வகிக்கின் றன. செலவுகளை உறுப்பு நாடுகள் ஏற்கின்றன.

அனைத்துலக அணுசக்தி மையத்தின் செயலகமானது ஆஸ்திரியா நாட்டின் வியன்னா நகரில் உள்ள வியன்னா பன்னாட்டு மையத்தில் தலைமை கொண்டுள்ளது. இத்துடன் சுவிட்சிலார்ந்து நாட்டின் ஜெனீவா, அமெரிக்க ஒன்றியத்தின் நியூயோர்க் கனடா நாட்டின் டொரொன்டோ மற்றும் ஜப்பான் நாட்டின் டோக்கியோ ஆகிய நகர்களில் இவ்வமைப்பின் துணை அலுவலகங்கள் குடி கொண்டுள்ளன. மேலும் இவ்வமைப்பின் பல்வேறு ஆய்வு மையங்கள் மற்றும் அறிவியல் கூடங்கள் மொனாகோ அரசகத்திலும் ஆஸ்திரியா நாட்டின் வியன்னா மற்றும் சைபெர்ஸ்டோர்ப் நகரங்களிலும் இத்தாலி நாட்டின் திரேஸ்தே நகரிலும் உள்ளன.

அனைத்துலக அணுசக்தி மையமானது அணுத்தொழில்நுட்பத்தை அமைதிவழியில் பயன்படுத்தும் பொருட்டு அரசுகளுக்கிடையே அறிவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யல் மற்றும் தொழில்நுட்ப உறவுகளை மேம்படுத்தும் மன்றமாக செயல்பட்டு வருகிறது. இவ்வமைப்பின் முப்பெரும் தூண்கள் என்று போற்றப்படும் முதன்மை கடமைகள் பின்வருமாறு

01. வரைமுறைகளை பேணுதல் மற்றும் சோதித்தல்

அனைத்துலக அணுசக்தி மையம் ஏறக்குறைய 140 நாடுகளுடன் கொண்டுள்ள வரைமுறை உடன்பாடுகளின்படி அந்நாடுகளின் அணு மற்றும் அணுசார்ந்த நிலையங்களில் சோதனை மேற்கொள்கிறது. ஏறத்தாழ அனைத்து உடன்பாடுகளும் அணு ஆயுதங்களைப் பெறோம் என்று உறுதி பூண்ட நாடுகளுடனேயே உள்ளன.

02. காவல் மற்றும் பாதுகாப்பு பேணுதல்

உலக நாடுகளின் அணு கட்டுமானம் தொடர்பான பாதுகாப்பு மற்றும் காவலை மேம்படுத்தவும், இடர் வருங்கால் சரியான முறையில் எதிர்கொள்ளவும் அனைத்துலக அணுசக்தி மையம் உதவுகிறது. கேடு விளைவிக்கும் அணுக்கதிர் வீச்சிலிருந்து மக்களையும் சுற்றுச் சூழலையும் காப்பது முதன்மைக் குறிக்கோளாகும்.

03. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் பேணுதல்

வளரும் நாடுகளின் இன்றியமையா தேவைகளுக்கு அமைதி வழியில் அணு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவ தற்கு உலகின் முன்னோடியாக அனைத்துலக அணுசக்தி மையம் திகழ்கிறது. இப்பணியானது வறுமை, நோய்நொடிகள், சுற்றுச்சூழற் கேடு போன்றவற்றை எதிர்த்து போரிடவும் நிலையான வளர்ச்சியை பெருக்கவும் பங்களிக்கிறது.

அனைத்துலக அணுசக்தி மையத்தின் உறுப்பு நாடாக இணைந்து கொள்வது ஒரளவு இலகுவாகும். இதில் அங்கத்தவராக இணைந்து கொள் வதற்கு முதலில் அதன் பொது செயலாளரிடம் விண்ணப்பம் அளிக்க வேண்டும். அவரின் பரீசிலனைக்கு பின்னர் அது பாதுகாப்பு சபையின் வாக்களிப்பிற்கு அனுப்பப்படும். அதில் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அந்நாடு அணுசக்தி ஒப்பந்தம் மற்றும் அணு ஆயுத தடை ஒப்பந்தத்தில் கையொப்பமிடல் வேண்டும். அதன் பின்னர் எவ்வித நிபந்தனைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றி அந்நாடு உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப்படும். இதில் மொத்தம் 159 உறுப்பு நாடுகள் உள்ளன. பெரும்பாலான ஐ.நா சபை உறுப்பினர்கள் இதிலும் உறுப்பினராக உள்ளனர். இதுவரை 2 நாடுகள் விலக்கப்பட்டுள் ளன. அவை வடகொரியா மற்றும் கம்போடியா ஆகும். இதில் வடகொரியா 1974 இருந்து 1994 வரை உறுப்பினராக இருந்தது. ஆனால் அது பாதுகாப்பு ஒப்பந்தத்தின்படி நடக்காததால் விலக்கப்பட்டது. கம்போடியா 1958இல் ஒரு உறுப்பினராக இணைந்த அது 2003இல் விலக்கிக் கொண்டது. எனினும் 2009 இல் மீண்டும் உறுப்பினராக இணைந்தது.

## குழு - 7 (G – 7)

கொக்குவில் பொது நூலகம்
நல்லூர் பிரதேசசபை

G – 7 என்பது ஏழு நாடுகளின் குழு என அர்த்தப்படும் உலகின் பணக்கார நாடுகளாகவும் உலக விடயங்களில் அதிகளவு செல்வாக் கினை செலுத்தும் நாடுகளாகவும் G – 7 காணப்படுகின்றது. இவ்வமைப் பில் கனடா, பிரான்சு, ஜேர்மனி, இத்தாலி, யப்பான், ரஷ்சியா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்க குடியசு (USA) என்பன இடம்பெற்றுள்ளன. G – 7 என்பது முன்னதாக G – 8 என அழைக்கப்பட்டது. உக்ரைன் விவகா ரத்தில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக 2014 ஆம் ஆண்டு ரஷ்சியா இவ் வமைப்பிலிருந்து நீக்கப்பட்டதன் விளைவாக G – 7 அமைப்பாக தொழிற்படுகின்றது.

**வரலாறு**

1975ம் ஆண்டு இவ்வமையம் ஆரம்பமானது. உலகின் பெரிய நாடுகளாகவும் செல்வந்த நாடுகளாகவும் செல்வந்த நாடுகளாகவும் இருந்த சில நாடுகள் தமக்கிடையில் கூடி அரசியல் பொருளாதாரம் பற்றிய உலகம் தழுவிய விடயங்களை கலந்துரையாடி வந்த போது இவ்வமைப்பு உருவாவதற்குகான கரு உருவாகியது. ஆரம்பத்தில் இது 6 நாடுகளைக் கொண்ட அமைப்பாகவே காணப்பட்டது. 1997 இல் கனடா சேர்க்கப்பட்டு குழு 7 நாடுகளாகவும் 1988 இல் மீண்டும் ரஷ்சியா இணைக்கப்பட்டு குழு – 8 நாடுகளாகவும் மாறியது. 2014 இல் ரஷ்சியா நீக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் G – 7 அமைப்பாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய சர்வதேச ஒப்பந்தங்கள் சுங்க கூட்டுக்கள் அமைப்புக்கள் போல் G – 7 நாடுகள் ஒரு நிலையான கட்டமைப்பினையோ, ஒரு நிலை யான நிர்வாக முறையினையோ இது கொண்டு இருக்கவில்லை. G – 7 குழுவின் தலைவரிடமே G – 7 நாடுகளின் வருடாந்த உச்சி மாநாட்டினை கூட்டும் அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது. உச்சி மாநாட்டின் போது நாடு களின் தலைவர்கள் அந்த நேரத்தின் பிரச்சினையை முதன்மைப்படுத்தி விடயங்களை கலந்துரையாடுவார்கள்.

G – 7 உச்சி மாநாட்டின் போது நாட்டுத் தலைவர்கள் கூட்டாக சில தீர்மானங்களை எடுப்பதும் பின்னர் அத்தீர்மானம் குறித்து தனிப்பட்ட ரீதியில் மேற்கொண்ட நடவடிக்கை முடுக்கிவிடுவர். ஒவ்வொரு உச்சி மாநாட்டின் போதும் உலகின் முக்கிய விடயங்கள் குறித்து அவர் தீர்மா னம் எடுப்பர். பொதுவாக G – 7 நாடுகளால் எடுக்கப்படும் தீர்மானங்கள் இவ்வமைப்பின் அங்கத்தவர்களால்லாத நாடுகளையும் பாதிக்கும். மேற்படி காரணத்தினால் G – 7 நாடுகளின் அமையத்தில் அங்கத்துவம் வகிக்காத பல நாடுகள் நிறுவனங்களும் இவ்வுச்சி மாநாட்டின் போது பங்கெடுக்க விருப்பம் தெரிவிப்பது வழக்கம். இதனால் G – 7 உச்சி மாநாட்டின் போது பார்வையாளர் அந்தஸ்து பெற்ற பல நாடுகள் காணப்படுகின்றன. இவ்வகையில் ஐரோப்பிய சமூகம் தனது பிரிதிநிதிகளை அனுப்பவ துண்டு. இதனை விட சில நாடுகளின் தலைவர்களும் இத்தகைய மாநாட்டின் போது அழைக்கப்படுவதுண்டு. உதாரணத்திற்கு ஆபிரிக்க ஒன்றிய நாட்டுத் தலைவர்கள் அழைக்கப்படுவதுண்டு. அது போல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் தலைவர்களும் அழைக்கப்படுவ துண்டு. மேலும் சில சமயங்களில் அரசு சார்பற்ற நிறுவனங்களும் அழைக்கப்படுவதுண்டு.

G – 7 குழுவின் தலைமைத்துவம் நாடுகளின் தலைவர்களிடையே சுழற்சி முறையில் வழங்கப்படும். எந்த நாட்டின் தலைவர் தலைமைப் பொறுப்பில் இருக்கின்றதோ அந்த நாடு அமைச்சர் மட்டத்திலான கூட்டங் கள், உச்சிமாநாட்டினை நடத்துதல், திட்டமிடல் என்பன அவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பாகும். அனேகமாக உலகம் தழுவிய விடயங்களே கலந்துரை யாடலுக்கு உட்படும். சுகாதாரம், சட்டம், தொழிலாளர் பிரச்சனை, பொருளாதார நெருக்கடி, சூழல், சுற்றுலாத்துறை போன்ற விடயங்களை கலந்துரையாடப்படும்.

G – 7 குழுவான உலகின் பலம் பொருந்திய ஒரு அமைப்பாகும். உலகின் முன்னணி ஒன்பது ஏற்றுமதி நாடுகளில் ஏழு நாடுகள் இந்த குழுவில் இடம் பெற்றுள்ளது. உலகின் ஏழு பெரிய பங்குச் சந்தைகளில் 5 நாடுகள் இக்குழுவில் இடம் பெற்றுள்ளது. உலகில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிக பங்கு வகிக்கும் 9 நாடுகளில் 7 நாடுகள் இவ்வமைப் பில் இடம்பெற்றுள்ளன. உலகின் எண்ணெய் வள ஒதுக்கில் 2ம் நிலையி லுள்ள கனடா இக்குழுவில் இடம் பெற்றுள்ளது. உலகின் 9 அணுஉற்பத்தி முன்னணி நாடுகளில் 7 நாடுகள் இக்குழுவில் இடம் பெற்றுள்ளன. ஐக்கிய நாடுகள் சபைக்கு அதிகளவு நிதியுதவியினை செய்யும் 8 நாடுகளில் 7 நாடுகள் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளது. மேற்படி விடயங்களை கவனத்தில் எடுக்கும் போது G – 7 குழுவின் உலக முக்கியத்துவத்தினை புரிந்து கொள்ள முடியும்.

## ஈரானிய புரட்சி

ஈரானிய புரட்சி என்பது ஈரானின் இஸ்லாமிய புரட்சி என்றும் 1979 புரட்சி என்றும் அழைக்கப்படுகின்றது. அமெரிக்க ஆதரவு பலவீ அரச மரபின் அரசர் முகமது ரிசா சா பலவீஆட்சியில் இருந்து அகற்றப்பட்டு இஸ்லாமிய குடியரசு அயத்தோலா கோமெய்னி தலைமையில் அமைந் ததை இந்நிகழ்வு குறிக்கிறது. இப்புரட்சிக்கு இடதுசாரி அமைப்புகளும் இஸ்லாமிய அமைப்புக்களும், ஈரானிய மாணவர் இயக்கமும் துணை புரிந்தன. புரட்சியின் தொடக்கத்தில் முகமது ரிசா சா அரசைக் காப்பாற்ற சோவியத் ஒன்றியம் முயன்றாலும் இஸ்லாமிய குடியரசைச் சோவியத் ஒன்றியம் உடனடியாக ஏற்றுக்கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமது ரிசா சா அரசுக்கு எதிரான போராட்டங்கள் அக்டோபர் 1977இல் ஆரம்பித்தன. அது பின்னர் சமயம் சார்ந்த போராட்டமாக மாறியது. ஜனவரி 1978 இல் இப்போராட்டம் தீவிரமடைந்தது. 1978 ஆகஸ்ட் மற்றும் டிசம்பருக்குள் இப்போராட்டத்தால் நாடு முடங்கியது. 1979 ஜனவரி 16 அன்று தன் கடமைகளைப் பிரதமரிடம் ஒப்படைத்து விட்டு மன்னர் முகமது ரிசா சா வெளிநாட்டுக்கு தப்பிச்சென்றார். அயத்தோலா கோமெய்னி அரசு அமைக்க அழைக்கப்பட்டார். வெளிநாட்டிலிருந்து கோமெய்னி தெக்ரான் திரும்பியபோது அவரைப் பல மில்லியன் ஈரானியர்கள் வரவேற்றனர். பிப்ரவரி 11 அன்று மன்னரின் படைகளைப் புரட்சிப்படைகள் முழுவதுமாகத் தோற்கடிக்கப்பட்டதும் மன்னர் ஆட்சி முழுவதுமாகக் குலைந்தது. கோமெய்னி அதிகாரபூர்வமாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். தேசிய வாக்கெடுப்பு மூலம் ஈரானியர்கள் ஈரானை இஸ்லாமிய குடியரசாக ஏற்றனர். ஏப்பிரல் 1, 1979 அன்று அது அதிகாரபூர் வமாக அறிவிக்கப்பட்டது. 1979 டிசம்பரில் புதிய அரசியலமைப்பு சட்டமும் ஏற்க்கப்பட்டது. இதில் அயத்தோலா கோமெய்னி நாட்டின் உயரிய தலைவராக அறிவிக்கப்பட்டார்.

இப்புரட்சி உலகுக்கு பெரும் வியப்பை தந்தது. பொதுவாக புரட்சிக்கு அடிப்படையாக கருதப்படும் காரணங்களான பொருளாதார நெருக்கடி, அடித்தட்டு மக்களின் புரட்சி, இராணுவ அத்துமீறல் போன்ற எதுவும் ஈரானிய புரட்சிக்கு காரணங்களாக அமையவில்லை.

ஈரானிய புரட்சி வேகமாகப் பரவியதற்கு தேசியவாதம், பெரும் திரள்வாதம் போன்றனவும், கலாசாரம் மேற்குலமயமாக்கலுக்கு உட்படுதல், மதசார்பற்ற நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் முயற்சிகளும், அவற்றிற்கு எதிரான பழமைவாத ஷியா முஸ்லீம்களின் கிளர்ச்சியும் சமூக அநீதிக்கு எதிரான இடதுசாரிகளின் போராட்டமும் எண்ணெய் வளத்தில் கிடைத்த பெரும் பணத்தால் நிறைவேற்ற முடியாத பொருளாதார திட்டங்களைத் தீட்டியதும், 1977– 78இல் ஏற்பட்ட தற்காலிக கடும் பொருளாதார சிக்கலும் காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமது ரிசா சாவின் ஆட்சி ஊழலும் அடக்கு முறையும் மிகுந்ததாக இருந்தது. முகமது ரிசா சா முஸ்லீம் அல்லாத மேற்கு நாடுகளின் குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவின் கையாளாகப் பார்க்கப்பட்டார். அதே சமயத்தில் முகமது ரிசா சாவுக்கு மேற்குலக அரசியல்வாதிகளிடமும் ஊடகங்களிடமும் செல்வாக்க குறைந்தது. குறிப்பாக ஜிம்மி கார்டரின் நிருவாகத்தில் இவருக்கு ஆதரவு குறைந்தது. இதற்கு முதன்மையான காரணம் 1973 எண்ணெய் நெருக்கடி காலத்தில் அமெரிக்காவுக்கு பாறை எண்ணெய் ஏற்றுமதி செய்யும் அரபு நாடுகளின் அமைப்பு எண்ணெய் ஏற்றுமதிக்கு பிறப்பித்த தடைக்கு முகமது ரிசா சா ஆதரவு கொடுத்த மையாகும். இதனால் முகமது ரிசா சாவின் செல்வாக்கு அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகள் மத்தியில் குறைய காரணமாகியது. இதுவும் புரட்சிக்கான காரணங்களில் ஒன்றாகும்.

ஈரானிய புரட்சி என்பது சடுதியாக ஏற்பட்ட ஒன்று அல்ல. அது நீண்ட கால காரணங்களையும் வரலாற்று பின்னனிணையும் கொண்டுள்ளது. மேற்கத்திய பாணியை எதிர்க்கும் பழமையை விரும்பும் ஈரானியர் களிடம் ஷியா மதகுருமார்களின் செல்வாக்கு குறிப்பிடத்தக்க அளவில் இருந்தது.

முகமது ரிசா சா பலவீயின் தந்தை ரிசா சா பலவீ இஸ்லாமிய சட்டங்களை மாற்றி மேற்கு சார்பான சட்டங்களை கொண்டுவந்தார். பொதுவெளியில் பெண்கள் முக்காடு அணிய தடைவிதித்தார். இதை மீறிய பெண்களின் முக்காடு வலுக்கட்டயமாக நீக்கப்பட்டது. ஆண்களும் பெண்களும் தனித்தனியாக இருக்க வேண்டும் என்பதை நீக்கினார். முகமதி ரிசா பலவீ அமெரிக்க அரசாங்கத்துடன் நெருங்கிய உறவைக் கொண்டிருந்தார். அமெரிக்காவுடன் இணைந்து இவரும் சோவியத் ஒன்றியத்தின் அதிகாரம் பரவலாகாமல் இருக்க உதவி செய்தார். இவர் சர்வாதிகாரியாக ஆட்சி புரிந்தார். இஸ்லாமிய மற்றும் மக்களாட்சி அரசியலமைப்பை புறக்கணித்து மேற்கத்தைய முறையை ஈரானில் நடைமுறைப்படுத்துவதில் முனைப்பு காட்டினார். தேசியவாத, இடதுசாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய அமைப்புக்கள் வெளிநாட்டிலிருந்து கொண்டு இவருடைய ஆட்சியின் ஊழல், அரசியலமைப்பு மீறல், உளவு அமைப்பு கொண்டு எதிர்ப்பவர்களை அடக்குதல் ஆகியவற்றை கடுமையாக எதிர்த்தன.

மேலும் ஈரான் புரட்சி ஏற்படுவதனை தூண்டிய காரணங்களில் ஷியா மதகுருவான அயத்தோலா ருகோல்லா கோமெய்னிவின் நடவடிக்கைகள் அளப்பறியது. ஈரானிய புரட்சிக்கு முன்பு அயத்தோலா ருகோல்லா கோமெய்னி 1963இல் முகமது ரிசா சா அரசுக்கு எதிராக நடந்த நில உடைமையில் சீர்திருத்தம் வேண்டுமென்று இடம்பெற்ற வெள்ளைப் புரட்சியின் போது ஈரானின் அரசாங்கத்திற்கு எதிரான பல அரசியல் கருத்துக்களை வெளியிட்டார். முகமது ரிசா சா "வேதனையான புரிந்துகொள்ள முடியாத மனிதர், அவரின் நடத்தைகள் ஈரானின் இஸ்லாமிய மதத்தை அழிவு பாதைக்குக் கொண்டு செல்பவை என்று சொன்னதற்காக 1963இல் கோமெய்னி கைது செய்யப்பட்டார். எட்டு மாத வீட்டுக் காவலுக்கு பின் அவர் விடுவிக்கப்பட்டார். அதன் பிறகும் அவர் அரசை எதிர்த்தார். குறிப்பாக முகமது ரிசா சாவின் இஸ்ரேலுடனான நெருங்கிய உறவு, அமெரிக்க அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தூதரக பாதுகாப்பு ஆகியவற்றை எதிர்த்தார். 1964 நவம்பர் மாதம் மீண்டும் கைது செய்யப்பட்டு வெளிநாட்டுக்கு நாடு கடத்தப்பட்டார். புரட்சி நடக்கும் வரை 15 ஆண்டுகள் வெளிநாட்டிலேயே இவர் இருந்தார்.

ஈரானிய மக்களிடம் நேரடித் தொடர்பு இல்லாததால் கோமெய்னி தம் கொள்கைளை இஸ்லாமிய அரசாங்கம் என்னும் புத்தகத்தினை வெளியிட்டு அதன் மூலம் பரப்பினார். இதில் சட்டத்தின் வழி அரசு நடக்க வேண்டும் என்றும் அனைத்து மக்களுக்கும் இஸ்லாமிய நீதிபதிகள் அரணாக இருந்து அரசு தம் கடமையிலிருந்து வழுவாமால் மேற்பார்வை யிடுவார்கள் என்று தெரிவித்தார். இஸ்லாமிய கடமைகளான நோன்பு, வழிபாட்டை விட இச்சட்டம் அவசியமெனக் கூறினார். இஸ்லாமிய சரியா சட்டத்தினாலேயே இஸ்லாமை வழுவாமால் காக்க முடியும் என்றும் அநீதி, ஏழ்மை, முஸ்லீம்களின் நிலத்தை முஸ்லீம்கள் அல்லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டவர் கைப்பற்றுவதை தடுக்க முடியுமெனக் கூறினார். இவருடைய இஸ்லாமிய நீதிபதிகள் குறித்த எண்ணம் இவரின் புத்தகம், பள்ளிவாசல்களில் ஓதப்படும் பாங்கு, கடத்தி வரப்பட்ட இவருடைய பேச்சுக்கள் அடங்கிய ஒலி நாடாக்கள் பழைய மாணவர்கள், மரபுவழி வணிகர்கள் மூலம் பொதுமக்களிடம் பரப்பப்பட்டது.

1970 இல் கிடைத்த பெரும் எண்ணெய் வள செல்வத்தால் அஞ்சத் தக்க வகையில் பணவீக்கம் அதிகரித்தது. ஏழைகளுக்கும் பணக்காரர் களுக்குமான இடைவெளி அதிகமாகியது. ஈரானியர்களுக்கு அங்கிருந்த வெளிநாட்டவர்கள் மீது வெறுப்பு கூடியது. எண்ணெய் வருமானத்தில் பெரும்பகுதி முகமது ரிசா சா குடும்ப உறுப்பினர்களை அடைந்தமை பல ஈரானியர்களை கொதிப்படைய வைத்தது. அரசுக்கு வருமானம் அதிகரித்துக் கொண்டு சென்றது. ஆனால் ஈரானியர்களின் குடும்ப வருமா னம் குறைந்தது. 1976இல் ஒரு பில்லியன் டாலருக்கு மேல் முகமது ரிசா சா எண்ணெய் மூலம் வருமானம் பெற்றுக் கொண்டார். அத்துடன் அவரின் குடும்ப அறக்கட்டளையின் வருமானம் கிட்டத்தட்ட மூன்று பில்லியன் டாலராக இருந்தது.

1977 இன் நடுப்பகுதியில் பணவீக்கத்தை கட்டுப்படுத்த கொண்டு வந்த பொருளாதார சிக்கன நடவடிக்கையால் ஆயிரக்கணக்கான ஏழை களும் நகர கட்டுமானத்துறையில் வேலை செய்த தொழிலாளர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். பண்பாட்டு, மத முறையில் பழமைவாதி களான பலர் புரட்சியின் முதன்மை போராளிகளாக விளங்கினர்.

அனைத்து கட்சிகளும் தடைசெய்யப்பட்டு முகமது ரிசா சாவின் கட்சி (இராச்டக்கிச்சு கட்சி) மாத்திரம் செயல்பட அனுமதிக்கப்பட்டது. இக்கட்சி யில் அனைவரும் சேரவும் உறுப்பினர் கட்டணம் செலுத்தவும் கட்டாயப் படுத்தப்பட்டனர். பணவீக்கத்தை கட்டுப்படுத்த பெரும் இலாபமீட்டுவதற்கு எதிரான பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. அதிக விலைக்குப் பொருட் களை விற்கும் வணிகர்கள் சிறையியலடைக்கப்பட்டனர். அபராதமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிக்கப்பட்டது. இவ் நடவடிக்கைகள் வணிகர்களை கோபமடையச் செய்து அவர்களை அரசியலுக்கு இழுத்தது. மேலும் கள்ளச் சந்தை வளர இந்நடவடிக்கை வித்திட்டது.

முகமது ரிசா சாஅரசுக்கு எதிரான உறுதியான நடவடிக்கைகள் மூலம் கோமெய்னியின் புகழ் பெரிதும் பரவியது. இவரது செயல்களால் கோப முற்ற முகமது ரிசா சா1978 ஜனவரி மாதம் ஈரானிய பத்திரிகை ஒன்றில் “கோமெய்னி பிரித்தானியாவின் தரகர் என்றும் ஓரினச் சேர்க்கையாளர் என்றும் நாட்டை வெளிநாடுகளிடம் கையளித்துவிடுவார் என்றும் புனை பெயரில் குற்றம் சுமத்தி எழுதினார். இதனால் சர்வதேச அளவில் முகமது ரிசா சாஅவர்களுக்கு அழுத்தம் கொடுப்பதற்காகக் கோமெய்னி போராட்டக்கார்களை ஒன்றுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். அமெரிக்காவையும் மேற்குலகையும் போராட்டக்காரர்களின் பக்கம் கவர பல நடவடிக்கைகள் எடுத்தார். மேற்குலகின் மீதான தனது வெறுப்பை தற்காலிகமாக இதன் மூலம் ஒதுக்கிக் கொண்டார்.

கோமெய்னியின் பிரதான நோக்கம் ஈரானில் இஸ்லாமிய மதத்தை அடிப்படையாக கொண்ட மக்கள் ஆட்சி இடம் பெற வேண்டும் என்பது ஆகும். அத்துடன் மதகுருமார்களுக்கு ஆட்சி அதிகாரத்தின் மீது எல்லாம் ஆர்வம் இல்லை எனவும் பலமுறை கூறினார். மதகுருமார்கள் முகமது ரிசா சாவின் கொடுங்கோல் ஆட்சியிலிருந்து ஈரானிய மக்களுக்கு விடுதலையை பெற்றுக்கொடுப்பதே நோக்கமாக கொண்டு இருக்கின்றார் கள் என வலியுறுத்தினார். இதன் மூலம் 1978இன் இறுதியில் இடதுசாரி களின் ஆதரவை கோமெய்னி முழுவதுமாகப் பெற்றார். ஈரானிய உளவு பாதுகாப்புப் படையால் பெருமளவிலான ஆதரவாளர்ளை இழந்திருந்த இடதுசாரிகள் கோமெய்னியின் புகழைக் கொண்டு முகமது ரிசா சாவினை ஆட்சியிலிருந்து நீக்கலாம் என்று எண்ணினர்.

முகமது ரிசா சாவின் மேற்குலக ஆதரவாளர்களின் ஆதரவை கோமெய்னி கோரினார். ஐக்கிய அமெரிக்காவுக்கும் முகமது ரிசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவிற்குமான உறவில் விரிசல் ஏற்பட்டிருந்தது. கோமெய்னியும் அவரது ஆதரவாளர்களும் பிரான்சில் இருந்ததால் மேற்குலக ஊடகங்களை அணுகுவது சுலபமாக இருந்தது. அவர் தனக்கு ஆட்சி அதிகாரத்தின் மீது ஆசை இல்லை எனவும் முகமது ரிசா சாவின் கொடுங்கோல் ஆட்சியை நீக்குவதே குறிக்கோள் என்றும் கூறினார். மேலும் தன்னை முற்போக்கு வாதி என்றும் கூறிக்கொண்டார். இதனால் மேற்குலக ஊடகங்கள் இவருக்கு ஆதரவாக மாறின. அத்துடன் மேற்குலக ஊடகங்கள் முகமது ரிசா சாவின் ஆட்சியின் மனித உரிமை மீறல்களை அடிக்கடி சொன்னதால் முகமது ரிசா சாஆட்சிக்கு ஆதரவாக இருந்த ஜிம்மி காட்டர் அரசுக்கு நெருக்கடி அதிகரித்தது.

ஊடகங்கள் ஆட்சிமாற்றத்துக்கு கருவியாகப் பயன்படுத்திய முதல் புரட்சி ஈரானிய புரட்சியாகும். மேற்குலக ஊடகங்களை கோமெய்னி நன்கு பயன்படுத்திக் கொண்டார். அவரது பெரும்பாலான செய்திகள் மொழிபெயர்ப்புடன் பிபிசி உள்ளிட்ட மேற்குலக ஊடகங்களால் ஈரானில் ஒலிபரப்பப்பட்டன. கோமெய்னியின் போராட்டம் ஆனது பலரை சென்று அடைய ஊடகங்களே காரணமாக அமைந்தது.

அக்டோபர் 1978இலிருந்து ஜனவரி 1979 வரையான காலகட்டம் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க காலம் ஆகும். இக்காலத்தில் போராட்டக் காரர்களிடையே பெருமளவிலான ஒற்றுமை நிலவியது. இது போராட்டம் மற்றும் வேலை நிறுத்தம் போன்றவற்றில் எதிரொலித்தது. இதனால் ஏற்பட்ட விளைவுகளை சமாளிக்க முடியாமல் 1979 ஜனவரி 16 அன்று முகமது ரிசா சாஅவர்களும்இராணியும் ஈரானை விட்டு வெளியேறினார் கள். அவர்கள் வெளியேறியதும் பல்வீ அரச மரபை நினைவுபடுத்தும் சின்னங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டன. ஈரானின் உளவு பாதுகாப்பு படை கலைக்கப்பட்டதுடன் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக் கப்பட்டனர். இதனை தொடர்ந்து ஈரான் கோமெய்னியின் முழு ஆளுகைக் குள் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரபு வசந்தம்

அரபு வசந்தத்திற்கான பொதுவான வரைவிலக்கணம் இல்லை. "ரைம்ஸ் சஞ்சிகை அரபு வசந்தம் என்பதனை ஆர்பாட்டக்காரர் என அடையாளப் படுத்துகின்றது. "பின்காலனிய மனப்பான்மைக்கு முற்றுப்புள்ளி வைத்த புரட்சி என அரபுப் புரட்சியை வரையறுக்கிறார். ஹமித் தபாசி.

"அரபு புரட்சி, அடிப்படையில் வன்முறை வழியிலான புரட்சி அல்ல. ஆட்சியதிகாரத்தை கைப்பற்றும் இலட்சியங்களும் அதற்கு இல்லை. திரட்டிக்கொள்ளப்பட்ட திட்டவட்டமான கொள்கைகள், ஒன்றினைந்த அரசியல் தலைமை ஆகியவற்றையும் அது கொண்டிருக்கவில்லை. இந்த எழுச்சியைப் புரட்சி எனச் சொல்ல முடியுமா என்ற கேள்வியையும் விமர் சகர்கள் எழுப்புகிறார்கள். வன்முறையிலான ஆயுதப் போராட்டங் களுக்கு எதிர்காலமில்லை எனும் சூழலில் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் முனைப்புப் பெற்றுவிட்ட சூழலில் இந்தக் கருத்தாக்கத்தை கியூபா முதல் சீனா வரையிலான மார்க்சிஸ்ட்களும் ஏற்றுக் கொண்டுவிட்ட சூழலில், வன்முறையற்ற புதிய போராட்டத்திற்கான தந்திரோபாயங் களுக்கான மக்கள் திரள் பாதையை அரபுப்புரட்சி தோற்றுவித்தது என அதனைக் காண்போரும் இருக்கிறார்கள்."

அரபுப்புரட்சியும் உலகத்தில் உருவாக்கிய விளைவுகளும் குறித்து நிறையக் கோட்பாடு விவாதங்கள் நடந்து வருகின்றன. பொதுவாக பின்வரும் விவாதங்கள் இடம்பெற்று வருகின்றது.

I. முழுடையடையாத புரட்சி

II. இலக்குகள் அற்ற புரட்சி

III. அரசியல் தலைமை அற்ற புரட்சி

IV. இன்னும் இருக்கும் அமைப்பை மாற்றாத இதனைப் புரட்சி என அமைக்க முடியாது வேண்டுமானால் உருவாகிக் கொண்டிருக்கின்ற புரட்சியின் தொடக்கம் மட்டுமே எனவும் பல்வேறு விதங்களில் அரபு எழுச்சி மதிப்பிடப்பட்டு வரையறைக்குட்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் கட்சிகள் கடந்த சிவில் சமூகத்தினை எழுச்சியே அரபுப் புரட்சியே என வரைவிலக்கணப்படுத்துகின்றது.

## அரபு வசந்தம் தோற்றம் பெற்றதற்கான காரணங்கள்

உலக வரலாற்றினை பொறுத்தவரையில் எந்தவொரு புரட்சியும் திடிரென்று தோன்றியது இல்லை உருவாக்கப்பட்டதும் இல்லை. மாறாக மிக நீண்ட கால அரசியல் சமூக பொருளாதார நியாயங்கள் வலுப்படுத் தப்படும் பொழுதே புரட்சிகளும் வெடித்து சிதறுகின்றன. அரபு நாடுகளில் புரட்சி மூன்று தசாப்தங்களாக எதிர்பார்க்கப்பட்ட ஒன்று.

ஜனநாயக விரோத அடக்கு முறைமை, பாரிய பொருளாதார நெருக்கடிகள், வேலையின்மை, வறுமை, பஞ்சம், மத சுதந்திரத்துக்கு எதிரான அடக்குமுறைகள், அநீதியும் ஊழலும் நிறைந்த மோதல்கள், ஒட்டு மொத்த முஸ்லீம் சமூகத்தினதும் பகைவர்களுடனான தோழமை என்பன அரபு புரட்சிக்கு வித்திட்ட அம்சங்கள் ஆகும்.

மேற்கூறப்பட்டவை அரபுப் புரட்சிக்கான நேரடியான காரணிகளாக காணப்பட பின்வரும் மேற்குலகம் சார் மறைமுக காரணிகளும் அரபு புரட்சியின் தோற்றத்தினை விரைபுபடுத்தின உத்வேகம் பெற்றன.

I. மேற்குலக நாடுகளிற்கு சாதகமாக இல்லாத அரசுகளை மாற்ற விரும்புதல்

உ–ம் : பென் அலி, முபராக், கடாபி, பஷார் அல் அசாத்

II. மேற்குலகின் பொருளாதார நலன்கள் அதாவது மத்திய கிழக்கில் நிரந்தரமான பதட்டத்தை ஏற்படுத்துவதன் மூலம் எண்ணெய் வளத்தை சுரண்டி பொருளாதார வீழ்ச்சியை சரி செய்தல்.

III. மத்திய கிழக்கில் வலதுசாரி ஜனநாயக ஆட்சியை நிறுவுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு நேரடியான மறைமுக காரணிகளின் அடிப்படையில் தோற்றம் பெற்ற புரட்சியைத் தூண்டியவர்கள் தலைமையேற்றவர்கள் படித்த வறிய மத்திய தர வர்க்கத்தின் இளைஞர்கள். இவர்கள் கருத்திய லினால், காலணியாதிக்க எதிர்ப்பினால் உந்தப்படாதவர்கள். முழுமையா கத் தாம் வாழும் நிலப்பரப்பில், தமக்கு ஏற்பட்ட அனுபவத்திலிருந்து போராட உந்தப்பட்டவர்கள். தமக்கான வேலை தம்மை வெளிப்படுத்திக் கொள்வதற்கான ஜனநாயக வெளி போன்ற அடிப்படை உரிமைகளின் மீது வேட்கை கொண்டு போராடப் புறப்பட்டவர்கள். இவர்களில் பெரும் பாலானோர் எண்பதுகளில் பிறந்தவர்கள். இவர்களின் மூத்த தலைமுறை யினர் அரை நூற்றாண்டு காலமாக அச்சத்தின் பிடியில் சிக்கியிருந்த வர்கள். சர்வாதிகாரிகளின் அடக்குமுறையின் கீழ் வாழ்ந்தவர்கள். அத்தகைய தங்களின் மூத்த தலை முறையினருக்கும் ஊக்கம் அளித்த வர்களாக இவ் இளைஞர்கள் காணப்பட்டனர்.

பொதுவாக ஆட்சி மாற்றம், ஆட்சிமாற்றக் குறைபாடு காரணமாக மீண்டும் புரட்சி, மனித உரிமை மீறல்கள், இராணுவ அடக்குமுறைகள் உயிர் இழப்புக்கள், அகதிகள் நெருக்கடி, சொத்து அழிவுகள், கலாசார இழப்பு, அங்கவீனமாதல், என பல விளைவுகளை ஏற்படுத்திய ஏற்படுத் திக் கொண்டு இருக்கும் புரட்சியாக இது காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை**

**பத்திரிகைகள்**

01. அனஸ், எம்.எஸ்.எஸ். (2012, ஆகஸ்ட் 23). உக்கிரமடைந்துள்ள யுத்தமும் அயல் நாடுகளில் உருவாகும் பதற்றமும். தினக்குரல்: புதிய பண்பாடு, யாழ்ப்பாணம்,பக்.4

02. அனஸ், எம்.எஸ்.எஸ். (2012, யூன் 16). உள்நாட்டு யுத்தத்தில் சிக்கி யிருக்கும் சிரியா. தினக்குரல்: புதிய பண்பாடு, யாழ்ப்பாணம்,பக்.3

03. அனஸ், எம்.எஸ்.எஸ். (2012, ஏப்ரல் 28). மத்திய கிழக்கை சூழ்ந்துள்ள பனிப்போர் மேகங்கள். தினக்குரல்: புதிய பண்பாடு, யாழ்ப்பாணம், பக்.4

04. அனஸ், எம்.எஸ்.எம். (2012, பெப்ரவரி 25). சிரியப்புரட்சியும் வளை குடாவில் அதிகரித்து வரும் யுத்த அபாயமும். தினக்குரல் : புதிய பண்பாடு, யாழ்ப்பாணம், பக்: 04

05. அனஸ், எம்.எஸ்.எம். (2012, யூன் 23). வல்லாதிக்க நாடுகளின் போர்க் களமாகி வரும் சிரியா. தினக்குரல் : புதிய பண்பாடு, யாழ்ப்பாணம், பக்: 04

06. அனஸ், எம்.எஸ்.எம். (2013, ஆகஸ்ட் 31). அமெரிக்க தாக்குதல் எதிர்பார்ப்புக்களும் எதிர்ப்புக்களும். தினக்குரல் : புதிய பண்பாடு, யாழ்ப்பாணம், பக்: 05

07. அனஸ், எம்.எஸ்.எம். (2013, நவம்பர் 30). அணு உடன்படிக்கையும் ஈரான் – அமெரிக்க உறவும். தினக்குரல் : புதிய பண்பாடு, யாழ்ப் பாணம் பக்: 04

08. அனஸ், எம்.எஸ்.எம். (2013, டிசம்பர் 14). ரஷ்சியாவின் நட்பு நம்ப கமானது கட்சி மாறும் அரபு நாடுகள். தினக்குரல் : புதிய பண்பாடு, யாழ்ப்பாணம்,

09. ஜனகன் முத்துக்குமார் (2016, ஒக்ரோபர் 26). சர்வதேச அரங்கில் அதிரும் சிரியாவின் உள்நாட்டு யுத்தம். தினஒளி, பக்: 06

10. கணேசலிங்கம், கே.ரீ. (2017, ஏப்ரல் 22). தடம்மாறும் அமெரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியுறவுக் கொள்கை. தினக்குரல் : புதிய பண்பாடு, யாழ்ப்பாணம், பக்:24

11. கணேசலிங்கம், கே.ரீ. (2017, மே 06 ). அமெரிக்காவுக்கு ஈரான் இன்னொரு வட கொரியா?. தினக்குரல் : புதிய பண்பாடு, யாழ்ப்பாணம், பக்: 24

12. கணேசலிங்கம்,கே,ரீ. 2017, மூன்றாம் உலக யுத்தம் சாத்தியமா? தினக்குரல் : புதிய பண்பாடு, கொழும்பு, பக்:24

13. திரு.எஸ்.எஸ். (2013, யூன் 08) எஸ் –300 ஏவுகணையால் சிரியா வில் உத்வேகம் அடையும் சிவில் யுத்தமும். தினக்குரல் : புதிய பண் பாடு, யாழ்ப்பாணம், பக்: 05

14. திரு, எஸ்.எஸ், (2013, மே 18) சிரியாவில் சிக்கலை ஏற்படுத்தும் ரஷ்சிய ஏவுகணைகள். தினக்குரல் : புதிய பண்பாடு, யாழ்ப்பாணம், பக்: 05

15. சுமித்திரை.சா, (2013, செப்டெம்பர் 08) சிரியா மீது போர் தொடுக்க முண்டியடிக்கும் மேற்குலகம். தினக்குரல், யாழ்ப்பாணம், பக் : 18ஜஏ

16. சுமித்திரை, சா, (2013, செப்டெம்பர் 02) ஆபத்தான கட்டத்தில் சிரியப் போர். தினக்குரல், யாழ்ப்பாணம், பக்: 14

17. வில்வன் ஓகன், (2012, பெப்ரவரி 19). “சிரியாவும் உலக யுத்தத்திற் கான விதைகளும்“ தினக்குரல், யாழ்ப்பாணம், பக்: 34

**நூல்கள்**

01. தார்,எஸ்.என், (1971), “1919 முதல் சர்வதேச உறவுகளும் உலக அரசியலும், தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம்: இந்தியா

02. உதயகுமார்,அ.சி,1991, “பூகோள ஆதிக்க விஸ்தரிப்பில் ஆயுத உருவாக்கங்களும், தந்திரோபாயங்களும்“,Tamil Institute of strategic studies: உடுவில், இலங்கை

03. கணேசலிங்கம், கே.ரீ, (2011) “அரபு இஸ்ரேல் பிரச்சனையில் காஸா – ஜெரிக்கா உடன்படிக்கை“, பலஸ்தீனம் ஒரு சமகால நோக்கு, கொழும்பு : சேமமடு பதிப்பகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. பிரசாத்,சி,2015, "அரபு வசந்தம்" சேமமடு பதிப்பகம் : கொழும்பு
05. கைலாசபதி, க, 1992, "சர்வதேச அரசியல் நிகழ்வு(1979–1982)", முத்துவளை அச்சகம் கொழும்பு
06. ஜவர்கலால் நேரு,2002, உலக சரித்திரம் (முதல் பாகம்), அலைகள் வெளியீட்டகம்
07. திருநாவுக்கரசு.மு, 1991, "புதிய சர்வதேச அரசியல் ஒழுங்கு", நியூ ஞரா பதிப்பகம், இலங்கை
08. திருநாவுக்கரசு.மு,2008, "ஒற்றைமைய உலக அரசியலில் போரும் சமாதானமும்" ,தமிழியல், காலச்சுவடு பதிப்பகம் : நாகர்கோவில், இந்தியா
09. வேலாயுதம்,இராம, செல்லம்மாள்,வே,2003, "மேற்காசியா (1800 – 1970)" , நான்காம் பதிப்பு, பழனியப்பா பிரதர்ஸ் : சென்னை
10. ராகவன்,பா, 2005, "டாலர் தேசம்: அமெரிக்காவின் அரசியல் வரலாறு" , கிழக்கு பதிப்பகம் : சென்னை

**சஞ்சிகைகள்**

01. அமிதாவ் ஆசார்ய், 2014,"வெளிக்கிளம்பும் புதிய உலக ஒழுங்கு: அதை எவ்வாறு அழைப்பது?", சமகாலம், கொழும்பு, யூலை, 16–30 பக்: 53–55
02. சியூமஸ் மில்ன்,2014, "அமெரிக்காவிற்குப் போட்டியான வல்லரசு உலகிற்கு இன்று அவசியத் தேவை", சமகாலம், கொழும்பு, நவம்பர், 16–30,பக்:47–49
03. தக்ஷிணா மூர்த்தி,கே.எஸ், 2015, "இஸ்லாமிய அரசு உலகிற்கு அமெரிக்காவின் கொடை", சமகாலம், கொழும்பு, மார்ச், 18–31, பக்:38–41
04. வடாகான்ஃபார்,2013, "மூன்றாவது வருடத்தில் பிரவேசிக்கும் சிரியப்புரட்சி", சமகாலம், கொழும்பு, மார்ச், 16–30, பக்:54–55
05. ஸ்டான்லி ஜொனி, 2015, "மேற்காசியாவில் சூடான பனிப்போர்", சமகாலம், கொழும்பு, யூலை, பக்:49–52



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணையத்தளம்**

01. கிறிஸ் மார்ஷென் (Chris Marsden). (2012, 02 பெப்ரவரி) சிரியாவிற்கு எதிரான வாஷிங்டனின் உந்துதல் பற்றி அமெரிக்காவும் ரஷ்சியாவும் மோதுகின்றன. உலக சோசலிஷ வலைத்தளம்,
Retrieved from:
http://www.wsws.org/tamil/articles/2012/fer/120204_usru.shtml

02. கிறிஸ் மார்ஷென் (Chris Marsden). 2012, சிரியாவில் உள்நாட்டுப் போரும் மத்திய கிழக்குப் புரட்சியின் விதியும் உலக சோசலிஷ வலைத்தளம், 26 நவம்பர்,
Retrieved from:
http://www.wsws.org/tamil/articles/2011/nov/111129thec.shtml

3. கிறிஸ் மார்ஷென் (Chris Marsden)இ (2012, ஆகஸ்ட் 29). அமெரிக்க, பிரிட்டன், பிரான்ஸ், சிரியா மீது இராணுவத் தலையீட்டு அச்சுறுத்தலைக் கொடுக்கின்றன. உலக சோசலிஷ வலைத்தளம்.
Retrieved from:
http://www.wsws.org/tamil/articles/2012/aug/1200830usukp.shtml

4. பில் வான் ஒகென் (Bill Van Auken). (2012, ஏப்ரல் 04). சிரியாவின் நண்பர்கள் – மத்திய கிழக்கில் ஒரு பரந்த போருக்கான முன்னேற்பாடு. உலக சோசலிஷ வலைத்தளம்,
Retrieved from:
http://www.wsws.org/tamil/articles/2012/apr/120422syria.shtml

5. ward,A. (2018, February 28). Siege, starve, and surrender : inside the next phase of the Syrian civil war.
Retrieved from:
https://www.vox.com/2018/2/28/17057736/syria-eastern-ghouta-attack-assad



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. Dewan,A. Eshchenku, A. Tawfeeq, M. (2018, April 12). Syrian forces retake Eastern Ghouta, Russia says : if confirmed, a significant victory for assad.
7. Retrieved from: https://www.local10.com/news/international/syrian-forces-retake-eastern-ghouta-russia-says
8. The carnage in Eastern Ghouta : syria's war heats up again. (2018, February 22) Retrieved from:https://www.economist.com/middle-east-and-africa/2018/02/22/syrias-war-heats-up-again
9. U.S strikes Syria; explosions rock Damascus (2018, April 14). Retrieved from: http://www.adirondackdailyenterprice.com/news/local-news/2018/04/u-s-strikes-syria-explosions-rock-damascus
10. Cenciotti,D. (2018, May 7). This updated chart shows (most of) The Assets Involved in Apr.14. Air Strike on Syria. Retrieved from: https://theaviationist.com/2018/05/07/this-updated-chart-shows-most-of-the-assets-involved-in-apr-14-air-strike-on-syria/
11. Mc carthy.N (2018, October 15). Chemical weapons. Retrieved from: https://www.statista.com/chart/15782/the-number-of-attacks-in-syria-involving-chemical-weapons/
12. Ward, A.(2018, April 16). The us has bombed Syria to punish it for a Chemical attack Retrieved from: https://www.vox.com/2018/4/13/17221420/trump-syria-attack-strike-assad-russia-response-chemical-weapon
13. US launches cruise missiles on Syrian airbase.(2017, April 7). Retrieved from: https://www.aljazeera.com/news/2017/04/us-missiles-syria-170407013424492.html



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. Bashar al Assad says Russian S – 300 missiles have arrive in Syria. (2013, May 30). Retrieved from: https://www.theguardian.com/world/2013/may/30/assad-russian-s300-missiles-syria

15. உக்கிரமடையும் சிரியா விவகாரம் : அமெரிக்கா ரஷ்சியாவிற்கு இடையில் மோதல்?. (2017, ஏப்ரல் 07). Retrieved from: https://www.tamilwin.com/world/01/141997

16. சிரியாவை தாக்கியதால் அமெரிக்காவிற்கு என்ன இலாபம். (2017, ஏப்ரல் 8)
Retrieved from: https://www.bbc.com/tamil/global-39537156

17. விஜிதா. (2018, பெப்ரவரி 23). 5 நாட்களில் 400க்கு மேற்பட்டோர் பலி Retrieved from: https://www.virakesari.lk/article/30935

18. சிரியா போர்: கிழக்கு கூட்டாவில் பொதுமக்கள் 500 பேர் பலி (2018, பெப்ரவரி 24)
Retrieved from: https://www.bbc.com/tamil/global-43184204

19. சிரியா: கிழக்கு கூட்டாவில் என்ன நடக்கிறது (2018, பெப்ரவரி 27)
Retrieved from: https://www.bbc.com/tamil/global-43201634

20. சிரியாவில் ரசாயன குண்டுகளால் கொத்து கொத்தாக பலியாகும் குழந்தைகள். (2018, பெப்ரவரி 27).
Retrieved from: https://www.polimernews.com/view/1115-syria-war-gas-attack-kills-childrens-in-eastern-ghouta

21. சிரியாவில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஆளும் அரசே மீறியது – சொந்த மக்களையே சின்னாபின்னமாக்கும் சிரியா அரசு. (2018, பெப்ரவரி 28).
Retrieved from: https://www.polimernews.com/view/1207-the-governing-government-violated-the-ceasefire-agreement-in-syria

22. சிரியா போரும் மனித உரிமை மீறல்களும். (2018, பெப்ரவரி 28)
Retrieved from:
https://tamil.thehindu.com/world/article9419445.ece



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. சேனாதிபதி,க. (2018, மார்ச் 1). சுக்குநூறாகும் சிரியா
Retrieved from: https://keetru.comindex.php/2014-03-08-04-35-27/2014-03-08-12-18-14/34687-2018-03-01-10-44-00

24. வினவு. (2018, மார்ச் 02). சிரியாவின் இறுதிப்போர் வெளிவராத உண்மைகள்.
Retrieved from: https://www.vinavu.com/2018/03/02/syria-the-untold-stories

25. சிரியாவில் நடக்கும் நீண்ட போருக்கு யார் காரணம்?. (2018, மார்ச் 3).
Retrieved from: https://www.bbc.com/tamil/global-43260111

26. கவுட்டா பகுதியில் கடந்த 13 நாட்களில் 674 பேர் பலியாகி உள்ளனர். (2018, மார்ச் 3).
Retrieved from: https://thuruvi.com

27. சிரியாவில் நடப்பது அப்பட்டமான போர்க்குற்றம் என ஐ.நா அறிவிப்பு. (2018, மார்ச் 3).
Retrieved from: https://www.polimernews.com/view/1516-UN-Rights-council-condemns-syria.

28. ரங்காசாரி,வ. (2018, மார்ச் 4). சிரியா எனும் நரகம்.
Retrieved from:
https://tamil.thehindu.com/opinion/columns/article22923420.ece

29 ரியோ, டி. (2018, மார்ச் 9). "அழியப் போகிறது சிரியா!" 2700 ஆண்டுகளுக்கு முந்தைய ஆருடனம் – ஆண்ட்டே பெர்னார்டோ.
Retrieved from: https://www.bbc.com/tamil/global-43337159

30. சிரியாவின் கவுட்டா பகுதியிலிருந்து வெளியேற கிளர்ச்சியா ளர்கள் ஒப்புதல். (2018, மார்ச் 22).
Retrieved from:
https://tamil/thehindu.com/world/article23319918.ece/amp

31. சிரியாவில் கவுட்டாவிலிருந்து வெளியேற கிளர்ச்சியாளர்கள் ஒப்புதல். (2018, மார்ச் 22)
Retrieved from:
https://news.lankasri.com/othercountries/03/174882



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. கிழக்கு கவுட்டா நகரில் இருந்து கூட்டம் கூட்டமாக வெளியேறும் மக்கள். (2018, மார்ச் 26).
Retrieved from: https://www.polimernews.com/view/4189-civilans-are-leaving-in-groups-from-eastren-ghouta-of-syria

33. மிக சக்தி வாய்ந்த ராணுவம் ரஷ்சியாவா, அமெரிக்காவா?. (2018, மார்ச் 29).
Retrieved from: https://www.bbc.com/tamil/global-43576065

34. போர் எச்சரிக்கை விடுத்த ரஷ்சியா: அமெரிக்கா, பிரான்சுடன், கூட்டு சேர்ந்த பிரித்தானியா. (2018, ஏப்ரல் 13)
Retrieved from: https://www.tamilwin.com/world/o1/179842

35. அமெரிக்காவின் தாக்குதல் சர்வதேச சட்டங்களை மீறிய செயல்: கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் : ரஷ்சியா எச்சரிக்கை. (2018, ஏப்ரல் 14).
Retrieved from:
https://www.dailythanthi.com/news/world2018/04/14161653/russia-warns-of-consequences-says-us-strikes-violate.vpf

36. சிரியா மீது அமெரிக்கக் கூட்டணிப் படைகள் தாக்குதல்: தலைநகரில் போராட்டம். (2018, ஏப்ரல் 14).
Retrieved from: https://www.bbc.com/tamil/global-43763494

37. பாத்திமா. (2018, ஏப்ரல் 14). சிரியா மீது அமெரிக்கா உட்பட மூன்று நாடுகள் உக்கிரத் தாக்குதல்: உச்சகட்ட பதற்றத்தில் உலகம்...
Retrieved from:
https://www.tamilwin.com/othercountries/03/176385

38. சிரியா மீது அமெரிக்கா தாக்குதல் எச்சரிக்கை விட்டுவிடுவாரா விளாதிமீர்புதின்?. (2018, ஏப்ரல் 14).
Retrieved from:
https://www.dinamani.com/world/2018/apr/14/-2899573.html

39. சிரியா மீது அமெரிக்க கூட்டுப்படை ஏவுகணைத் தாக்குதல். (2018, ஏப்ரல் 15).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Retrieved from:
https://www.dinamani.com/world/2018/apr/15-2900619html
40. சிரியாவைத் தாக்கும் 13 நாடுகள் எவை? ஏன். (2018, ஏப்ரல் 15). Retrieved from: https://www.bbc.com/tamil/global-43774890
41. அமெரிக்க தலைமையில் பிரிட்டன், பிரான்ஸ் நாடுகள் சிரியா மீது தாக்குதல். (2018, ஏப்ரல் 15).
Retrieved from: https://www.bbc.com/tamil/global-43765582
42. அனந்த பிரகாஷ். (2018, ஏப்ரல் 15). சிரியா மீதான தாக்குதலில் இந்தியா மௌனம் காப்பது ஏன்.
Retrieved from: www.bbc.com/tamil/global-43771153
43. மாலை மலர். (2018, ஏப்ரல் 15). அமெரிக்காவுக்கு எதிராக ஐ.நா சபையில் ரஷ்சியா கொண்டு வந்த தீர்மானம் தோல்வி.
Retrieved from: https://www.tamilwin.com/usa/01/179939
44. ஷாம்சுந்தர். (2018, ஏப்ரல் 15). சிரியாவின் மீது அமெரிக்கா மீண்டும் தாக்குதல்... மிஷன் சக்சஸ் என சந்தோஷமாக டிவிட் செய்த ட்ரம்ப்.
Retrieved from:
https://tamil.oneindia.com/news/international/trump-tweets-about-america-s-attack-on-syria-military-aribas-317270.html
45. சிரியாவில் ஆயுதங்களை மலை போல் குவிக்கும் ரஷ்சியா?. (2018, ஏப்ரல் 16).
Retrieved from:
https://www.tamilwin.com/othercountries/03/176534
46. மூன்றாம் உலகப்போர் மூளும் அபாயம்!. இந்தியாவின் நிலை என்ன?. (2018, ஏப்ரல் 16)
Retrieved from:
https://www.tamilwin.com/community/01/180015
47. சிரியா: ரசாயன தாக்குதல் நடந்த இடத்தில் "ஆதாரங்களை அழிக்கவில்லை" – ரஷ்சியா. (2018, ஏப்ரல் 16)
Retrieved from: https://www.bbc.com/tamil/global-43786636

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. சிரியா துருப்புக்களை திரும்ப பெறாமல் இருக்க டிரம்பை சம்மதிக்க வைத்தாரா மக்ரோங். (2018, ஏப்ரல் 16).
Retrieved from: https://www.bbc.com/tamil/global-43779480

49. சிரியாவை மீண்டும் தாக்கினால் உலகளாவிய குழப்பம் ஏற்படும் – ரஷ்சியா. (2018, ஏப்ரல் 16).
Retrieved from: https://www.polimernews.com/view/6439-If-Russia-attacks-again.there-will-be-global-confusion-Russia

50. சிரியா ரசாயன தாக்குதல்: சர்வதேச குழுவை ஆய்வு செய்ய அனுமதித்தது ரஷ்சியா. (2018, ஏப்ரல் 17).
Retrieved from: https://www.bbc.com/tamil/global-43792354

51. ஈரான் அணுத்திட்டம் குறித்து புதிய ஒப்பந்தம் : அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் பேச்சுவார்த்தை. (2018, ஏப்ரல் 25).
Retrieved from:
https://www.dailythanthi.com/news/world/2018/04/25151704/trump-and-macron-hint-at-new-nuclear-deal.vpf

51. அமெரிக்கா "வரலாற்று வருத்தத்தை சந்திக்கும்" : ஈரான் அதிபர் எச்சரிக்கை. (2018, மே 7).
Retrieved from: https://www.bbc.com/tamil/global-44026812

52. சிரியா போர்: குடும்பத்தோடு வெளியேறும் சிரியா போராளிகள். (2018, மே 8)
Retrieved from: https://www.bbc.com/tamil/global-44036135

53. சிரியா மண்ணில் ஈரான் செயல்பட அனுமதி : அதிபர் அல் அஸாத்துக்கு முடிவு கட்டுவோம் : இஸ்ரேல் எச்சரிக்கை. (2018, மே8).
Retrieved from:
https://www.thinaboomi.com/2018/05/08/90288.html

54

. ஐரோப்பிய நாடுகள் உத்தரவாதம் அளிக்காவிட்டால் அணு ஆயுத ஒப்பந்தம் ரத்து: ஈரான் தலைவர் அலி கமேனி அதிரடி. (2018, மே 9).
Retrieved from:
https://www.dinamani.com/world/2018/may/09/291648/html



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. பிரசன்னா, வி.கே. (2018, மே9). ஈரான் அணு ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறுகிறது: டிரம்ப் அறிவிப்பு.
Retrieved from:
https://goodreturns.in/news/2018/05/09/donald-trump-says-us-will-no-longer-abide-iran-deal-011322html

56. பிரசன்னா, வி.கே. (2018, மே9). ஈரான் அணு ஒப்பந்தம் என்றால் என்ன? அமெரிக்கா வெளியேறியது ஏன்?.
Retrieved from:
https://tamil.goodreturns.in/news/2018/05/09/whatis-iran-nuclear-deal-why-america-left/articlecontent-pf57334-011323.html

57. சுஹாசினி ஹைதர். (2018, மே 9). ஈரான் அணு ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகுவதால் இந்தியாவில் பெட்ரோல் டீசல் விலை உயரும்? – 5 தாக்கங்கள்.
Retrieved from:
https://tamil/thehindu.com/india/article/23821949.ece

58. சிரியா: ஈரானிய நிலைகள் மீது இஸ்ரேல் தாக்குதல். (2018, மே 10).
Retrieved from: https://www.bbc.com/tamil/global-44068977

59. இஸ்ரேல் மீது ஈரான் முதல் தடவை ஏவுகணை தாக்குதல் – மத்திய கிழக்கில் நெருக்கடி தீவிரம். (2018, மே 10).
Retrieved from:
https://www.tamilwin.com/middleeastcountries/01/182262

60. சிரியாவின் இராணுவ கட்டமைப்பில் இஸ்ரேல் தாக்குதல்: ஈரான் கண்டனம். (2018, மே 11)
Retrieved from: https://www.bbc.com/tamil/global-44090017

61. இஸ்ரேலும், ஈரானும், ஏன் சிரியாவில் சண்டையிடுகின்றன? 300 வார்த்தைகளில். (2018, மே14).
Retrieved from: https://www.bbc.com/tamil/global-44100213

62. கலையரசன். (2018, மே 14). ஈரான் அணுசக்தி ஒப்பந்த முறிவும் இஸ்ரேலின் போர் வெறியும், வினவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Retrieved from: https://www.vinavu.com/2018/05/14/trump-broken-nuclear-deal-with-iran-how-it-affects-world-countries

63. ஜெரூசலேமில் அமெரிக்க தூதரகம் : இஸ்ரேல் ஆதரவும் பாலஸ்தீனியர்கள் எதிர்ப்பும். (2018, மே 14).
Retrieved from:
https://www.puthiyalaimurai.com/news/world/45233-these-are-the-countries-partcipating-in-israel-s-celebrations-of-u-s-embassy-move-html

64. "இஸ்ரேலின் தலைநகர் ஜெரூசலேம் தான்" – தூதரக தொடக்க விழாவில் டிரம்ப். (2018, மே 14).
Retrieved from: https://www.bbc.com/tamil/india-44113718

65. ஜெரூசலேம் : உலகின் சர்ச்சை மிகுந்த பிராந்தியமாக இருப்பது ஏன்?. (2018, மே 15)
Retrieved from: https://www.bbc.com/tamil/global-44116496

66. காஸா: அமெரிக்க தூதரக திறப்பிற்கு முன்னர் வெடித்த மோதல்கள் : 55 பேர் பலி. (2018, மே 15).
Retrieved from: https://www.bbc.com/tamil/global-44109598

67. காசா எல்லையில் இஸ்ரேல் கொடூரத் தாக்குதல் – உலக நாடுகள் கண்டனம். (2018, மே 16).
Retrieved from:
https://www.vikatan.com/news/world/125140-59-people-killed-ingaza-border-byisraeli-troops.html

68. ஈரான் மீது வரலாறு காணாத பொருளாதார தடை: அமெரிக்கா சூளுரை. (2018, மே 23).
Retrieved from:
https://www.dinamani.com/world/2018/may/23/2924940html

69. கிம் பதவியேற்ற பின் முதன் முதலாக வட கொரியா செல்லும் வெளிநாட்டு அதிபர். (2018, யூன் 04).
Retrieved from:
https://www.vikatan.com/news/tamilnadu/126720-syrian-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

president-to-meet-kim-in-n-korea.html

70. ஜி– 7 உச்சி மாநாட்டில் டிரம்ப் தனிமைப்படுத்தப்பட்டார். (2018, ஜீன் 10).
Retrieved from:
https://www.maalainalar.com/news/world/2018/06/10010641/1169067/G7-trump-isolated-over-trade-and-russia-on-firstday.vpf

71. ஜி–7 உச்சி மாநாட்டில் ட்ரம்ப் கோபத்தோடு வெளியேறினார். ஜஸ்டின் மீது ட்ரம்ப் பாய்ச்சல். (2018, யூன் 11).
Retrieved from: https://namathu.blogspot.com/2018/06/9-7tramphtml

72. குழப்பத்துடன் முடிந்த ஜி – 7 மாநாட்டில் கூட்டு அறிக்கையை கைவிட்டார் டிரம்ப். (2018, ஜீன் 11).
Retrieved from: https://www.thinakaran.lk/2018/06/11

73. டிரம்பின் வரிவிதிப்புக்கு பதிலடி – அமெரிக்க பொருள்களுக்கு கூடுதல் வரி விதித்த சீனா. (2018, ஜீன் 16).
Retrieved from:
https://www.maalaimalar.com/news/world/2018/06/16151828/1170547/china-slaps-additional-tariffs-on-USD-50-bn-worth-vpf

74. Luxsana, B. (2017). "America – Russia International Power Rivalry and Syrian Issues A view" (in Tamil). Jaffna: University of Jaffna. B.A (Honors) dissertation. ix, 164, xxiv p. (Unpublished).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படங்கள்**

➢ படம் – 01 (பக் : 01)

Retrieved from:

https://www.123rf.com/photo_47962646_stock-vector-middle-east-map-with-flags.html

➢ படம் – 02 (பக் : 09)

Retrieved from:

**https://www.local10.com/news/international/syrian-forces-retake-eastern-ghouta-russia-says**

➢ படம் – 03 (பக் : 11)

Retrieved from:

http://lakmus4.rssing.com/chan-3714552/all_p202.html

➢ படம் – 04 (பக் : 15)

Retrieved from:

https://kathmandutribune.com/human-trafficking-ring-smuggling-nepalis-into-gulf-countries-goes-unchecked/ -

➢ படம் – 05 (பக் : 21)

Retrieved from:

https://thestateofthecentury.wordpress.com20121210russia-is-ending-assads-reign-why-an-intervention-now-appears-likelytartous-syria-map-2 -

➢ படம் – 06 (பக் : 22)

Retrieved from:

https://www.theguardian.com/world/2013/may/30/assad-russian-s300-missiles-syria

➢ படம் – 07 (பக் : 29)

Retrieved from:

https://www.britannica.com/place/Jerusalem



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢படம் – 08 (பக் : 31)

Retrieved from:

httpswww.bbc.comnewsworld-middle-east-14724842

➢படம் – 09 (பக் : 36)

Retrieved from:

https://middleeastinfo.wordpress.com/2011/12/29/strait-of-hormuz-iran-playing-with-fire-around-the-strategic-bottleneck / str ait of hor muz/

➢படம் – 10 (பக் : 41)

Retrieved from:

http://www.joshualandis.com/blog/many-christians-head-for-tartus/

➢படம் – 11 (பக் : 51)

Retrieved from:

https://dailybrief.oxan.com/Analysis/GI238980/Iraq-Kurdistan-2018-elections-preliminary-results

➢படம் – 12 (பக் : 54)

Retrieved from:

httpswarsclerotic.com20150302netanyahu-tries-to-head-off-irans-machinations-after-obama-empowers-tehran-as-favored-mid-east-ally



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ISBN
9 786249 509108

Mathi Colours -Nallur 021 2229285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org